மதியூகி மச்சான்

[ஓர் அரசியல் கோமாளிக்கூத்து]

கோரா. சுந்தரம், எம்.ஏ., எம்.லிட்.

சிவகாமி பதிப்பகம்
அண்ணாமலைநகர்
தமிழ்நாடு

மதியூகி மச்சான்

[ஓர் அரசியல் கோமாளிக்கூத்து]

கோரா. சுந்தரம், எம்.ஏ., எம்.லிட்.

சிவகாமி பதிப்பகம்
அண்ணுமலைநகர்
தமிழ்நாடு

நவம்பர், 1969

ஆசிரியரின் நவீன நாடகங்கள்

மலரும் மதுவும் ரூ. 3—50
[ஒரு வரலாற்று நாடகம்]

மதியூகி மச்சான் ரூ. 3—50
[ஓர் அரசியல் கோமாளிக்கூத்து]

அச்சில்......

துன்ப நாடகம்
[ஒரு நாடக இலக்கணம்]

பெண்டிர் ஆட்சியும் வீழ்ச்சியும்
[ஒரு சமுதாய விளக்கம்]

கானல்வெளி
[ஓர் அடிமனத்தின் நாடகம்]

ஒரே குடும்பம்

திருமாவளவன்

உள்ளும் புறமும்
[ஓர் அரசியல் வாழ்வு]

சீர்திருத்தப் பொறுமை

காதல் மன்னன்
[ஒரு நையாண்டி நாடகம்]

சிவகாமி அச்சகம்
அண்ணாமலைநகர்

91/4

நன்றி

பேரன்புடைய வாசக அன்பர்களே,

என்னுடைய 'மலரும் மதுவும்' என்ற வரலாற்று நாடகத்திற்குப் பெரும் ஆதரவு தந்து ஊக்குவித்தமைக்கு எனது உளமார்ந்த நன்றி.

நாடகம் எழுதும் முறைகள் - நாடகபாணிகள்— பல. அவை ஒவ்வொன்றையும் கையாண்டு பல நாடகங்கள் எழுதியுள்ளேன். அவற்றில் 'மலரும் மதுவும்' ஒன்று; இந்த மதியூகி மச்சான் ஒன்று. மற்றைய நாடகங்களை நான் விரைவில் வெளியிடுவதென்பது தங்கள் ஆதரவில்தான் இருக்கிறது.

நாடகபாணி முக்கியமே. அதனால் நாடகபாணியைக் கொண்டே நாடகம் உருவாவது என்பது காரிகை கற்று கவிபாடுவதைத்தான் ஒக்கும். நாடகக் கரு உருப்பெற்று அதுவே நாடகப் பாணியை முடிவுசெய்ய வேண்டும். இந்த முறையிலேயே என்னுடைய நாடகங்கள் அமைந்துள்ளனவாக நம்புகிறேன். முடிவு தங்களதே.

'மலரும் மதுவும்' நாடகத்தைப் போலவே இந்த நாடகத்தையும் தாங்கள் வரவேற்றுத் தங்கள் கருத்தினைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

தங்கள் அன்பன்,

'கோராசு'

நாடக உறுப்பினர்

*

மாரன்	—	நாடகத்தலைவன் (வயது 25)
மன்னார்குடி அருணாசலம்	—	தலைவனின் தந்தை (58–60)
சூரியன்	—	ஷெயார் கையாள் (20)
பூவை	—	நாடகத்தலைவி (18)
நல்லபெருமாள்	—	தலைவியின் சிற்றப்பன் (45-50)
தங்கமணி	—	பூவையை மணக்கத் துடிப்பவன் (22)
மாரிசாமி	—	தங்கமணியின் நண்பன் (23)

மற்றும்

பெரியவர்கள், வாலிபர்கள், பெண்கள்,
பையன்கள், வேலையாட்கள்.

நாடகம் நிகழும் இடம் — தமிழ்நாடு

,, ,, காலம் — நிகழ்காலம்

திரை 1

மாரன் ஒரு தோல் பையுடன் ஓடி வருகிருன். நின்று திரும்பிப் பார்த்துவிட்டுத் துள்ளிக்குதித்து ஓடி மறைகிருன்.

மாரனுடைய தந்தை மன்னுர்குடி அருணுசலம் (குடுமி, ஜிப்பா, பஞ்சகச்சம், கண்ணுடி, கைத்தடி சகிதம்) இறைக்க இறைக்க ஓடி வருகிருர்.

அருணுசலம்: (கண்ணுடியைத் தூக்கிப் பார்த்து) அட படுபாவி ராஸ்கேல்! டிமிக்கி கொடுத்துட்டியே!... இம்... எங்கே ஓடி ஒளிஞ்சிருப்பான்? (சுற்றும் முற்றும் பார்க்கிருர்) எலே பயலே! நீ ஒளியிரத்திலே மன்னுதி மன்னன்டா! மன்னுதி மன்னன்! அந்தச் சின்ன வயசிலே நீ ஒருதடவை ஓடி ஒளிஞ்சிகிட்டே! எனக்கு நல்லா ஞாபகம் இருக்குதுடா, இருக்குது! நான் உன்னைத் தேடாத இடமில்லே. கடைசியிலே என்னடான்னு உன் அம்மா முந்தாணியிலேயே ஒளிஞ்சிகிட்டு இருந்தே... அன்னையிலே இருந்து நீ ஒளியாத நாள் ஏது!...இம்... இப்போ எதிலே ஒளிஞ்சியோ! உன்னைத் தேட இந்த மன்னுர்குடி அருணுசலம் மனுசனில்லேடா! மனுசனில்லே! நீ எக்கேடா

வது கெட்டுத்தொலே. எனக்கு மகனே பிறக்கலே, நீ யாரோன்னு நெனேச்சிக்கிறேன்.

(அவருடைய கையாள், சூரியன் - இளே ஞன் - நாகரீகமானவன் - ஒரு பெரிய தோல் பெட்டியைத் தலேயில் வைத்துக் கொண்டு, திரும்பிப் பார்த்துக்கொண்டே ஓடிவந்து அருணுசலத்தின்மேல் இடித்து விழுகிருன். அவரும் விழுந்து விடுகிருர்.)

அருணுசலம்: (ஆத்திரத்துடன்) அட! படுபாவிப் பசங்களா! எவன்டா அவன் மண்ணுப்போறவன்? (கண்ணுடியைத் தேடுகிருர். அது அகப்பட வில்லே. திரும்பி உரக்கக் கூப்பிடுகிருர்.) ஏய் சூரியா! எலே தடிப்பயலே சூரியா! ஏது பெரிய கெழப்பசங்களா இருக்கிருனுவோ!

சூரியன்: (வலியுடன் உடம்பை வளேத்துக்கொண்டே அமைதியாக) இதோ இருக்கிறேன் முதலாளி!

அருணுசலம்: (ஆத்திரத்துடன்) இருக்கிறியா? போய்த் தொலேயிறதுதானே!... இம்... நீங்க எங்கே போகப் போறீங்க! என்னே ஒரேயடியா அனுப்பிப் புட்டுதானே நீங்க தொலேயுவீங்க! எமதூதன்டா! எமதூதன்! ஏன்டா தடி ராஸ்கேல், கண்ணேக் கொண்டு போய் நீ எங்கே வச்சித் தொலேச்சே? நான் தான் கண்ணுடியிலே வச்சிப்புட்டு தவிக் கிறேன்.

சூரியன்: இல்லேங்க!... ஒரு எருமைமாடு என் பின்னு லேயே ஓடிவந்தது.

அருணசலம்: உன் பின்னலே எருமைமாடு வராம, பசுமாடா ஓடிவரும்?

சூரியன்: என் பேரு சூரியன் முதலாளி!

அருணசலம்: எருமை மாட்டுக்கு உன் பேரா தெரியும்? உருவந்தானே தெரியும்!... அந்தக் கண்ணுடியை எடுடா எருமை மாட்டுப் பயலே!

சூரியன்: (அதை எடுத்து ஆச்சரியத்துடன்) அட! உடையவே இல்லையே!... இந்தாங்க.

அருணசலம்: (அதை வாங்கிப் போட்டுக்கொண்டு) ஏன்டா, அது உடையனுமுன்னு வேண்டிக் கிட்டே இருந்தியா?

சூரியன்: இல்லேங்க.

அருணசலம்: வேண்டிக்கிட்டாலும் வேண்டிக்கு வேடா... வேண்டிக்குவே! எப்படி இவனைச் சிலோனுக்குப் போகவிடாமவச்சி, ஊரைச் சுற்றிச் சுற்றி வருவதுன்னுதானே நெனைச்சிக்கிட்டு இருக் கீங்க... (பரிவுடன்) ஏன்டா சூரியா!

சூரியன்: (பரிவுடன்) முதலாளி!

அருணசலம்: இப்படி வா!... இந்தப்பயல் பண்ணு றது உனக்கே நல்லா இருக்குதாடா?... இல்லே கேட்கிறேன், உனக்கே நல்லா இருக்குதா?

சூரியன்: எந்தப் பயலுங்க?

அருணுசலம்: என் புத்திரசிகாமணி மாரன் பயல் தான்! பத்து வருஷம் தவம் கெடந்து பெத்த புள்ளே! தரித்திரம்!

சூரியன்: ஓகோ! அதைச் சொல்றீங்களா? இல்லேங்க.

அருணுசலம்: பொறந்த சொந்தநாடாச்சேன்னுதானே இங்கே காலேஜியிலே பயலேச் சேத்தேன்! மாதா மாதம் – வருஷத்துக்குப் பன்னிரெண்டு மாதமும் தான் – நூறு இரநூறுன்னு பணத்தைக் கத்தை கத்தையா, நோட்டு நோட்டா அனுப்பினேன்?

சூரியன்: அத்தனையும் உண்மைங்க.

அருணுசலம்: இந்தப் பயல் இந்த ரெண்டு வருஷமா என்ன பண்ணிக்கிட்டு இருந்திருக்கிருன்?

சூரியன்: செப்டம்பர் – ஏப்ரல்; ஏப்ரல் – செப்டம்பர் இப்படி பெயில்ஆயிக்கிட்டே இருந்திருக்கிருருங்க.

அருணுசலம்: இல்லே!... அவன்தான் பெயிலானுனே... என்கிட்டே ஒரு வார்த்தை 'அப்பா! நான் பெயிலாயிகிட்டே வர்ரேன்'னு ஒரே ஒரு வார்த்தை சொன்னுனு?

சூரியன்: சொன்னுல் பாஸ்போட வைச்சிப்புடுவீங்களா?

அருணுசலம்: எலே! நான் ஏன்டா பாஸ் போட வைக்கணும்? அப்புறம் எவனும் அவனேப் பெயில் போடாமல் பார்த்துக்குவேன். அவ்வளவு தான்!

சூரியன்: (ஆச்சரியமாக) எப்படிங்க?

அருணசலம்: பயலைத் திரும்பத் திரும்பப் பரிட்சை எழுதவிட்டாதானே, ஈவு இரக்கம் இல்லாத பசங்கள் திரும்பத் திரும்பப் பெயில் போடுவான்க! பயல் பரிட்சையே எழுதுலே! இவனுங்க என்ன பண்ணுவான்க?!

சூரியன்: (மெள்ள) பெயில்போட வேற ஆளே கெடைக்காம ஏமாந்து போயிடுவாங்க!

அருணசலம்: ஏதோ சும்மா எல்லோரும் சதா பாஸ் பண்ணின இன்ட்ரஸ்டா இருக்காதேன்னு ஒரு தரம் பெயில் போடலாம்; ரெண்டு தரம் போடலாம். சும்மா சும்மா பெயிலுன்னு போட்டா என்ன அர்த்தம்? அதுக்கு என் பிள்ளைதான் கெடைச்சான? பணக்காரப் பிள்ளைகளென்றல் எத்தனைத் தரம் வேண்டுமானலும் பெயில் போடலாம், படிச்சிகிட்டே இருப்பானுவோன்னு நெனைச்சிகிட்டானுவோ!... இல்லன்ன ஏன் பணக்காரப் புள்ளைங்களா பெயிலாவுது?... இல்லே! நானே கேட்கிறேன்!... ஏன்டா சூரியா...?

சூரியன்: முதலாளி!

அருணசலம்: இதுவரை நடந்தது நடந்து போகட்டும் மன்னிப்போம். இனியாவது இவன் என்னேடை சிலோனுக்கு வந்து நம்ம கடையிலே உட்கார்ந்திருக்கலாமல்லவா? ... நான் இந்த வயசிலேயும் உன்னைப்போன்ற போக்கிரிப்பசங்களை வச்சிக்கிட்டு என்ன பாடுபடுகிறேன்?

சூரியன்: உண்மைங்க!

அருணாசலம்: என்னடா உண்மை?

சூரியன்: உங்களுக்கு வயசாகிவிட்டது என்பது.

அருணாசலம்: ஆமாம்! ... என் சோசியம் உன் கையிலேதானே இருக்குது!

சூரியன்: இல்லீங்க! (மெள்ள) உங்கள் முகத்திலே இருக்குது.

அருணாசலம்: (திரும்பி சுற்றும் முற்றும் பார்த்து) எவ்வளவு சிரமப்பட்டுப் பயலைக் கிளப்பி இழுத்துக் கொண்டு வந்தோம்!...... இப்படிப் பிய்த்துக் கொண்டு ஓடிவிட்டானே!...இந்த இடம் வந்ததும் தானே ஆளைக்காணோம்? (மாரன் எட்டிப் பார்த்துத் துள்ளி ஓடி மறைகிறான்) ஏய் சூரியா! ஓடி வா!... அதோ பயல் ஓடுகிறான்! ஓடிவா! (ஓடிக் கொண்டே) பெட்டி பத்திரம்! ஓடிவா! (ஓடிமறைகிறார்)

சூரியன்: எதை மறந்தாலும் பெட்டியை மறக்காதீங்க! (போய் மறைகிறான்)

காட்சித் திருப்பம்

(மாரன் வேகமாக ஓடிவந்து மறைகிறான். அருணாசலம் களைப்போடு ஓடி வந்து, சுற்றும் முற்றும் பார்க்கிறார்.)

அருணாசலம்: (உதட்டைப் பிதுக்கி) இகூம்...இனி நம்மால் நடக்காது! ரேஸ் ஓடுகிற வயசா இது! ...

போய்த்தொலே! உனக்கு இப்படிப் பெயிலாகிச் சுத்துரத்திலே என்னதான் இன்டரஸ்டு இருக்குமோ! ... (வலியுடன்) அப்பா ... அம்மா ... என் கதையைக் கேட்டால் நாலுபேர் மூக்கால் சிரிப்பான்! எட்டுபேர் நாக்கால் சிரிப்பான்! பதினறு பேர் நாக்காலும் மூக்காலும் சிரிப்பான். (திரும்பி) இந்தப் பயல் ஓடிவந்து இடித்துத் தொலேக்கப் போகிருன் ... (உரக்க) ஏய் சூரியா! ... எலே சூரியா! (சூரியன் வருகிருன்.) ஏன்டா ஓடிவந்து தொலேவது தானே!

சூரியன் : பெட்டியைத் தூக்கிக்கொண்டு எப்படி ஓடி வருவதுங்க?

அருஞசலம் : நான் பெட்டியைத் தூக்கிக் கொள்ளுகிறேன்! நீ ஓடேன்!

சூரியன் : சரிங்க ... ... !

அருஞசலம் : ச்சே!... பேசாதே! ... அப்பாடா!... இந்த ஊரையே ஒரு சுத்துச்சுத்த வச்சிட்டானே! ....சுத்தவச்சவன் ஒரு கோயிலேத்தான் சுத்தவச்சாஞ? .... புண்ணியமாகவாவது இருக்கும். ஊருன்ஞ கோயில் இல்லாமலா இருக்கும்! (இடுப்பில் செருகியிருந்த கடிகாரத்தை எடுத்துப் பார்த்து) இனிபயல் அகப்படமாட்டான். மணியும் ஏறக்குறைய ஆகிவிட்டது. இப்பவே கிளம்பினல் தான் கப்பலேப்பிடிக்கலாம்.... எலே சந்திரா!

சூரியன் : முதலாளி!

அருணாசலம் : நேரமாயிட்டுது. நான் இனி இங்கே தங்க முடியாது. நான் கிளம்பி போகிறேன். நீ இருந்து எப்படியாவது பயலைப் பிடித்து இழுத்துக் கொண்டு அடுத்த கப்பலுக்கு வந்து சேரு.

சூரியன் : சரிங்க!

அருணாசலம் : (சில தாள்களுடன், பணத்தை எண்ணிக் கொடுத்து) இந்தா பிடி! பணமெல்லாம்.... இதை அவனிடம் காட்டாதே!... தெரியுதா?

சூரியன் : தெரியுதுங்க.

அருணாசலம்: எவ்வளவு இருந்தாலும் அவனுக்குக் காணாது. இந்தப் பசங்களுக்கு எது தெரியாத போனாலும் செலவுபண்ணத் தெரியும்!......ஏய்!

சூரியன் : முதலாளி!

அருணாசலம் : அந்தப் பயல்கிட்டே அதிகம் பேசாதே!......ஏதோ சண்டை போட்டுகிட்டவன்போல நடந்துக்க. ரெண்டே நொடியிலே எல்லோரையும் அமுக்கி பாக்கெட்டிலே போட்டுக்கொண்டுவிடுவான். அதுக்குத்தானே நானே அவனுகிட்டே அதிகம் பேச்சி வைச்சிக்கிறதில்லை! பெட்டியைக் கொண்டா !

சூரியன் : இந்தாங்க !

அருணாசலம் : நீ மகா கெட்டிக்காரன். எப்படியாவது பயலை ஊருக்குக் கொண்டுவந்துவிடு......

உன் சம்பளத்திலே ரெண்டு மூணு ஏத்திப் போடு
றேன்.

சூரியன் : அதையெல்லாம் நான் பார்த்துக்கிறேன்க. நீங்க நிம்மதியா போங்க.

அருணுசலம் : சரி...... (போகிருர்) (திரும்பிவந்து) ஏய் !

சூரியன்: என்ன முதலாளி!

அருணுசலம் : அப்படி அவனைக் கொண்டுவர முடியயவில்லை, நீ அடுத்த கப்பலுக்கு வந்து சேர்... இரண்டு மாதம் பணம் அனுப்பாமல் இருந்தால் கழுதை கடலிலே விழுந்து ஓடிவருது...ச...ரி...... நான் வரட்டுமா? (போகிருர்)

சூரியன் : சரிங்க!

அருணுசலம் : (திரும்பிவந்து) ஏய் சூரியா !

சூரியன் : என்னங்க !

அருணுசலம் : நான் கப்பலைவிட்டு இறங்கியதும் உன் கடிதாசியைப் பார்க்கணும், தெரியுதா? ......கிராமத்துக்குப் போகாதீங்க. அங்கே வீட்டிலே இருக்கிறது எதையாவது வித்து தொலைச்சிபுடப் போகிருன்...இம்...நான் இனி எப்படித் தூங்கப் போகிறேனே? போ!... பணத்தைச் சேக்கத்தான் தூக்கம் இல்லாமல் திரிஞ்சோமே! பணம் சேர்ந்த பிறகாவது தூங்கமுடியுதா!.....இம்.....சரி.....எனக்கு நாழியாவுது.

சூரியன் : ஆமாங்க!

அருணுசலம் : நான் சொன்னதையெல்லாம் ஞாபகமா எழுதியாவது வச்சிக்கே.

சூரியன் : வேட்டியிலே முடிஞ்சி வைச்சிக்கிறேன்க. (வேட்டியின் ஒவ்வொரு மூலேயாக எடுத்து முடிந்து) பணம் பத்திரம்,... அடுத்த கப்பலுக்குத் தம்பி யோட வரணும்....கிராமத்துக்குப் போகக் கூடாது...தபால் போடணும்...சரிதானுங்களா?

அருணுசலம் : சரி...நான் வரட்டுமா?

சூரியன்: சரிங்க (அவர் போகிருர். சூரியன் கையை ஆட்டி) பை! பை!...ஆள் திரும்பிவரப் போகிருர். ஓடிவிடுவோம். (மறுபக்கமாக ஓடுகிருன். அருணு சலம் 'ஏய் சூரியா' என்று கூப்பிட்டுக்கொண்டே திரும்பிவந்து ஆளேக் காணுமல் 'சரிதான்' என்று தலேயை ஆட்டிக் கொண்டே திரும்பிப் போகிருர்)

திரை

திரை 2

பூவையின் தனியறை. அந்தி மங்கிய நேரம். ஒரு மூலையில் ஆடியின் முன் அமர்ந்து பூவை அலங்காரம் செய்து கொள்ளுவதில் முனைந்திருக்கிருள்.

மாரன் அவசர அவசரமாகப் பூவையைக் கவனியாமல், கம்பியற்ற சன்னல் வழி ஏறி உள்ளே குதித்துத் தரையோடு தரையாகக் குனிந்து உட்கார்ந்து கொள்ளுகிருன். சிறிதுநேரம் சென்று பையுடன் எழுந்து சன்னல் வழியாக எட்டிப் பார்க்கிருன்; ஆறுதலாக ஒரு பெருமூச்சு விடுகிருன்.

பூவை அலங்காரத்தை முடித்துக் கொண்டு உற்சாகத்துடன் ஒரு சினிமாப் பாட்டின் முதலடியை ரசித்துப் பாடிக் கொண்டே எழுந்து திரும்புகிருள்.

மாரன் திடுக்கிட்டுத் திரும்புகிருன். அவளும் அவனைக்கண்டு திடுக்கிடுகிருள்.

மாரனுடைய கைகால்கள் உதறுகின்றன; அப்படியே பைசகிதம் அவள்முன் நெடுங்கிடையாக விழுகிருன். அவள் மிகவும் அலட்சியமாக இருப்பதுபோல் நடிக்கிருள்; தன் காலடியில் விழுந்த தோல்பையை எடுத்து அதில்உள்ள பெயரைப் பார்த்து மலைத்து நிற்கிருள்.

மாரன் : (பொறுமை இழந்து) மேடம்! நான் எழுந்திருக்கலாமா?

பூவை : ஓகோ!.... இப்படியே ஒருபோட்டோ எடுத்துக் கொள்ளத்தான் ஆசை. வசதி இல்லை. அது போகட்டும் எழுந்திரியுங்கள். (மாரன் எழுந்து உடைகளைத் தட்டிச் சீர்செய்து கொள்ளுகிறான்.)

பூவை : ஏன் இப்படிக் கீழே தரையில் விழுகிறீர்கள்?

மாரன் : (எரிச்சலுடன்) இம்... நீங்கள் உங்கள் மலர்க் கரங்களால் தூக்கிவிடுவீர்கள் என்றுதான்!

பூவை : வேண்டாம்! இப்போதுதான் கைகளுக்கெல்லாம் பௌடர் போட்டேன். அலைந்து போகும்.

மாரன் : சரிதான்!

பூவை : (சாத்தப்பட்டிருக்கும் கதவைப் பார்த்து ஆச்சரியத்துடன்) கதவு தாள்போட்டபடியே இருக்கிறதே! நீங்கள் எப்படி உள்ளே வந்தீர்கள்?

மாரன் : அதற்குத்தான் கம்பியில்லாத சன்னல் வைத்துக் கட்டியிருக்கிறீர்களே!

பூவை : இப்படி ஒரு பெண்பிள்ளை அறையில் சன்னலால் ஏறிக்குதித்து வந்துபுகுந்து கொண்டீர்களே! நாலுபேர் தப்பாக நினைக்க மாட்டார்களா?

மாரன் : என்னைப்பற்றிதானே? நினைத்தாப் போகிறார்களேன்.

பூவை : என்னைப்பற்றியுந்தான்!

மாரன் : (அலட்சியமாக) நல்லதாகப் போய்விட்டது!

பூவை : (மிரட்டலுடன்) என்ன சொன்னீர்கள்?

மாரன் : (பயந்து) ஆமாம்!.... ஆமாம்! நான் என்ன சொன்னேன்?

பூவை : மண்ணுங்கட்டி யென்று சொன்னீர்கள்!

மாரன் : அடபாவமே! அப்படி உங்களைப் பார்த்துச் சொல்லக் கூடாதே! தப்பு! தாடையில் போட்டுக் கொள்ளட்டுமா?

பூவை : வேண்டாம்.

மாரன் : சரிதான்.

பூவை : நீங்கள் ரொம்ப சிரிப்பாப் பேசுகிறீர்களே!

மாரன் : ஆமாம் மேடம்! என் அம்மாகூடச் சொல்லு வார்கள். நான் பிறக்கும்போதே சிரித்துக் கொண்டே பிறந்தேனும்! அம்மாதான் அழுதாங் களாம்!

பூவை : அப்படிங்களா! அட! ஆச்சரியமாக இருக் குதே! (சோகத்துடன்) எனக்கு அம்மாவே இல்லை.

மாரன் : இது ரொம்ப ரொம்ப ஆச்சரியமாக இருக் குதே! அதுதான் வானதேவதை போல் இருக் கிறீர்கள்!

பூவை : நான் குழந்தையாக இருக்கும்போதே அம்மா செத்துப் போனுர்களாம்.

மாரன் : ஓகோ! அதைச் சொல்லுகிறீர்களா! உங்களைப் பெற்றதும்தானே? இருக்கும்!

பூவை : நான் பிறக்கும்போது எப்படிப் பிறந்தேனோ! எனக்குத் தெரியாது.

மாரன் : நீங்கள் பிறக்கும்போதா மேடம், பேசிக் கொண்டே பிறந்தீர்கள் மேடம்!

பூவை : அப்படியா?... ... அது உங்களுக்கு எப்படித் தெரியும்?

மாரன் : (விழிக்கிருன்) அது.... அது... ஒரு யூகந் தான் மேடம்.

பூவை : இருந்தாலும் இருக்கும். எனக்குப் பேசிக் கொண்டே இருப்பதென்ருல் ரொம்பப் பிடிக்கும். இது ஆச்சரியமாக இருக்குதில்லே?

மாரன் : இருக்குதே!

பூவை : எனக்கு ஆச்சரியங்கள்தான் ரொம்பப் பிடிக்கும்!

மாரன் : அப்படிங்களா! ஆச்சரியமா இருக்குதே! ... ... நான் கொஞ்சம் உட்கார்ந்து பேசட்டுமா மேடம்? காலே வலிக்கிறது.

பூவை : ஊகூம் ..... கூடாது. யாரேனும் பார்த்தால் தப்பாக நினைப்பார்கள்.

மாரன் : அதுவும் சரிதான் ... (அசடுவழிய) சும்மா சொன்னேன்! காலே வலிக்கவில்லே.

பூவை : (அவனுடைய பையைக்காட்டி) இது உங்கள் பைதானே?

மாரன் : (பயந்து) அய்யய்யோ! நான் திருடனில்லே மேடம். அது என்னுடைய பைதான் மேடம். வேண்டுமானுல் உங்கள் தலேயில் அடித்துச் சத்தியம் செய்கிறேன் மேடம்!

பூவை : இல்லே! நீங்கள்தானே மாரன், எம். ஏ, என்று தெரிந்து கொள்ளக் கேட்டேன்.

மாரன் : இல்லே! நான் மாரன் எம். ஏ. இல்லே மேடம் எம். ஏ. மாரன்.

பூவை : என்னே ஏய்க்கப் பார்க்கிறீர்களே!

மாரன் : அப்படியா மேடம்! எனக்குத் தெரியாது!

பூவை : உங்களேப் பார்க்க எனக்கு ரொம்பப் பெருமையாக இருக்கிறது.

மாரன் : என்னேடு பேச...... ?

பூவை : ரொம்ப இன்டரஸ்டாக இருக்குது.

மாரன் : போச்சிடா! ... ... அங்கேதானே ஆபத்தே உருவாகுது.

பூவை : கொஞ்ச நாட்களுக்கு முன்னுடி உங்களுக்கு ஏதோ ஒரு பட்டம் கொடுத்தார்கள், இல்லேயா?

மாரன் : (விழித்து மெள்ள) அய்யய்யோ! பாவமே! ... ... பட்டமா! ... ... (உரக்க) ஓகோ அதைச்

சொல்லுகிறீர்களா? ... (இளித்து) பக்கத்து வீட்டுப் பையன் ஒரு பட்டான் வைத்திருந்தான். நன்ருக இருந்தது. நானே திருடிக்கொண்டு விட்டேன். அவனுக்குக் கொடுக்கவில்லை மேடம். ... அது எப்படி உங்களுக்குத் தெரிந்தது?

பூவை: என்னுகிட்டே விளையாடாதீர்கள்.

மாரன்: இல்லை!

பூவை: நான் நிறைய கட்சிப் பத்திரிக்கைகள் படிப்பவள். எனக்கு, பிறகு பொல்லாத கோபம்வரும்.

மாரன்: அய்யய்யோ! ... வேண்டாமே! ... நீங்கள் எந்தப் பட்டத்தைச் சொல்லுகிறீர்கள்?

பூவை: பாவலர், நாவலர், காவலர், பூவலர்—என்று எல்லோருக்கும் கொடுக்கிருர்களே. அது போல் ஒன்று உங்களுக்குக் கொடுக்கவில்லை?

மாரன்: ஓகோ அதைச் சொல்லுகிறீர்களா! ... ... ஆமாம்! ...(மெள்ள) எந்தப் பட்டத்தைக்கொடுத்தார்கள்? ... இம் ... (உரக்க) ஓ! 'மதியூகி மாரன்' என்று கொடுத்தார்களே அதைச் சொல்லுகிறீர்களா? ... இம்...எனக்கு எத்தனேயோ பட்டங்கள்! எது ஞாபகத்திற்கு வந்து தொலைகிறது!

பூவை: (மகிழ்ச்சியுடன்) ஆமாம்!... அதுவாகத்தான் இருக்கும். இப்போதெல்லாம் உங்கள் பெயர் ஏன் அடிக்கடி பேப்பரில் வருவதில்லை? பேப்பரில்

அதிகம் அடிபடுகிற பெயர்தான் எனக்குப் பிடிக்கும்!

மாரன் : அப்படிங்களா? ... எனக்குத் தெரியாது. (பெருமையாக) பயல்கள் தினம் தினம் என் பெயரை மட்டுந்தான் எல்லாப் பேப்பர்களிலும் போடவேண்டுமென்று துடிப்பார்கள். நான்தான் மற்றவர்களும் பிழைத்துப் போகட்டும் என்று விட்டுவிடுவது!

பூவை : அப்படியெல்லாம் செய்வதுதப்பு! பணம், சொத்து, சுதந்திரத்தையெல்லாம் விட்டுக்கொடுத்தாலும் கொடுக்கலாம். பத்திரிக்கையில் பெயர் வருவதை மட்டும் விட்டுக்கொடுக்கவே கூடாது.

மாரன் : சரி! இனி வேண்டுமானுல் பணம் கொடுத்தாவது பேப்பரில் என் பெயரைப் போடச் சொல்லுகிறேன் மேடம்!

பூவை : உங்கள் கட்சியில் எனக்கு இவ்வளவு நாளாக இன்டரஸ்டே இருந்ததில்லே!

மாரன் : (மெள்ள) அய்யோ! கட்சியா? ... ... யார் கண்டது?

பூவை : உங்களேக் கண்டதுந்தான் உங்கள் கட்சியில் சேர்ந்தால் தேவலாம்போல் இருக்கிறது.

மாரன் : அதற்கென்ன! சேருங்களேன்! என் கட்சி எல்லோருக்கும் இடங் கொடுக்கும் மேடம்! நாட்டிலே இருக்கிற சோம்பேரிகள், முட்டாள்கள்,

அயோக்கியர்கள் எல்லாம் என் கட்சியில்தான் சேருவார்கள்.

பூவை: அய்யய்யோ!

மாரன்: இவர்களையெல்லாம் சீர்திருத்த என் கட்சி மட்டுந்தானே இந்த நாட்டில் இருக்கிறது!

பூவை: ஓகோ!,.... முகம் தெரிந்தவர்கள் கட்சியில் இருப்பதுதானே எல்லோருக்கும் நல்லது!

மாரன்: ஆமாம்! .... அது கடமைகூட மேடம்!

பூவை: உங்கள் கட்சி எது? ...... நான் மறந்தே போனேன்.

மாரன்: (அலட்சியமாக) அது ரொம்ப பழைய பழைய காலத்துக் கட்சியாச்சே. இது கூடவா ஞாபகமில்லை மேடம்?

பூவை: பழைய காலத்துக் கட்சியென்றால் .... ?

மாரன்: (மெள்ள) இம் .... அய்யோ ஆபத்தே! (உரக்க) 'சங்க காலம்' என்று வைத்துக் கொள்ளுங்களேன். சங்ககாலத்து மக்கள் பழக்க வழக்கங்களை, நடை உடை பாவனைகளை அப்படியே இந்தக் காலத்துக்குத் தூக்கிக்கொண்டு ஓடிவருவதுதான் என் கட்சியின் கொள்கை, லட்சியம் எல்லாம் .... எப்படி?

பூவை: நன்றாக இருக்கிறதே! (டம்பப்பையிலிருந்து ரூபாய்நோட்டுகளை எடுத்து) இந்தாங்க 20 ரூபாய்.

மாரன் : (நடுங்கி) அய்யய்யோ! வேண்டாம் மேடம்! வேண்டாம்! யாரேனும் பார்த்தால் தப்பாக முடியும்.

பூவை : சும்மா பிடியுங்கள் நாளையிலிருந்து உங்கள் கட்சிப் பத்திரிக்கையை அனுப்பிவையுங்கள். நான் நிறைய கட்சிப்பத்திரிக்கைகள் வரவழைக்கிறேன். யாரும் தப்பாக நினைக்கமாட்டார்கள்.

மாரன் : (பெருமூச்சிவிட்டு, பணத்தை வாங்கிக் கொண்டு) ஓகோ!

பூவை : வருட சந்தா எவ்வளவு?

மாரன் : இருபது ரூபாயாகத்தான் இருக்கும்.

பூவை : பத்திரிக்கைப் பெயரை மறந்தே போனேன்!

மாரன் : பெயரா? .... அதுதான் சொன்னேனே! கட்சி சங்ககாலம். நேட்சுரலி பத்திரிக்கை 'பழமை'யாகத்தானே இருக்க வேண்டும்!

பூவை : பழமையா? பெண்களுக்கெல்லாம் அதுதான் ரொம்பப் பிடிக்கும்.

மாரன் : என் கட்சியே பெண்கள் கட்சிதான் மேடம்! நான் பேச வாயைத்திறந்தாலே பெண்கள், காதல், இவைபற்றிய கருத்துக்கள்தாம் கோடை மழையென சட சடவென்று பொழியும். உதாரணங்கள் சொல்லவேண்டுமா? கற்பனைக் கதைகள் சொல்ல வேண்டுமா? கேலி செய்ய வேண்டுமா? எல்லாவற்றிற்கும் பெண்கள் — சாரி — கன்னியர்,

காரிகையர், மங்கையர், வனிதையர், வனிதா மணிகள், பருவப் பெண்கள் இவர்கள்தான் கருப் பொருள், உருப்பொருள், செயப்படுபொருள் எல்லாம்.

பூவை: அப்படிப் பெண்களைப் பற்றிப் பேசியதால் தான் உங்களை இப்படித் துரத்திக்கொண்டு ஓடி வந்தார்களா?

மாரன்: ஆமாம் மேடம்! .... ஓடிவந்து இங்கே ரூமிலே அடைக்கலம் புகுந்துவிட்டேன்.

பூவை: நான் யூகித்தேன். எனக்கு எல்லாம் தெரியும். ஆண்களே பொருமை பிடித்தவர்கள்.

மாரன்: என்னைத் துரத்தி வந்தது பெண்கள் மேடம்!

பூவை: பெண்களா? அப்படி எதைப் பேசினீர்கள்?

மாரன்: (யோசித்து) இம் ... ஆமாம் ... இப்படி நின்று 'ஏ! பெண்களே! ... பெண்களுக்குக் கணக்கு வழக்கில்லாமல் சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக் கிறது. ஒருத்தராவது அதைப் பயன் படுத்துவ தாகத் தெரியவில்லை', என்று கர்ச்சித்து ஓங்கி ஒரு குத்து மேசையில் விட்டேன் பார் — மேசை உடையவும் கற்கள் பறந்துவந்து மேலே விழவும் சரியாக இருந்தது.

பூவை: பார்த்தீர்களா! இந்த ஆண்களுக்குப் பெண் களைப்பற்றித் தெரிவதே இல்லை!

மாரன்: அப்படியா? உங்களுக்குத் தெரியுமல்லவா?

பூவை : ஓ! நிறையத்தெரியுமே! பெண்களைப்பற்றி மேடையில் பேசுவதாக இருந்தால் அவர்களைப் புகழ்ந்து, வருணித்து மட்டுந்தான் பேச வேண்டும். திட்டுவதையெல்லாம் வீட்டோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

மாரன் : ஆண்களைப் புகழ்வதென்ருல் ...?

பூவை : அவர்களை ஏன் புகழவேண்டும்? அவர்கள் தான் உண்மையிலேயே பெரியவர்களாயிற்றே!

மாரன் : நான் நிறைய மனோதத்துவப் புத்தகங்களைப் படித்திருக்கிறேன் - எல்லாம் பெண்கள் மனசைப் பற்றி மட்டுந்தான் — இருந்தாலும் இந்தச் சின்ன விஷயம் தெரியாமல் போய்விட்டது. (சன்னல் பக்கம் எட்டிப்பார்த்து) அந்தப் பாகவதர் கிராப்பு யார்? அடிக்கடி சன்னல் வழியாக எட்டி எட்டிப் பார்க்குது.

பூவை : ஒரு பேக்கு!

மாரன் : அதை நீங்கள் காதலிக்கிறீர்களா?

பூவை : (மிரட்டலுடன்) மிஸ்டர்! இது என் வீடு!

மாரன் : (பயந்து) அய்யய்யோ! இல்லையென்று நான் சொல்லவில்லையே மேடம். பயல் அசல் பெண் பிள்ளையைவிட, அழகாக — நம் கடவுள்கள் படத்தில் இருப்பது போல் — இருக்கிருனே என்றேன். அவ்வளவுதான். ஒரு புடவைதான் தேவை. மேக்கப்கூட வேண்டாம்!

பூவை : அதனுல்தான் அதை எனக்குப் பிடிக்க வில்லை.

மாரன் : பொருமையா மேடம்?

பூவை : இல்லை ... நான் பெண்பிள்ளை.

மாரன் : நான் நம்புகிறேன்!

பூவை : பெண்ணையே எப்படிப் பிடிக்கும்?

மாரன் : கரைக்ட்! (குழைவாக) நான் ஆண்பிள்ளை யாட்டம் இருக்கிறேனில்லையா?

பூவை : பலரும் அப்படித்தான் இருக்கிருர்கள்.

மாரன் : (பரிதாபமாக) ஆமாம்!

பூவை : மேலும் அது சினிமா நடிகரோ, அரசியல் கட்சித் தலைவரோ இல்லை.

மாரன் : அட பாவமே!... அது என்ன புதிர்? சினிமா நடிகன், கட்சித்தலைவன் இவர்களைத்தான் உங்க ளுக்குப் பிடிக்குமா?

பூவை ; நீங்கள் பேப்பர் படிப்பதே இல்லையா?...நான் அதைத் தவிர எதையும் படிப்பதில்லை.

மாரன் : அதிலொன்றும் பரிட்சையில் கேள்வி கேட்ப தில்லையே!

பூவை : இப்போது?

மாரன் : ஓகோ!...ஆமாம்!... இப்போது?... என் கட்சிப் பத்திரிக்கையை மட்டுந்தான் படிப்பது. மற்றைய பத்திரிக்கைகளைப் படித்தால் எங்கு என் கட்சியில் நம்பிக்கை இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சம், பயம், நடுக்கம்.

பூவை : அதுதான் உங்களுக்கு உலகமே தெரியவில்லை. இப்போதெல்லாம் சினிமாக்காரர்களுக்கும் கட்சித் தலைவர்களுக்குந்தான் பேர், புகழ் எல்லாம். இவர்கள் தலையிடாத துறைகளே நாட்டில் இல்லை. அரசியல், கலை, இலக்கியம், நாகரீகம், பண்பாடு, மதம் எல்லாவற்றிற்கும் சினிமாக்காரர்களும் கட்சித் தலைவர்களுந்தான் அத்தாரிட்டிகள்.

மாரன் : ஆமாம் கல்லூரிகளில் பெரிய பெரிய புரபசர்களெல்லாம் இருக்கிறார்களே!

பூவை : ஓகோ! இருக்கிறார்களா?...... (திடீரென்று) சினிமா நடிகர்களுக்குத்தான் முதல் பிரிபரன்ஸ்.

மாரன் : இயற்கைதானே! ஏன் மேடம் நீங்கள் சினிமா நடிகர்களை மட்டுமே விரும்பக்கூடாது? சினிமாக்காரர்கள் அனைவருந்தான் அரசியல் மேதைகளாயிற்றே!

பூவை : (பெருமையாக) நான் ஆராய்ந்தவரை நடிகர்களில் யாரும் திருமணமாகாமல் இல்லை. ஆண்களைப்போல் எனக்கு வெறும் போட்டோக்களை மட்டுமே வைத்துக்கொண்டு ரசிப்பது பிடிப்பதில்லை.

மாரன் : (பரிதாபமாக) ஆமாம்! ஆபத்தானதுதான் உங்கள் நிலே!... உங்களுக்கு முன்பு நிறைய பெண்கள் பிறந்துவிட்டதால் வந்த கொடுமைகள் இவையெல்லாம் மேடம்!

(கதவு தட்டப்படும் சத்தம் கேட்கிறது)

மாரன் : (நடுங்கி) அய்யய்யோ!... அது யார் மேடம்?

பூவை : (பதட்டத்துடன்) அய்யோ!... என் சித்தப்பா போலிருக்குதே! ஓடிப்போங்க! ஓடிப் போங்க! (அவன் பையுடன் போய் சன்னல் வழியாக எட்டிப் பார்க்கிறுன்) ஓடிப் போங்கள்!

மாரன் : (திரும்பி, பரிதாபமாகக் கெஞ்சுகிறுன்) மேடம்! ரொம்ப ஆழமாக இருக்குது மேடம்.

பூவை : (பயத்துடன் கோபமாக) வரும்போது மட்டும் எப்படி வந்தீர்களாம்?

மாரன் : ஏதோ ஒரு வெறியிலே ஏறி குதிச்சிப்புட்டேன். இப்போது பயமாக இருக்குதே மேடம்!

பூவை : முடியாது! அய்யய்யோ! என் சித்தப்பா என்னைக் கொண்ணுபுடுவாரே.

மாரன் : குதிச்சா என் கால் ஒடிஞ்சிபுடுமே.

பூவை : போனுல் போகுதேன்!

மாரன் : அய்யய்யோ! அப்படியெல்லாம் சொல்லாதே மேடம்! நான் பெரிய கட்சித் தலேவனில்லே. நான் பெண்களுக்காகவே, அவர்கள்

உரிமைகளுக்காகவே வக்காலத்து வாங்கி வழக்காடப் பிறந்தவனில்லையா மேடம்? ஒரு பெரிய மதியூகியின் காலை ஒடிக்கச் சொல்லுகிறீர்களே மேடம். மேடம்! பாவம் மேடம்! பாவமோ பாவம் மேடம்!

பூவை : அய்யய்யோ! நான் என்ன செய்வேன்! (கதவு தடதடவென்று வேகமாகத் தட்டப்படுகிறது)

குரல் : அம்மா பூவை! அம்மா பூவை! தூங்குறீயா?

பூவை : (உரக்க) கொஞ்சம் இருங்களப்பா! ட்ரஸ் பண்ணிக்கொண்டிருக்கிறேன் (மெள்ள) நான் என்ன செய்வேன்? இங்கு ஒளியக்கூட இடமில்லையே!

மாரன் : ஒளிய இடமில்லாமல் அறையிருப்பது ரொம்பத் தப்பு மேடம்! ஒன்று செய்யலாமா மேடம்?

பூவை : என்ன ?

மாரன் : ஒரே ஒரு பாவாடை, தாவணி, ஜாக்கெட்டு கொடுங்களேன்!

பூவை : ஏனும்?

மாரன் : கொடுங்களேன் சொல்லுகிறேன்.

பூவை : (கொடியில் கிடந்தவற்றை எடுத்துக் கொடுத்து) இந்தாங்க!

மாரன் : (அவைகளை அவசரமாக உடுத்திக் கொண்டே) அம்மாவுக்கு நான் ஒரே பிள்ளை. அம்மா அடிக்கடி எனக்குப் பாவாடை கட்டி அழகு பார்ப்பார்கள்.

பூவை : சரி! ... சரி! ... சட்டுன்னு கட்டிக்கிங்கே. இந்தாங்க, இந்த துண்டை மடித்து தலையிலே கட்டிகிங்கே. இந்தக் கருப்புக் கண்ணாடியைப் போட்டுக்குங்கே.

மாரன் : சரி ... சரி ... நீங்கள்போய் கதவைத்

திறங்க மேடம்! என் பெயர் என்ன தெரியுமா?

பூவை : என்ன?

மாரன் : மதி.

பூவை : மதி, [மதி, சரிதான். (போய்க் கதவைத் திறக்கிருள். அவளுடைய சிற்றப்பன் நல்ல பெருமாள் வருகிருர். உயர்ந்து சிறிது வளைந்த உருவம். தலை பெரும்பாலும் நரைத்து விட்டது. காதில் சிவப்பு ஒற்றைக்கல் கடுக்கன். நெற்றியில் திருநீரிட்டுச் சிவப்புப் பொட்டு வைத்திருக்கிருர். அரைகிராப்பு, முழுக்கை சட்டை, அங்கவஸ்திரம் சகிதம் வருகிருர்) உள்ளே வாங்கப்பா!

நல்லபெருமாள் : (உள்ளேவந்து) என்னம்மா உனக்கு இப்படி உடம்பெல்லாம் நடுங்குது? வியர்த்துக் கொட்டுதே!

பூவை : ஒண்ணுமில்லேப்பா! நீங்கள் திட்டென்று கூப்பிட்டீர்களா, அவசரத்தில் காலும் ஓடவில்லே, கையும் ஓடவில்லே.

நல்லபெருமாள் : இகி ... கி ... என் பொண்ணுக்கு எப்போதும்என்மேல் மதிப்பு அதிகம். (கண்ணுடி முன் உட்கார்ந்து பௌடர் அடித்துக்கொள்ளும் மாரனேப் பார்த்து) அம்மா! அதுயாரம்மா? (உட்காருகிருர்)

பூவை : அதாப்பா? என் சினேகிதி. உங்களுக்குத் தெரியாதாப்பா? பெயர் மதி. (உரக்க) எட்டிமதி! எங்கள் சித்தப்பாவைப் பார்க்கவில்லே. வாடி சும்மா! (அவன்கூனி குறுகி வருகிருன்) அவளுக்கு வயசான ஆண்பிள்ளேகளேக் கண்டாலே ரொம்ப வெட்கம்!

நல்லபெருமாள் : ஒருவயது பொண்ணல்ல? அப்படித் தான் இருக்கும். ... ... என்ன உடையெல்லாம் விநோதமா இருக்குதே?

பூவை : அவள்இப்போது பம்பாயிலே வசிக்கிருளப்பா. அங்கே பெண்களெல்லாம் இப்படித்தான் இருப்பார்கள்!

நல்லபெருமாள் : ஓகோ! ... அய்யோ பாவம்! (பெருமூச்சு விட்டு) இப்படி எட்டி வெகுதூரத்தில் ஒரு பொண்ணு கெடைச்சால் எனக்கு நிம்மதியா போயிடும். ... இகி ... கி ... ஏ ! பம்பாய்ப் பொண்ணே! என்னேப் பாரேன்.... ... அட சும்மா

பாரு பொண்ணே! (மாரன் அடிக்கண்ணுல் பார்க்கிருன்) இகி ... கி ... நான் கல்லியாணம் பண்ணிக்கக் கூடாதாம். கெழவனும். இந்த பக்கத்துப் பசங்கள் சொல்ருனுவோ. அதனுல்தான் எட்டி வடதேசத்திலே ஒரு பொண்ணு கெடைச்சால் தேவலாமுன்னு நெனைக்கிறேன்.

மாரன் : உங்கள் அழகுக்கு ஆயிரம் பொண்ணுகளைக் கட்டிக்கலாமே!

நல்லபெருமாள் : அப்படிச்சொல் பெண்ணே! இங்கே ஆம்பளைப் பசங்கள் அவனுவ கண்ணுலே பார்த்து விட்டு என்னைக் கெழவன்னு சொல்லுருனுவோ. எனக்கில்லே தெரியும் நான் கடைத்தெருப்பக்கம் போனுல் பொண்ணுகளெல்லாம் என்னையே உத்து உத்து பாத்துட்டுப் போகிறது. வேண்டாம். எனக்கு என்ன குறைவு? இல்லே! இந்தப் பயல்களையே கேட்கிறேன். இந்தப் பசங்களைவிட கொஞ்ச வருஷம் முன்னுடி பொறந்ததாலேயே ஒருத்தன் கெழவனு போயிடுவானு? என் உடம்பு இந்தப் பசங்கள் உடம்பைக் காட்டிலும் கல்லு மாதிரி இருக்கும். அதைத் தள்ளு பொண்ணே! என் சொத்து சுதந்திரத்தைச்சொல். இப்போ கணக்கு எடுத்தாலும் ரூபாய் நாற்பது ஐம்பதாயிரம் தேரும். அத்தோட கொறைஞ்சது பத்தாயிரம் வாங்கிக்கிட்டுதான் பூவையைக் கட்டிக் கொடுப்பேன்.

மாரன் : யாருங்க விலே போட்டது?

நல்லபெருமாள் : என்ன பம்பாய்ப் பொண்ணே கேட்கிறே?

மாரன் : பூவைக்கு யார் பத்தாயிரம் விலே போட்டது என்று கேட்டேன்.

நல்லபெருமாள் : அவளுக்கு விலே கொடுக்கிறதுன்னு ஐம்பதினுயிரம் கொடுக்கணும். தெரியுமா?

மாரன் : சாரி! எனக்கு விலே போட்டுப் பழக்கமில்லே. இந்தக் காலத்திலே பணம் கொடுத்துத்தானே பையன்களேப் பிடிக்கிருர்கள்.

நல்லபெருமாள் : பூவை அழகுள்ள பொண்ணு பம்பாய்ப் பொண்ணே! அழகுள்ள பொண்ணு!

மாரன் : அப்போ ஒத்துக் கொள்ளுகிறேன்.

நல்லபெருமாள் : அவளே இந்த நல்லபெருமாள் எவ்வளவு பாடுபட்டுப் படிக்கவச்சான் தெரியுமா? நான் பட்டபாட்டுக்கு இன்னும் பத்தாயிரம் கொடுக்கலாம். ... இந்த ஊர்ப்பசங்களுக்கு ஒண்ணுமே தெரியாது. இப்போ நான் அனுபவிக்கிற சொத்தெல்லாம் பூவையிதுன்னு அலப்புருனுவோ. நான் இவள் படிப்புக்கு எவ்வளவு செலவு பண்ணியிருப்பேன் தெரியுமா?... என்னம்மா பூ?

பூவை : அத்தனேயும் உண்மையாக இருக்கலாம்ப்பா!

நல்லபெருமாள் : (குழைவாக) ஏ! பம்பாய்ப் பொண்ணே உனக்கு என்னேப் பிடிக்குதா?

பூவை : அய்யய்யோ! அவள் கல்லியாணம் ஆன வளப்பா.

மாரன் உங்களே எனக்குப் பிடிக்குது ... இம் ... என்ன செய்வது? ... மேல் நாடாகமட்டும் இருந் தால் ... ?

நல்லபெருமாள் : இப்போதான் நம்ம நாட்டிலேயும் விதவைகள் கலியாணம் பண்ணிக்குதாமே!

பூவை : அவள் கணவன் கூடிய சீக்கிரம் இறக்கப் போவதில்லையாம்ப்பா.

மாரன் : நான் என் வீட்டுக்காரர்மேலே உயிரையே வைச்சிருக்கேன்.

நல்லபெருமாள் : அதுதான் கொஞ்சமும் பெண்களே யில்லாமல் இருக்குறே. ... அதுசரி ... உன் கழுத் திலே தாலியைக்காணுேமே பம்பாய்ப்பொண் ணே! எங்கே தவறவிட்டே?

மாரன் : எவ்வளவோ கஷ்டப்பட்டு மேக்கப் பண் ணிக்கொண்டு பிரயாணத்திற்குக் கிளம்புகிறேம். மேக்கப்புக்கும் தாலிக்கும் ஏன் போட்டியின்னு கழற்றிப் பத்திரமா பெட்டியிலே வைத்துவிட் டேன். சுவார்சியம் இல்லாமல் அதுவேறு!

நல்லபெருமாள் : தாலியைப் பார்த்துவிட்டா பெண்டு களேச் சுத்தாத பயல்கள்கூட இருக்கிருர்களா?... ஏ! பம்பாய்ப் பொண்ணே! உங்கபக்கம் எனக்கு ஒரு பெண் பாரேன்.

பூவை : அப்பா! அவள் இப்பவே ஊருக்குக் கிளம்பனுமாம்.

மாரன் : போனதும் என் தங்கையை வேணுமானுல் அனுப்பி வைக்கிறேன்.

பூவை : பிடித்தால் கட்டிக்கொள்ளுங்களப்பா!

நல்லபெருமாள் : பொண்ணு பிள்ளை தானே?

பூவை : ஆமாம் ... இவள் தங்கை.

நல்லபெருமாள் : வயசு என்னுயிருக்கும்?

மாரன் : இருபது இருபத்திரெண்டு இருக்கும்.

நல்லபெருமாள் : அப்படின்னு எனக்குப் பிடிக்குமே! அவளுக்குத்தான் என்னைப் பிடிக்குமோ என்னமோ? இந்தக் காலத்துப் பொண்ணுங்கள் தான் தன்னையும்விட இளைய பசங்களா கேட்குதுங்களே! அனுபவம் இல்லாததுங்க!

மாரன் : உங்களைப் பிடிக்காவிட்டாலும் உங்கள் பணத்தை அவளுக்கு நல்லாப் பிடிக்கும்.

நல்லபெருமாள் : எதையாவது பிடித்தால் சரி தான். இகி ... கி ... பொழுனுட்டிக்கு அடங்கி அடங்கியே வாழ்ந்து பழக்கப்பட்டவன் நான். ... இகி ... கி ... கடைசீ காலத்திலே ஒரு சின்ன பொண்ணு நூறுவால்ட் பல்புபோல பக்கத்திலே இருந்தால் எப்படி இருக்கும்?

மாரன் : ஒரே பிரகாசமாக இருக்கும்.

நல்லபெருமாள் : இங்கே ஒரு பசங்களுக்கும் இது தெரியலே! ... மேல்நாட்டிலே...

பூவை : (எரிச்சலுடன்) அப்பா!

நல்லபெருமாள் : ஏனம்மா?

பூவை : அவள் உடனே ட்ரஸ் மாத்திக்கிட்டு ஊருக்குப் போகணுப்பா!

நல்லபெருமாள் : சரிம்மா. ஏ பம்பாய்ப்பொண்ணே! போனதும் தங்கச்சியை அனுப்பிவை. மறந்து போய்விடாதே. கல்லியாணத்துக்கு நீ கட்டாயம் வரணும்.

பூவை : சரி! கட்டாயம் வருவாளப்பா.

நல்லபெருமாள் : நான் ரயிலடிவரைபோகட்டுமா பூ?

பூவை : வேண்டாம்ப்பா. அவள் ரொம்பதைரியசாலி. யாரேனும் துணைக்குப்போனால் வெட்கப்படுவாள்.

நல்லபெருமாள் : (எழுந்து) அதுவும் சரிதான். ..... பெண்ணே நான் கூடத்திலே இருக்கிறேன். ட்ரஸ் பண்ணிக்கிட்டுவா. உன்னுக்கிட்டே கொஞ்சம் பேசனும்.

பூவை : சரிப்பா.

நல்லபெருமாள் : வரட்டுமா பம்பாய்ப்பொண்ணே?

மாரன் : போய்வாங்க! (அவர் போகிருர். பூவை போய் கதவைத்தாளிட்டுவிட்டுக் கதவில்சாய்ந்து ஒரு பெருமூச்சு விடுகிருள்)

மாரன் : அப்பாடா! ... பிழைத்தேன்! (உடையைக் களையப் போகிருன்)

பூவை : அப்படியே இருங்க! அது திரும்பிவந்து தொலையப்போவுது. (கதவைத் திறந்து எட்டிப் பார்த்து, பதட்டத்துடன் திரும்பிவந்து) அய்யய்யோ! அது அப்படியே கூடத்திலே உட்கார்ந்து விட்டதே! இப்போ நான் என்ன பண்ணுவேன்!

மாரன் : சரி ... (பையை எடுத்துக்கொண்டு) நான் மேனேஜ் பண்ணிக் கொள்ளுகிறேன் மேடம். நான் போய் வரட்டுமா?

பூவை : தொலையுங்கள்! ... அய்யய்யோ! என் ட்ரஸ். ... ?

மாரன் : போனதும் கொடுத்து அனுப்புகிறேன்.

பூவை : நான் எப்படி நம்புவது? உங்கள் அட்ரசை யாவது கொடுங்கள்!

மாரன் : (தோல் பையிலிருந்த சீட்டை எடுத்து ஏதோ எழுதிக்கொடுத்துக் கொண்டே) இந்தா மேடம்!

பூவை : இதுதான் உங்கள் கட்சி அலுவலகமா?

மாரன் : (விழித்து) ஆமாம்!... ஆமாம்!

பூவை : பத்திரிகை அலுவலகம்...?

மாரன் : வீடு, அலுவலகம் எல்லாம் அதுதான்.

பூவை : புதன்கிழமை நானே அங்கு வருகிறேன். ட்ரஸ்ஸை மறைத்து வைத்திருங்கள். பேரைக் கெடுத்து விடாதீர்கள்.

மாரன் : (பெருமூச்சுடன்) சரி!...... (போகிறுன். அவள் வாயிற்படியில் நின்று எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிருள்.)

திரை

திரை 3

பூவை வீட்டின் முகப்பு. தெரு மின் விளக்குகள் எரிந்துகொண்டிருக்கின்றன.

சன்னலின் கீழ் தங்கமணி கால்களைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறான். முழுக்கால் சட்டைப்பையிலிருந்து பணத்தை எடுத்து எண்ணிப் பார்க்கிறான். பணத்தைத் திரும்பவும் பையில் வைத்துக்கொண்டு சன்னலால் உள்ளே எட்டிப் பார்க்கிறான்.

அவ்வழியேவந்த மாரிசாமி, தங்கமணியைப் பார்த்து மெள்ள அருகில் போய் முதுகில் ஒன்று போடுகிறான். தங்கமணி பயந்து நடுங்குகிறான்.

தங்கமணி : (மாரிசாமியைப் பார்க்காமல்) அய்யோ! ... இல்லேங்க! ... நான் ஒரு தப்பும் பண்ணவே இல்லேங்க! ... சும்மாதான் எட்டி பார்த்துக்கிட்டு இருக்கிறேன். ... தப்புசெய்ய எனக்கு தைரியமே கிடையாதுங்க ... என்னை விட்டு விடுங்க.

மாரிசாமி : எலே! கத்தாதே! ... இப்படிக்கண்ணைத் திறந்து என்னைப்பார்! (திரும்பிப் பார்த்த தங்கமணி ஒரு பெருமூச்சு விடுகிறான்)

தங்கமணி : அடே! மாரிசாமிபயலே! நீதானு!

மாரிசாமி : ஏன்டா தங்கமணி, என்னமோ திடீர் பணக்காரனுகப் போகப்போறேன்னு வீட்டையெல்லாம் வித்துப்பணத்தைச் சுருட்டிக்கொண்டு வந்தியே.

தங்கமணி : அதுக்காகத்தானே இந்த அம்மன் சன்னதியிலே தவம் கிடக்குறேன். இத்தோட இரு நூறு முன்னூறு ரூபாய் அபேஸ்!

மாரிசாமி : அம்மன் வரங் கொடுக்கிருப்போலத் தெரியுதா ?

தங்கமணி : விடாமல் தவங்கிடந்தா வரம் கொடுக்காத அம்மன்கூட உண்டா? ... பொண்ணுபிள்ளை தானேடா, விடாமல் சுத்திஞல் மனசு இறங்கிப் போயிடுவாள். நம்மையும் சுத்த ஆள் இருக்குதேன்னு அப்படியே சொக்கி போயிடுவாடா!

மாரிசாமி : பொண்ணு ரொம்ப அழகா? அவளை உனக்கு ரொம்பப் பிடிக்குதுபோல இருக்குது.

தங்கமணி : அவள் பெரிய பணக்காரிடா! இப்போ நீ போய் கணக்கெடு! ரூபாய் ஐம்பது அறுபதிஞயிரம் தேரும்.

மாரிசாமி: இதைவிட எங்கேயாவது திருடப்போவது.

தங்கமணி : உடம்பிலே வலுவில்லையே.

மாரிசாமி : கள்ளநோட்டு அடிக்கிறது.

தங்கமணி : மூளை வேணுமே.

மாரிசாமி : சரி ... ஏதேனும் வேலைக்குப் போவது.

தங்கமணி : வேலைசெய்து எவன்டா பணக்காரனுகி இருக்கிருன்? ... (குழைந்து) மேலும்டா மாரி? ... மாரி மேலுன்டா! ... மாரி! ... ஏய் மாரி! ... மாரி ஏய்!

மாரிசாமி : சொல்லித் தொலை! குழையாதே! நான் உன் எசமானில்லை.

தங்கமணி : அவள் இருக்காளே (சன்னலைக்காட்டி) அவள் ரொம்ப ரொம்ப வெரி வெரி பியூட்டி புல்லுடா! ஐ லைக் கர் வெரி மச்சுடா!

மாரிசாமி : ஆசைப்பட ஆசைப்பட அழகு ஏறிக் கிட்டே தான்டா இருக்கும். ஆசை ஏறுது, அழகு வளருது. (பேச்சுக்குரல் கேட்கிறது)

தங்கமணி : ஏலே! ஓடிவா! யாரோ உள்ளேயிருந்து வருகிருப்போலிருக்குது. (ஓடி, வீட்டின் சந்தில் மறைந்து நிற்கிருர்கள். பெண்வேடத்திலிருக்கும் மாரனை, நல்லபெருமாள் வாயிற்படியில் வந்து நின்று வழியனுப்பி வைக்கிருர்.)

நல்லபெருமாள் : இகி ... கி ... பம்பாயிக்குப் போன தும் மறந்துபுடாமே தங்கச்சியைத் தம்பியோட அனுப்பிவைக்கணும்.

மாரன் : சரிங்க. அவளுக்குப் பணமென்ருல் உயிர்.

நல்லபெருமாள் : நான்தான் சொல்லுகிறேனே. கலியாணமான உடனேயே வீடு நெலத்தையெல் லாம் அவள் பேருக்கே எழுதி வைச்சிபுடுறேன்.

மாரன் : ரயிலுக்கு நேரமாவுது.

நல்லபெருமாள் : இகி .... கி .... தைமாசம் அரப்பு முடிஞ்சதும் தேன்நிலவுக்குப் போகணும்.

மாரன் : சரிங்க.

நல்லபெருமாள் : போறியா? .... சரி!. (மாரன் போகிருன். அவனைப் பார்த்துக்கொண்டே) நல்லா கட்டாதான் இருக்கிருள். ஆனல் ஆம்பளைமாதிரி இருக்கிருளே. ... ஏதேனும் ரீசண்டிலே ஆம்பளையாயிருந்து பொம்பளையா மாரினவளோ! இருந்தாலும் இருக்கும். ... இம் ... இவள் தங்கச்சி நல்லா இருந்தாலும் இருப்பாள். தங்கச்சிங்களே அக்காளைக் காட்டிலும் நல்லாயிருப்பாளுங்க. (ஆகாயத்தைப் பார்த்து, கைகளை உயர்த்தி, கூப்பிடுவதுபோல்) ஏ ஆண்டவனே! எல்லாம் நல்லபடியா நடக்கணும். இந்த மூதேவி பூவையைத் துரத்திப்புட்டு ஒரு மகாலெட்சுமியை வீட்டிலே கொண்டுவந்து சேர்க்கணும். (உள்ளே போகிருர்.)

(போய்க்கொண்டிருந்த மாரனை, தங்கமணியும் மாரிசாமியும் (மூக்குவரை கைக்குட்டைகளால் மறைத்துக் கட்டிக்கொண்டு) ஓடிவந்து பிடித்துக்கொள்ளுகிருர்கள். மாரன் வெலவெலத்துப் போகிருன்)

மாரன் : அட படுபாவி பசங்களா!

தங்கமணி : ஏய்! நீ பூவையைக் காதலிக்கிறியாடா?

மாரன் : சே ... சே ... கையை விடுங்கடா!

மாரிசாமி : ஏய்! கேட்டதற்குப்பதில். இல்லே, சத்தம் போட்டு ஊரைக்கூட்டினுல் பின்னே என்ன நடக்குமென்று தெரியாது.

மாரன் : அவளே நான் ஏன்டா காதலிக்கிறேன்?

தங்கமணி : அவளுடைய நிலம் வீட்டுக்கு ஆசைப் பட்டுதான்.

மாரன் : அப்படி ஒரு காதலா!? ... காசுக்கு ஆசை படுகிறது காதல் இல்லே. காசுல்.

மாரிசாமி : (மிரட்டி) ஏய்!

மாரன் : அப்பா! ... அவளே நான் காதலிக்கவும் இல்லே. காசுலிக்கவும் இல்லே.

மாரிசாமி : அவளாவது உன்னேக் காதலிக்கிருளா?

மாரன் : அவளேக் கேட்கவேண்டிய கேள்வி! சிறிது தயவுசெய்து கேட்டுச் சொல்லுங்களேன்.

தங்கமணி : (கையை ஓங்கி) எலே!

மாரிசாமி : தோலே உரிச்சி அவளுக்கு ஜாக்கெட் தைச்சிப் போட்டுவிடுவோம்.

மாரன் : நல்லதா போச்சி!

தங்கமணி : ஏய்! நல்லபெருமாளேக் கூப்பிடட்டுமா?

மாரன் : வேண்டாம்பா...... வேண்டாம். நானும் அவளேக் காதலிக்கவில்லே. அவளும் என்னேக் காதலிக்கவில்லே. சரிதானே? ஆளேவிடுங்கள்!

மாரிசாமி : இனியாவது அவளைக் காதலிப்பியா?

மாரன் : மாட்டேன். அவள் என்னைக் காதலிச்சாகூட உங்களையே காதலிக்கச் சொல்லுகிறேன்.

தங்கமணி : ஆமாம். ஓடிப்போ. இனி இந்தப்பக்கம் தலையைக் காட்டினே ....

மாரிசாமி : தலையை எடுத்துக் கையிலே கொடுத்து வீட்டிற்கு அனுப்பிவிடுவோம்.

மாரன் : (போய்க்கொண்டே) அப்படித்தான் செய் யுங்கள்! எனக்கும் முடிவெட்ட காசு கொடுத்துக் கட்டுபடியாகவில்லை.

தங்கமணி :
மாரிசாமி : } எலே!

மாரன் : ஓய்!... அப்பாடா! (துள்ளி ஓடிமறைகிறான்)

மாரிசாமி : (முகத்தில் கட்டியிருந்த கைகுட்டையை அகற்றி) எப்படி நம்மவேலை?

தங்கமணி : நீ சரியான மாரிடா. இப்படி வாசற்படி கிட்டேயே நின்னுக்கிட்டு வருகிற வாலிபப் பசங் களையெல்லாம் மெரட்டி உருட்டி உதை கொடுத்து ஓட்டிக்கொண்டே இருந்தால். ... ...

மாரிசாமி : எந்தக் கிழவனாவதுவந்து அவளைக் கட் டிக்கொண்டு போய்விடுவான்.

தங்கமணி : போடா!... அவள் காத்திருந்து காத் திருந்து என் காலடியிலே ஓடிவந்து விழுவாள்.

மாரிசாமி : நீ திடீர் பணக்காரனுயிடுவே.

தங்கமணி : ஆமாண்டா... ஆமாம்... ஆகா! ஆகா! (பூவை வாயிற்படியில் வந்துநிற்கிருள்) ஏய் மாரி! அவள் தான்டா! ஏய் எப்படி? அவள் பேசிக் கேட்குனும்டா. அவள் நாக்கு அப்படியே சலதரங்கம் வாசிக்கும்டா!...... சலதரங்கம் வாசிக்கும்! இங்கே வாயேன்! அவள் என்னிடம் பேசுவாள் (போய் குழைவாக) மிஸ்! மிஸ்!

பூவை : மிஸ் என்று கூப்பிட்டால் எனக்குப் பிடிக்காது.

தங்கமணி : ஏன் மிஸ்?

பூவை : என்னவோ கெட்டுப்போனவள் என்று கூப்பிடுவது போலிருக்கிறது.

தங்கமணி: (சிந்தனையில்,ரகசியமாக மாரிசாமியிடம்) ஏன்டா, குமாரி நல்லதுதானே?

மாரிசாமி : ச்சே...சே. நீ கெழவின்னு மறைவாகச் சொல்லுவதாகும்டா.... திருமதின்னு கூப்பிடு!

தங்கமணி : சரி.... (உரக்க) திருமதி.

பூவை : என்ன வேணும்?

தங்கமணி : இகி...கி... நீ ரொம்ப அழகா இருக்கிறீயே.

பூவை : அப்படியா?

தங்கமணி: ஆமாம் திருமதி.

பூவை: இந்த அழகு அழிந்து போகாமல் இருக்க, நான் என்ன செய்யவேண்டும்?

தங்கமணி: அழகு அலைந்து போகாமலிருக்கவா? அடிக்கடி மேக்கப் பண்ணிகிட்டே இருக்கணும்.

பூவை: அதற்குத் தினம் எவ்வளவு செலவாகும்?

தங்கமணி: (மாரிசாமியிடம் ரகசியமாக) ஏன்டா எவ்வளவு ஆகும்?....இம்....பூவுக்கு நாலணு.

மாரிசாமி: ஹேர் ஆயில், ரிப்பன், கொண்டைஊசி, ரிங், நெட்டு, ஸ்னோ, பவுடர், மை, பொட்டு — இதுக்கு முக்கால் ரூபாய்.

தங்கமணி: உடை, நகை, தேய்வடை, கழிவடை

மாரிசாமி: ஒரு ரூபாய் ஆகலாம்டா.

தங்கமணி: சரி....(பூவையிடம்) ஏறக்குறைய சரா சரிதினம் இரண்டு ரூபாய் ஆகும் திருமதி.

பூவை: ஒரு வருஷத்துக்கு....?

தங்கமணி: லீப் வருஷத்துக்கா? சாதாரண வருஷத் துக்கா?

பூவை: சாதாரண வருஷத்துக்குத்தான்.

தங்கமணி: 365....365....சுமார் 730 ரூபாய் ஆகும் திருமதி.

பூவை : நான் எவ்வளவு வருஷம் உயிரோடு இருப்பேன்?

தங்கமணி : ஏதுடா இது வம்பு!.... உன் உயிர் என் கையிலேயா இருக்குது!

மாரிசாமி : (ரகசியமாக) நிறைய சொல்லுடா. அப்போதான் சந்தோஷப்படுவாள்.

தங்கமணி : ஓகோ !.... நம்ம நாட்டு சராசரி வயசு 35 யோ 40 தோ வாம்....... நீ ஏகப்பட்ட வயசு உயிரோட இருப்பே திருமதி. ஒரு அறுபது வயது.... சந்தோஷந்தானே?

பூவை : அறுபது வருஷத்திற்கும் எவ்வளவு செலவாகும்?

தங்கமணி : அய்யய்யோ!....ஏதுடா, பெரிய கணக்கா இருக்குது! பேப்பர் பேனுகூட இல்லையே! (மாரியிடம்) ஏன்டா மாரி 730ஐ அறுபதால் பெருக்கினுல் என்னடா வரும்?

மாரிசாமி : இம்.... 730ஐ 750 தாக வைத்துக் கொள்ளலாமா? கேளடா!

தங்கமணி : திருமதி !

பூவை : இம்...

தங்கமணி : 730ஐ 750 ஆக வைச்சிக்கலாமா? 730ஐக் காட்டிலும் 750 அதிகம்.

பூவை : சரி

தங்கமணி: சரிடா மாரி.

மாரிசாமி: அறுமுக்கால் நாலரை, அறுபத்திமுக்கால் நாற்பத்தைந்து... நாற்பத்தைந்தாயிரம் ரூபாயாகும்டா.

தங்கமணி: அப்பாடா!... நாற்பத்தைந்தாயிரம் ரூபாயாகும் திருமதி.

பூவை: அவ்வளவு ரூபாயைக் கொண்டுவந்து, பிறகு என்னைப் பாருங்கள் (திரும்புகிருள்)

தங்கமணி: அய்யய்யோ! திருமதி! திருமதி! உன் வீடு நிலந்தான், ஐம்பது அறுபதினுயிரம் தேருமே!

பூவை: அதைத்தான் எங்க சித்தப்பா கல்லியாணம் செய்துகொண்டு, மனைவிப் பெயருக்கு எழுதி வைக்கப் போகிருரே.

தங்கமணி: அட ஆண்டவனே!... அப்படிச் செய்யலேன்னு?

பூவை: எப்படிச் செய்யாமலிருப்பார்?

தங்கமணி: அப்படிச் செய்யலேன்னு என்னைக் கட்டிக்கிறீயா திருமதி?

பூவை: சரி!... சரி!... (விருட்டென்று உள்ளே போகிருள்)

(தங்கமணி தலையில் கைவைத்துக்கொண்டு உட்காருகிருன்)

மாரிசாமி : என்னடா பெண்டாட்டியைப் பறிகொடுத் தவன்போல் தலையிலே கைவைத்துப்புட்டே!

தங்கமணி : பெண்டாட்டியை மட்டுமில்லேடா...... அவள் சொத்துச் சுதந்திரம் எல்லாத்தையும் பறி கொடுத்து விட்டேன்டா!.... பறிகொடுத்து விட் டேன்!... அந்தப் பயல் பொமுனுட்டி வேஷம் போட்டுக்கொண்டு தங்கச்சி இருக்கிறதா புளு கிப்புட்டான். இந்தக் கோணங்கிப் பெருமாள் என்னடான்னு அதைக் கட்டிக்கிட்டு நெலம் வீட் டையெல்லாம் அது பேருக்கு எழுதிவைக்கப் போகிறதாம்... ஏன்டா மாரி! இது நடக்குமாடா?

மாரிசாமி : நடக்காமல் என்னடா? அந்தத் தங்கச்சி இல்லேன்னு எத்தனையோ அக்கச்சிங்க. காசுக்குப் பொண்ணு கொடுக்காதவன் கூட இருக்கிறனு?.... (யோசித்து) ஏய்! எழுந்திருடா! கையைத் தலே யிலே வைக்காதே. (பெண்போல் நின்று) தாவங் கட்டையிலே வைச்சிக்கே.

தங்கமணி : (எழுந்து) உனக்கு என்னடா வந்தது?

மாரிசாமி : ஒண்டர்புல் ஐடியாடா!...ஐடியா! இப் படிக் கொஞ்சம் உன் திருக்காதைத் திருப்பேன். (இருவரும் ரகசியமாகப் பேசிக் கொள்ளுகிறுர்கள். பின்,)

தங்கமணி : 'என் மனேவிக்கு' — என்றுதானேடா அந்தப் பெருமாள் எழுதிவைக்கும்?

மாரிசாமி : ஆமாம்... எழுதி வைச்சதும் மனைவி பம்பாய் போகிருள். உன் பேருக்கு எல்லாச் சொத்தையும் மரணசாசனமா எழுதி வச்சிபுட்டுக் கடலிலே விழுந்து செத்துப் போகிருள். உடம்பு கிடைக்கிலே. சேலை மட்டுந்தான் அகப்பட்டது.

தங்கமணி : ஆகா!...ஆகா! நான் திடீர் பணக்காரனுகவே ஆகிபுட்டேன்டா. எலே மாரி! நானும் நீயும் போயிதான்டா கார் வாங்கணும். சரி!... சரி! வா! போய் ஒரு ஹோட்டலிலே ரூம் எடுத்துக்கொள்ளுவோம். (போகிருன்)

மாரிசாமி : இம்!... இப்படியாவது ஒரு மாதம் வயிற்றைக் கழுவுவோம். பயல்கிட்டேதான் ஏகப்பட்ட பணம் மீதி இருக்குமே! நடிப்பு சக்சசாகப் போயிட்டுது, நமக்கும் ஏறக்குறைய கிடைக்கும். (போகிருன்)

திரை

திரை 4

ஒருவீதி. வீதிவிளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. மாரன் பெண் வேடத்தில் வருகிருன். அந்த வழியாக வந்த சூரியன் மாரனைப் பெண்ணென்று நினைத்து நாணிகுனிந்து போகிருன். மாரன் எட்டி அவன் முதுகுப்பக்கம் சட்டையைப் பிடித்து இழுக்கிருன்.

சூரியன் : (வெலவெலத்து) அய்யய்யோ! அம்மா! என்னை விட்டுவிடுங்கதாயே! நான் அறியாப் பிள்ளை. எனக்கு உலகமேதெரியாது. அய்யய்யோ! உங்கள் காலிலே விழுகிறேன். என்கிட்டே அதிகமாகக் காசேயில்லை.

மாரன் : அதுசரி அப்பா எங்கே?

சூரியன் : அப்பாவா? எனக்கு அப்பாவே இல்லை. செத்துப்போயிட்டாங்க. நான் அனுதையோ அனுதை!

மாரன்: என்னுடைய அப்பா எங்கேன்னு கேட்டேன்.

சூரியன் : அய்யோ உங்களுடைய அப்பாவா? இது உங்க அம்மாவைக் கேட்கவேண்டிய கேள்வி தாயே!

மாரன் : ஏய் சூரியா! மிஸ்டர் மன்னார்குடி அருணாசலம் எங்கெயென்றேன்.

சூரியன் ; (உணர்ந்து) அட்! ... சின்ன தம்பியா? எப்போ பொமுனுட்டியா மாறுனீங்க? பேப்பரிலே வரவேயில்லையே! ஓ கோ! நாளைக்குத்தான் வருமா?

மாரன் : விளையாட்டு பிறகு. அப்பா எங்கே?

சூரியன் : போனரயிலுக்கே போயிட்டாங்க. உங்களை அடுத்த கப்பலுக்கு அழைச்சிக்கிட்டு வரச்சொன்னுங்க.

மாரன் : பணமெல்லாம் எங்கே?

சூரியன் : பணமா?

மாரன் : ஆமாம்! அப்பா கொடுத்த பணத்தையெல்லாம் இங்கே எடு!

சூரியன் : சின்னதம்பி! நான் சொல்லுகிறேன்னு கோபிச்சிக்காதே. அப்பா ரொம்பவும் கோபமா போனுங்க.

மாரன் : அவர் கோபத்தைப் பார்க்காதவனுடா நான்? எவன்டா அங்கே போய் கடையிலே சுறுசுறுப்பில்லாமல் உட்கார்ந்திருப்பான்? வாழ்ந்தால் சுறுசுறுப்பாக வாழணும். இல்லை, சுறுசுறுப்பாகச் சாகணும். சோம்பேறியா இருப்பதை விடத் திருடி, கொலை செய்து, ஓடி ஒளிந்து சுறுசுறுப்பாக இருப்பது எவ்வளவோ நல்லது. சுறு

சுறுப்பு ஒன்றுல் தான்டா பெரிய பெரிய முட்டாப் பசங்களெல்லாம் மகா, மகா பெரிய மனிதனுக வாழுகிருன். பெரிய மனிதனுக, சுறு சுறுப்பு பஸ்ட்டு, பணம் உடை செகெண்டு, மூளை மூஞு வது – எப்படி?

சூரியன் : அப்படியே சங்கப் பலகையிலே ஏத்தனும் தம்பி, அப்படியே சங்கப் பலகையில் ஏத்தனும்!

மாரன் : அது சரி! நீ பணத்தை எடு! இம்... எடு! ... ஏகப்பட்ட செலவிருக்குது. (பணத்தை வாங்கி எண்ணிக்கொண்டே) கட்சி ஆரம்பித்தாகி விட் டது. பத்திரிகைக்குச் சந்தாவேறு வந்துவிட்டது.

சூரியன் : என்ன தம்பி, புரியாமல் பேசுறீங்க?

மாரன் : வா! சொல்லுகிறேன். நீதான் இனி என் கட்சிக்கு உபதலைவர், காரியதரிசி, பொக்கிஷத் தார், அங்கத்தினர், ப்யூன் எல்லாம். (போய்க் கொண்டே) ஏன்டா இப்படிப் பொமுனுட்டியைக் கண்டு பயப்படுறே?

சூரியன் : (அலட்சியமாக) இம்... இப்போ உங்களைப் பார்த்துப் பயந்தேன்னு சொல்லுறீங்களா? ஒரே நடிப்பு தம்பி, நடிப்பு! இப்படிப் பயப்படுவது போல நடிச்சாதான் நல்லா 'லவ்' பண்ணுவாங்க தம்பி, நல்லா 'லவ்' பண்ணுவாங்க! புலி, சிங்கம் யானையைப் பார்த்து எதிர்த்துநில், அப்படியே திரும்பிப் பெண்ணைப் பார்த்து பயந்துநில் —

அங்கேதான் காதலே உருவாகுது...... அய்யோ கடவுளே! நல்லா ஏமாந்துபுட்டியே தம்பி!

மாரன் : (முதுகில் ஒன்று போட்டு) பயலே! என்னு கிட்டேயே உன் வேலையைக் காட்டுறீயா! வா! ஏகப்பட்ட வேல கெடக்குது (போகிருர்கள்)

திரை

திரை 5

மாரனும் சூரியனும் ஓர் அறையில் மேசை, நாற்காலிகள் போட்டு அலங் காரம் செய்துகொண்டிருக்கிறுர்கள்.

சூரியன்: என்ன சின்னதம்பி! அந்த வீட்டுக்காரப் பயல் நூறு ரூபாய் அட்வான்ஸ் கேட்கிருன்.

மாரன்: அடுத்தமாதம் பணம்வருது, 200 ஆக வாங் கிக்கொள்ளலாமென்று சொல்லிவை! அதற்குள் எந்த மந்திரி சபையோ, எந்த ஜனுதிபதியோ!

சூரியன்: பிறகு நமக்குத்தான் இந்த வேஷம் எதற்கு?...... எனக்குத்தம்பி! வந்துதம்பி! சதா தம்பி! விதுக்கு விதுக்குன்னுதம்பி! உடம்பு தம்பி! நடுக்குது தம்பி!

மாரன்: போடா தொடை நடுங்கி! மனிதன் வேஷம் போட பயப்படக்கூடாதுடா! பயப்படக்கூடாது! உலகத்தில் எவன்டா பிறந்த மேனியோட இருக் கிருன்? ஒருத்தனேக்காட்டு. அதுசரி! அந்தப் பிளாஸ்டிக் போனுக்குக் கனேக்ஷன் கொடுத்தியா?

சூரியன்: கொடுத்துப்புட்டு, காலேக்கருக்கலிலேயே போயி குப்பைத்தொட்டியெல்லாம் தேடி என்ன

பாடுபட்டுப் பழைய கார்டுகளையெல்லாம் பொருக்கிக்கிட்டு வந்தேன் தெரியுமா தம்பி!

மாரன் : அதுசரி! அந்தப்புத்தகத்தை மேசைமேல் வைக்காதே. அது என் பாடபுத்தகம். உள்ளே தெரியாமல் கொண்டுபோடு!... ஏன்டா சூரியா! இன்னைக்கிப் பிரஸ்காரன் பத்திரிகையைக் கொடுத்துவிடுவானு?

சூரியன் : கட்டாயம் கொடுத்துப்புடுவான் தம்பி.

மாரன் : என்ன சார்ச் பண்ணினுன்?

சூரியன் : இந்தக் கதையைக் கேட்டிங்களா தம்பி? பத்து காப்பி அடிக்கவும் நூறு காப்பி அடிக்கவும் அச்சுக்கூலி ஒன்றுதானும்! வேடிகையா இல்லே!

மாரன் : ஆமாம்! அதற்கு என்ன?

சூரியன் : அதனுலே நூறு காப்பி அடிக்கச் சொல்லி புட்டேன் தம்பி.

மாரன் : அட படுபாவி! நூறு காப்பியடிக்க தாள் கிரயம் ஏகப்பட்டது ஆகுமேடா! அவ்வளவு காப்பிகளையும் என்ன பண்ணுவது? அவளுக்குக் கொடுக்க ஒரே ஒரு காப்பி இருந்தால்கூடப் போதுமே. ... இப்போ காசுக்கு நான் எங்கேடா போய்த்தொலேவேன்?

சூரியன் : அடடா!... என் தலையிலே மண்ணை வெட்டிக்கொட்டணும் தம்பி!

மாரன் : உன் தலையிலெ இருக்கிற மண்ணை வெட்டி வெளியே கொட்டத்தான் ஆயிரம்பேர் வரணுமே!

சூரியன் : கலியாணமாயுட்டா உங்களுக்குப் பணத் துக்கு என்ன தம்பி குறைவு?

மாரன் : ஆகணுமேடா! அந்தக் கோணங்கிப் பெருமாளோ, அவளுடைய சொத்துச் சுதந்திரத்தையெல்லாம் பிரித்துக்கொள்ளுவதோடு அவளையும் பணத்துக்கு விற்க திட்டம் போட்டிருக்குது. பொட்டப்பயல் ஒருத்தன் அவளை விடுவேனு என்று நிற்கிருன். ... ஏன்டா சூரியா! இந்த ரெண்டு பசங்களும் தொலைந்தாலல்லவா தேவலாம்.

சூரியன் : நாமதான் தம்பி தொலைக்கணும்!

மாரன் : ஆமான்டா! ஆமாம்! ... எனக்கு என்ன செய்வதென்று புடிபடவே இல்லையே!

சூரியன் : ரெண்டுபேரையும் ஒரே வெட்டா வெட்டிப் போட்டுட்டா என்ன தம்பி?

மாரன் : (ஆத்திரத்துடன்) ஒரே வெட்டா வெட்டிப் போட்டுட்டா நம்ம ரெண்டுபேரையும் ஒரே தூக்குக் கயிற்றிலே தொங்கவிட்டு போலீஸ் தாலாட்டுண்டா! தாலாட்டும்! ... முட்டாப்பயலே! அடிக்கிறது, குத்துறது, கொலைபண்ணுறதெல்லாம் முட்டாள், முரடன்கள் செய்கிறவேலைடா! வேலை! மூளையுள்ளவன் செய்கிறவேலையா இதெல்லாம்?

சூரியன் : சரி தம்பி!

மாரன் : ச்சே ... ச்சே ... தம்பி! தம்பி! தம்பி! ... ... மிஸ்டர் மாரன் என்று சொல்லித் தொலே! .... எங்கே சொல்!

சூரியன் : (ஸ்டெயிலாக) மிஸ்டர் மாரன்.

மாரன் : பிரமாதம்! (காலிங்பெல் ஒலிக்கிறது) ஓடு! ஓடு! அதுயார் பாரு! (சூரியன் போகிருன்) வீட்டுக்காரன் எண்ணி மூன்று நாளேக்கு நன்ருக இருக்கட்டும். இந்தக் காலிங்பெல்லேக் கழற்ருமல் இருந்தானே!

(சூரியன் ஒரு பையனுடன் வருகிருன். பையன் பேப்பர்கட்டு ஒன்றைத் தூக்கிவந்து மேசைமேல் வைக்கின்ருன்)

மாரன் : அடே! 'பழமை' அச்சாகிவிட்டதா? கொண்டா! என்னடா சூரியன் நூறு காப்பிக்கு ஆர்டர் கொடுத்தேன் என்ருயே! இருபதுகூட இருக்காது போலிருக்குதே!

பையன் : (பெருமையாக) இந்தாங்க சார். எண்பது பத்திரிக்கைக்கு இருபது ரூபாய்... இவர் என்னமோ பத்திரிகை விற்காது என்ருரே. நேத்துச் சாயங்காலமே எண்பது பத்திரிகையும் ஒரே நொடியில் பிச்சிக்கிட்டுப் போயுட்டுது சார்!

மாரன்: (விவரம் புரியாமல்) என்ன மிஸ்டர் சூரியன்?

சூரியன் : பிரஸ்காரர் ஏன் நூறு காப்பிதான் அடிக்கிறீர்கள் என்ருர். இந்த ஊரில் அதற்குமேல் விற்

காதே என்று மழுப்பிவைத்தேன். பயல் என்ன டாவென்ருல் வித்தே காட்டிவிட்டான்.

மாரன் : (தலையில் அடித்துக்கொண்டு) அய்யோ! அய்யோ!

பையன் : இன்னும் நூறு காப்பி இருந்தாலும் கடைத் தெருவிலே விக்கும் சார்.

மாரன் : இந்த நாட்டில் எதுதான் விக்காது!

பையன் : சார்! (மிகவும் ரசித்து) அந்த "மூக்கு அறுந்த முத்தாயி" கதை இருக்குப் பார் சார் (விழுந்து விழுந்து சிரிக்கிருன்) சிரித்துச் சிரித்து வயிறே புண்ணு போயிட்டுது சார்... அந்தக் காத் தான் பேசுருன் பார் சார்! "எட்டியே முத்தாயி! நீ உன் மூக்குத்தியை விற்கக் கொடுக்க மாட்டே? ....இதோ பார்! உன் மூக்கையே வித்துபுடு றேன்" — என்று சொல்லி (சிரிக்கிருன்) ஒரு பாச் சல் பாஞ்சி அந்த மூக்கை வெடுக்கென்று கடிக் கிருன் பார் சார், அல்வாதுண்டைக் கடிக்கிரு போல. (விழுந்து விழுந்து சிரிக்கிருன்) கடைத் தெருவே சிரிக்குது சார்! சிரிக்குது!... அதை எழு தின சூரியர் யார் சார்?

மாரன் : (வேதனையுடன் சூரியனைக் காட்டி) அவர் தான்.

பையன் : (கும்பிட்டு) வணக்கம் சார்!

சூரியன் : (பதற்றத்துடன் கும்பிட்டு) வணக்கம்!

பையன் : நீங்க ரொம்ப அறிவாளி சார்!

சூரியன் : (வேதனையுடன்) ஆமாம்!

பையன் : (மாரனிடம்) சார் இன்னும் நூறு காப்பி போடச் சொல்லவா சார்? கம்போசிங் இன்னும் கலைக்கிலே.

மாரன் : (எரிச்சலுடன்) போடச் சொல்! போட்டு, வித்து, அச்சுக்கூலியை எடுத்துக் கொண்டு மீதியைக் கொண்டுவா!

பையன் : சரி சார்!

மாரன் : அதில் நீ இரண்டு ரூபாய் கமிஷன் எடுத்துக் கொள்!

பையன் : நான் உங்கள் கட்சிதானே சார்!... கமிஷன் ஏன் சார் ?

மாரன் : நீ எங்கள் கட்சியா? எனக்குத் தெரியாதே! .... சரி!சரி! நீ போய்வா!

பையன் : (மிகுந்த மரியாதையுடன் கும்பிட்டு, சூரியனிடம்) வணக்கம் சார்! நான் வரட்டுங்களா?

சூரியன் : (கும்பிட்டு) வண ... க் ... கம். (பையன் போகிறுன்)

மாரன் : (எரிச்சலுடன்) எலே தடிப்பயலே! நீ என்ன காரியமடா செய்து தொலைச்சிப்புட்டே!

சூரியன் : நான் வேணுமென்று ஒன்றும் செய்யலே தம்பி.

மாரன் : சரி! சரி! தம்பி போடாதே!

சூரியன் : பார்த்தீரா மிஸ்டர் மாரன்! என் கதை எவ்வளவு நல்லாயிருக்கிறதுன்னு. நான் எழுதினுல் நல்லா விற்கும் போலிருக்குதே!

மாரன் : இம்! ... இம்! அறிவாளியெல்லாம் எழுதினுல் இங்கே எவன் வாங்குவான்?... சரி! சரி! ... கட்டைப்பிரி!
(சூரியன் கட்டைப் பிரிக்க, மாரன் பத்திரிகை ஒன்றை எடுத்து உரக்க வாசிக்கிருன்)

மாரன் : பழமை! சங்ககாலக் கட்சியின் ஒப்பற்ற பத்திரிக்கை. சங்கம் 20 காலம் 45.

முன்னேருத பெண்கள் நிறைந்த நாடு பேய் புகுந்தவீடு. கல்லடி பட்டுக்கொண்டும் பெண்கள் உரிமைக்கு வக்காலத்து. ரத்தம் சொட்டச் சொட்ட பெண்களுக்கு மதியூதி ம ... ம ... மச் சான் ... மச்சான் ... ... அறிவுரைகள்.

சூரியன் : என்ன தம்பி?

மாரன் : அட படுபாவி பசங்களா! மதியூகி மாரன் என்பதற்கு மதியூகி மச்சான் என்று அடித்து விட்டார்களே! ... ... அய்யோ! அய்யோ! இப்படி அம்பலத்திற்கு வருமென்று தெரிந்திருந்தால் ப்ரூ பாவது திருத்தித் தொலேத்திருக்கலாம்.

சூரியன் : மாரன் என்பதைவிட 'மச்சான்' என்பது நல்லாத்தானே இருக்குது தம்பி?

மாரன் : இருக்கும்டா ... இ ரு க் கு ம். (காலிங்பெல் ஒலிக்கிறது) ஏய் ஓடு! ஓடு! ... அது யார் என்று பார்! (சூரியன் போகிருன். மாரன் உடைகளேச்

சரிசெய்து கொள்ளுகிருன். சூரியனுடன் நல்ல பெருமாளும் பூவையும் வருகிருர்கள்)

மாரன் : (பெரியமனிதன் போல், கும்பிட்டு) வணக்கம்! வாருங்கள்!

பூவை : வணக்கம்! அப்பா! இவர்தான் மிஸ்டர் மாரன். 'சங்ககாலம்' — கட்சியின் தலேவர்.

நல்லபெருமாள் : (கும்பிட்டு) ரொம்ப கும்பிடுறேன்.

மாரன் : வணக்கம்! ... அதையேன் கேட்கிறீர்கள்! இந்தக் கட்சியால் என்ன என்ன தொல்லேகளே அனுபவிக்க வேண்டியிருக்கிறது.... அப்படி உட்காருங்கள்! (மூவரும் உட்காருகிருர்கள். மாரன் சூரியனேக் காட்டி) இவர்தான் மேடம், மிஸ்டர் சூரியன். சிறுகதைகள் சிரிப்பாக எழுதுவதில் மகா கெட்டிக்காரர். கட்சியின் உபதலேவர். பெரிய இரும்புத்தூண்.

பூவை : வணக்கம் மிஸ்டர் சூரியன்!

சூரியன் : (குழைந்து) வணக்கம் ... மே... மே... மே மே ...

மாரன் : சரிதான்! நீ உள்ளே போய் வேலேயைக் கவனிக்கலாம் மிஸ்டர் சூரியன். (அவன் உள்ளே போகிருன். போன் ஒலிக்கிறது. மாரன் அதை எடுத்து, ஹலோ!... ஆமாம் நான்தான் மதியூகி ... ... சிலே திறக்கிறீர்களா? ..... நல்லது...... மன்னிக்க வேண்டும். எனக்கு வேலே தலேக்கு

மேல் கிடக்கிறது. ... உள்ளூர் பிரமுகர்களை வைத்துக் காரியத்தைப் பாருங்கள்! சரி ... வணக்கம் .... பழமை வாழ்க!

நல்லபெருமாள் : எந்த ஊரிலிருந்து தம்பி போன் வந்தது?

மாரன் : அதுங்களா? ... ... நம்நாட்டுக் கடைகோடி கன்னியாகுமரி மாவட்டமில்லே? அங்கிருந்து.

நல்லபெருமாள் : ஓகோ! ... மாவட்டத்திலிருந்தா?

பூவை : மிஸ்டர் மாரன்! உங்கள் கட்சிக்கு எத்தனைக் கிளைகள் இருக்கின்றன?

மாரன் : அதையா கேட்கிறீர்கள்! ... ஏகப்பட்டது ... எட்டாயிரம், பத்தாயிரம் இருக்கலாம் ... தினம் தினம் கிளைக் கழகங்கள் நூற்றுக்கணக்கில் திறக்கலாம் ... ... வீடுகள் வாடகைக்குக் கிடைக்காத தொல்லைதான் பெரிதாகப் போகிறது! (உரக்க) மிஸ்டர் சூரியன்! மிஸ்டர் சூரியன்!

சூரியன் : (வந்து) என்ன?

மாரன் : போஸ்டு வந்திருக்கிறது பாரு. (சூரியன் போகிருன்.)

நல்லபெருமாள் : போஸ்டுமேன் கூப்பிட்ட சத்தமே எங்களுக்குக் கேட்கவில்லையே!

மாரன் : ஓகோ! அதைச் சொல்லுகிறீர்களா? நான் போஸ்டைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தேன். அதனுல் எனக்குமட்டும் கேட்டது.

நல்லபெருமாள் : இருக்கும்! கடவுளை நினைத்துக் கொண்டே இருப்பவர்களுக்குத் தான் கடவுள் தெரியுமாம். அப்படியா தம்பி?

மாரன் : ஆமாம்! ஆமாம்! நீங்கள் இதை மட்டும் நன்ருகச் சொன்னீர்கள்!

(சூரியன் ஒரு பெரியகத்தைக் கடிதங்களைக் கொண்டுவந்து கொடுத்து உள்ளே போகிருன். போன் ஒலிக்கிறது)

மாரன் : (போனில்) ஹலோ!... ஆமாம்... சொல்லித் தொலையுங்கள்!. ஒவ்வொன்றையும் நான்தான் சொல்லவேண்டுமோ? ஆயிரம் இரண்டாயிரம் செலவானுல் என்ன? நான் பணம் அனுப்பி வைக்கிறேன். காரியத்தை முடியுங்கள்!... ஆமாம் ... நமக்கு அது ரொம்ப முக்கியம்.... தொண்டர்கள் எவ்வளவு கஷ்டப்படுகிருர்கள் என்று உங்களுக்குத் தெரியவே இல்லையே!... சரி... சரி... வணக்கம்... பழமை வாழ்க!... (போனைவைத்து) தொல்லைப் பிடித்தவர்கள். ஒரு மனிதன் எதைத் தான் செய்வான்.

நல்லபெருமாள் : என்ன தம்பி! உதவித் தலைவர் உள்ளே போனுல் போன் வருது?

மாரன் : (விழித்து) அதையா கேட்கிறீர்கள்.... இது ரொம்ப பெரிய ஆபீஸ் பாருங்கள். உள்ளே ஒரு பெரிய டெலிபோன் எக்சேஞ்சே ஒர்க் பண்ணிக் கொண்டிருக்கிறது. எனக்கு வரும் முக்கியமான

'காலே' அவர் போய்தான் அனுப்பிவைப்பார். (தபால்களைப் படிக்க ஆரம்பிக்கிருன்)

நல்லபெருமாள் : உங்களுக்கு வேலே அதிகமாக இருக்கிறதா தெரியுது....

மாரன் : ஏன் அதைச் சொல்லுகிறீர்கள்!

நல்லபெருமாள் : (குழைவாக) இகி...கி... தங்காச்சி வந்தாச்சா?

மாரன் : (திடுக்கிட்டு) தங்காச்சியா?

பூவை : (பதற்றத்துடன்) ஆமாம் மிஸ்டர் மாரன்! உங்கள் பெரிய தங்கை மதி சொல்லவில்லேயா?

மாரன் : ஓ!.... அதைக் கேட்கிறீர்களா?

நல்லபெருமாள் : இன்றைக்குத்தானே வரப்போவதா பூவை சொன்னுள். அதனுல்தான் வந்தோம்.

மாரன் : ஆமாம்...ரயில் ஒழுங்காக வந்து சேர்ந்தால் அவளும் வந்து சேருவாள்.

நல்லபெருமாள் : ஏன் அப்படி? பம்பாய் ரயில் ஒழுங்கா வந்து சேராதா தம்பி?

மாரன் : அது ரொம்பவும் நீட்டுப்பாதை பாருங்கள்! ரிப்பேர் செய்வது சிரமம். இருபது முப்பது வருஷத்திற்கு ஒரு முறைதான் ரிப்பேர் செய்வதாக அரசாங்கத்திட்டம். அடிக்கடி ரிப்பேர் செய்வ

தால், ரயிலே கவிழ்ந்து உண்டாகும் பணச் செல வைவிட அதிகமாகப் போய்விடுகிறதாம்.

நல்லபெருமாள் : ஓ! அப்படியா தம்பி!

மாரன் : மேலும், ரயில் கவிழ்வதால் கற்பத் தடைக் குச் செய்யவேண்டிய செலவு வேறு அரசாங்கத் திற்குக் குறைந்து விடுகிறது பாருங்கள்.

நல்லபெருமாள் : என்ன தம்பி! இப்படி அலட்சியமா பேசுறே! ரயில் விபத்துன்னு எனக்கு என்னமோ உடம்பே நடுங்குது.

மாரன் : நாட்டிற்கு உழைப்பவர்கள் பற்று, பாசம் என்று பார்க்க முடியுமா? என்னைப் பெற்றெடுத்த அன்னை செத்துக்கிடந்தாள் பாருங்கள். அப் போது நான் எங்கே என்ன செய்துகொண்டு இருந்தேன் தெரியுங்களா? ஒரு போராட்டத்திலே குதித்துத் துப்பாக்கி முனையிலே நின்றிருந்தேன். ஆமாம்! இரண்டு கைகளையும் தூக்கிக்கொண்டு தான்.

நல்லபெருமாள் : தங்கைமேலே அக்கறையே இல்லாமல் பேசுறீயே! அது மாற்ருந்தாய் கொழந் தையா?

மாரன் : (ஏதோ கவனத்தில்) ஆமாம்!... என்ன?... என்ன?... ஆமாம்! சித்திப்பெண் தான்.

நல்லபெருமாள் : அது நல்லதுதான். உங்க பெரிய தங்கை உங்களாட்டமே விகாரமா இருந்தது....

அது சரி! உங்கள் தோப்பனுருக்கு எத்தனைத் தாரம்?

மாரன் : எங்கள் அப்பாவுக்கா?... ஆமாம்! (மெள்ள) அவள் ஏதேனும் சொல்லியிருப்பாளோ? (உரக்க பூவையிடம்) எத்தனைத் தாரம் மேடம் பூ?

பூவை : இம்!... எனக்கு ஞாபகமில்லை.

மாரன் : ஆ!... ஆ!... எனக்கும் ஞாபகமில்லை. அவர் ரொம்ப உலகத்தில் விளையாடினவர், போங்களேன்! நாலு ஐந்து தாரமிருக்கலாம். நான் சின்ன வயசிலேயே சண்டை போட்டுக்கொண்டு வந்துவிட்டேன். கட்சித் தலைவன் என்றாலே அப்பாவுக்கு 'எதிரி' என்று பொருள். (கடிதத்தைப் படித்து) என்ன பசங்கள்! இப்படியெல்லாமா கேள்வி கேட்பது!... உயிரையே வாங்கி விடுவார்கள் போலிருக்குதே!

நல்லபெருமாள் : என்ன தம்பி! கடிதாசியெல்லாம் கசங்கி அழுக்கா இருக்குது?

மாரன் : அதையா கேட்கிறீர்கள்! (படிப்பதுபோல் யோசித்து) உலகத்தில் பல பாகங்களிலிருந்து வருது பாருங்க! காரிலும், ரயிலிலும் அடிபட்டுக் கசங்கிப்போயிடுது. இந்தப் போஸ்டுமேன்கள் சீல்குத்தின கையோடு 'சார்ட்' பண்ணுகிறார்களா, அது போதாதென்று அவர்கள் போட்டிருக்கிற காக்கி அழுக்குச் சட்டையோடு அழுத்திப் பிடித்துக்கொண்டு வருகிறார்களா, கடிதம் கடித

மாகவே வந்து சேருவதில்லே. போஸ்டுமேன் களெல்லாம் வெள்ளேச்சட்டை போட வேண்டு மென்று ஒரு மாபெரும் போராட்டமே நடத்த வேண்டுமென்று ஒருதிட்டம்! போங்களேன்!

நல்லபெருமாள் : (எழுந்து) அதுசரி! நாங்கள் இப் படியே போய் ஊரை ஒரு சுத்துசுத்தி பார்த் துட்டு வருரும்.

பூவை : அப்பா! எனக்கு காலெல்லாம் வலிக்குதுப்பா!

மாரன் : நீங்கள் வேண்டுமாஞல் உள்ளே வெயிட்டிங் ஹாலில் போய் ரெஸ்டு எடுத்துக் கொள்ளுங் களேன் மேடம்.

நல்லபெருமாள் : அதுவும் சரிதான். உன்ஃன இழுத் துக்கொண்டு ஊரைச் சுத்திஞல் தப்பா முடியும்.

மாரன் : நல்லா சொன்னீங்க!

நல்லபெருமாள் : இந்த நல்லபெருமாளுக்கு உலகம் நல்லாதெரியும் தம்பி! இகி ... கி ... ஏன் தம்பி, நான் ஊரைச் சுத்திட்டு வரங்காட்டிலும் தங்கச்சி வந்துடுவாளா?

மாரன் : அய்யய்யோ! அவள் சாயங்காலமா வந் தால்தான்.

நல்லபெருமாள் : ஏன் தம்பி அப்படி?

மாரன் : அவள் எப்போதும் பகல் ரயிலிலேதான் கிளம்புவாள். அவள் ரொம்ப அழகு பாருங்க!

நல்லபெருமாள் : சரிதான் ... ... அம்மா பூ! நீபோய் வெயிட்டிங் ரூமிலே இரு!

பூவை : சரிப்பா !

நல்லபெருமாள் : நான் இதோ ஓடிவந்து விடுறேன். (போகிருர்)

(மாரன் பூவையின் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கிருன்.)

பூவை : ஏன் என் முகத்தையே பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்?

மாரன் : என்னமோ பார்த்துக்கொண்டே இருக்கணும்போல் இருக்குது. பார்த்துக்கொண்டே இருக்கிறேன். அவ்வளவுதான்.

பூவை : பின்னே புகழுங்களேன்!

மாரன்: அடபாவமே! புகழனுமா!

பூவை : காதலென்ருல் பின் என்னவாம்?

மாரன் : காதலன் காதலியைப் புகழ்வதுதான் காதலா?

பூவை : ஆமாம்! உங்களுக்குத் தெரியாதா?

மாரன் : எனக்கு முன்பின் காதலித்துப் பழக்கமில்லே! ... நான் பழையகாலத்துக் கட்சியைச் சேர்ந்தவன். சினிமா வசனத்தை மனப்பாடம் செய்யும் வழக்கமில்லாதவன். ... வேண்டுமானுல் சங்ககால வருணிப்பு வருணிக்கட்டுமா? (அவள் நாணுகிருள்) அய்யோ! வெட்கப்படக்கூட உனக்குத் தெரியுதே! தலேவி! இப்படிக் கொஞ்சம் திரும்பேன்! (அவள் நாணி எழுந்துபோய் கோணி நிற்கிருள். அவளேயே உற்றுநோக்கி எட்டிநின்று வருணிக்கிருன்) ஆகா! பூரணச் சந்திரன்! (அவள் தலேயை ஆட்ட, சடை நெளிகிறது) ஆ! பெரிய பாம்பு!... அப்படியே சந்திரனே விழுங்கிப் போயிட்டுது!... பிறைச்சந்திரன்!... வில்ரெண்டு! ... விஷம் தோய்ந்த அம்பு!... எமன்!... மீன் ரெண்டு! பவளம்!... முத்து முப்பத்திரெண்டு! கத்தரிக்கோல்பிடி!... மூங்கில்கழி!... கொடி!... ஒடிஞ்சிப்போயிடும் போலிருக்குது!... இருக்கோ இல்லேயோ! (நாணத்தில் ஒருகாலேத் தூக்கித் திரும்புகிருள்) ஆ!... நாய்நாக்கு!

சூரியன் : (ஓடிவந்து) என்ன சின்னதம்பி! என்னு! (பூவை ஓடிச்சென்று நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளுகிருள்) கசாப்பு கடைக்காரன் கனவு கண்டதுபோல உளருறீங்க!

மாரன் : (மெள்ள) ச்சே!... காதலென்ருல் என்ன பின்னே? ... என்னடா நீ ஒட்டுக்கேட்டுக்கிட்டு தான் இருந்தியா?

சூரியன் : ஒரு பெண்ணேடு பேசிக்கொண்டிருக்கிறீங் கன்னு தெரிஞ்சபிற்பாடு எப்படித் தம்பி ஒட்டுக் கேட்காது இருக்கமுடியுது !

(வெளியில் ஒரே சத்தம்: பழமை—வாழ்க, மதி யூகி மச்சான் — வாழ்க, சங்க காலக் கட்சி — கட் சிக்கெல்லாம் மூச்சி — என்ற கூக்குரல்)

மாரன் : (பதற்றத்துடன், மெள்ள) அய்யய்யோ! அது என்ன சூரியன்?...ஓடு...! என்னவோ மச் சான், மச்சான் என்று கத்துகிருர்களே! வந்ததா ஆபத்து! ஓடு! ஓடு! (சூரியன் ஓடுகிருன். மாரன் பயத்தில் துடிக்கிருன். சூரியன் திரும்பி வரு கிருன்)

மாரன் : என்ன, மிஸ்டர் சூரியன், கும்பல்?

சூரியன் : கட்சியில் சேர நிறைய ஆட்கள் வந்திருக் கிருர்கள்.

மாரன் : (மெள்ள) அய்யய்யோ!... (உரக்க) எனக்கு இப்போது ஒய்வில்லே என்று போய்ச் சொல்லி விடுங்கள்.

சூரியன் : நான் ஆனவரை சொல்லிப் பார்த்தேன். கேட்கவில்லே. என்னே அடித்து நொறுக்கிப் போட்டு விடுவார்கள் போலிருக்கிறது.

மாரன் : (மனத்தைத் தேற்றிக்கொண்டு, பெருமை யாக) நம்ம கட்சி என்ருலே மக்களுக்கு ஒரே ஆர்

வம்! வெள்ளம்போல் ஓடுவார்கள் மேடம் பூ! சரி மிஸ்டர் சூரியன்! ஒவ்வொருத்தராக வரச் சொல்... இல்லை! இல்லை! மிஸ்டர் சூரியன், நீங்களும் எதற்கும் பக்கத்திலிருப்பது நல்லது. போய் ஒரு சிறிய பையனை மட்டும் முதலில் உள்ளே அனுப்புங்கள். (சூரியன் போகிறன்) பார்த்தீர்களா மேடம் பூ! தினம் தினம் இப்படித்தான் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கட்டுப்படியாவதில்லை. (ஒரு சிறு பையன் கொடி ஒன்றுடன் காட்டுக் கத்தலாகக் கத்திக்கொண்டு வருகிறன்)

சிறுவன் : மச்சான் — வாழ்க!, பழமை — வாழ்க!, மதியூகி மச்சான் — வாழ்க! வாழ்க! வாழ்க!

மாரன் : சரிப்பா! வாழ்வோம்! உன்தொழில் என்ன?

சிறுவன் : (கத்துகிறன்) கோபாலா?— ஏன் சார்!, எங்கே போகிருய்?— சினிமா பார்க்க!, என்ன சினிமா?— ...

மாரன் : மண்ணுங்கட்டி சினிமா! இதுதான் உன் தொழிலா? நீ கட்சிக்கு ரொம்ப அவசியமானவன். ஆனல் இனி 'வாழ்க' என்று அதிகம் கத்தாதே. எதிர்கட்சிகளைச் சொல்லி 'ஒழிக' என்று கத்து.

சிறுவன் : (கத்துகிறன்) புதுமை — ஒழிக!, அணுகுண்டு! — ஒழிக! ஒழிக!

மாரன் : சரி! நீ போய் வாயிற்படியில் நின்று ஒருத்தர் ஒருத்தராக உள்ளே அனுப்பிவை! தெரியுதா!

சிறுவன் : தெரியுது சார்!

மாரன் : போ! அப்படியே மிஸ்டர் சூரியரை இங்கே அனுப்பு!

சிறுவன் : (கத்துகிருன்) புதுமை! — ஒழிக! மதியூகி மச்சான்! — வாழ்க! வாழ்க! (கத்திக்கொண்டே போகிருன்)

(சூரியன் ஒரு வாலிபருடன் — ஜிப்பா, எட்டுமுழ வேட்டி, உயர்ந்து அகன்ற உருவம் – வருகிருர்)

மாரன் : (திடுக்கிட்டு, கும்பிட்டு) வணக்கம்! வாருங்கள்!

வாலிபர் : (கும்பிட்டு, ஸ்டெயிலாக) பழமை வாழ்க!

மாரன் : அமரவேண்டும்!

வாலிபர் : (உட்கார்ந்து) தாங்கள்தானே மதியூகியென்னும் தென்னவர் குலத்தோர் ஆதவன்?

மாரன் : இல்லே! நான் மாரன்! (சூரியனேக் காட்டி) அவர் ஆதவர்!

வாலிபர் : வெகு நகைச்சுவையாகப் பேசுகின்றீர்! யான் ஒரு எம். ஏ. பட்டதாரி!

மாரன் : என்னிடம் வேலே ஒன்றுமில்லே. சாரி!

வாலிபர் : (மிடுக்காக) யான் வேலே தேடும் பொருட்டு இங்கு வரவில்லே மதியூகியாரே. யான் கூலி வேலே செய்து பிழைப்போர் இழிகுலத்தைச் சேர்ந்

தோன் அல்லன். நாம் யாருக்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம். எனக்குச் சங்ககாலப் பொன் ஏடுகளில் ஆழ்ந்த அறிவு மிகுதி. சிறிது மேடைகளில் ஏறி நின்று பேசும் ஆற்றல் அதிகம். அதைப் பயன்படுத்தவென்றே தங்கள் கழகத்தில் தொண்டனுக்குத் தொண்டனாக இருக்க ஆசைப் படுகிறேன். ஆண்டவன் மனமுவந்து அருளிச் செய்த ஆற்றலை வீணடிக்க யான் விரும்பவில்லை.

மாரன் : தாங்கள் உண்பன உடுப்பனவற்றிற்கு வழி யாதோ?

வாலிபர் : என் தந்தையார் வங்கியில் பங்குடையோர். யான் சங்கடமின்றி உண்டு உடுக்க அட்டியில்லை.

மாரன் : தங்களைப் போன்றோர் எம் கட்சிக்கு மிக மிகத் தேவை.

வாலிபர் : கட்சியில் அங்கத்தினனாக யான் எத்தனைப் பொற்காசுகளைச் செலுத்தவேண்டும்?

மாரன் : (விழித்து) என்ன திரு. சூரியரே?

சூரியன் : (வாலிபரிடம்) உங்கள் விருப்பம்.

வாலிபர் : சூரியர் நகைச்சொல் சிலம்பாடுவதில் வல்லவரே! இன்றைய பழமை இதழில் அவர் சிறு கதை இனித்தது. இருந்தும் சிறிது சங்க காலத் தமிழில் எழுதியிருப்பீராயின் கரும்பினும்

இனிதாய்ச் சுவைத்திருக்கும், கனிமொழியார் வாய்மொழியென!

மாரன் : நல்லது. ஒரு வெள்ளிப் பணம் கொடுங்கள். அது போதும். திரு. சூரியரே அன்னுருக்கு ஒரு சீட்டுக் கொடு!... தங்கள் பெயர் யாதோ?

வாலிபர் : (பணத்தைக் கொடுத்து) தொண்டை மண்டல தொல்காப்பியன். என்னுடைய அங் கத்தினர் வரிசை எண் யாதோ?

மாரன் : வரிசை எண்ணு.... வரிசை எண்.... ஆம்!... என்ன திரு. சூரியரே?

சூரியன் : ஐம்பது ஆயிரத்து ஒருநூற்று இருபது. (சீட்டைக் கொடுக்கிருன்)

வாலிபர் : (சீட்டைப் பெற்றுக்கொண்டு) நல்லது. நம் கொள்கைகள் அடங்கிய புத்தகம் யாதேனும் உளதோ?

மாரன் : அது.... அது.... இருக்கிறது. ஆனுல்... இப்போது அது அச்சுக்கு வெளியே போய் விட்டது. அதாவது ஆங்கிலத்தில் அதை அவுட் ஆப் பிரிண்ட் என்பார்கள்.

வாலிபர் : மிகவும் சிறப்புடைத் தமிழாக்கம். யான் பேசச் சிறிது 'கால்' கொடுங்களேன்.

மாரன் : காலா?...... அய்யய்யோ?...... என்னிடம் இரண்டே கால்தானே இருக்கின்றன.

வாலிபர் : நல்ல நகைச்சுவை!... இதை நான் மேடையில் கூறலாம்.... (குறிப்பு எடுத்துக்கொண்டு) சொல்லுங்கள்! எதைக் கருப்பொருளாகக் கொண்டு யான் என் சொற்போர்களை யாப்பது?

மாரன் : ஓகோ! அதுவா? சங்ககால இலக்கியங்களில் சொல்லப்பட்டவையெல்லாம் நம் கட்சியின் கொள்கைகள். கண்ணை மூடிக்கொண்டு பின்பற்ற வேண்டியதுதான். அதற்கு விதிவிலக்கு என்பதே இல்லை. இக்கால நாகரீகங்கள், விஞ்ஞானத்தை வசைபாடி, அவை மக்களின் பிசாசுகள், கூற்றுவர்கள் என்று தூற்றவேண்டும். ஆனால் சங்ககாலத்தில் அணுக்குண்டும் ஆகாயவிமானமும் இருந்தது என்பதை நிரூபிக்க மறக்கக் கூடாது. இது மிக முக்கியம். விஞ்ஞானத்தின் கொடுமையைக் காட்ட அணுகுண்டால் உண்டாகும் அல்லல்களை விவரியுங்கள்! நாகரீகத்தைத் தூற்ற அதுதான் நங்கையர்கள் இருக்கவே இருக்கிறார்களே. அவர்கள் அவலநிலையைச் சாற்றுங்கள், மொத்துங்கள் கத்துங்கள்!

வாலிபர் : நல்லது! நாளை எங்கள் கிராமத்தில் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்கிறோம். எனக்கு வேறு செய்வினை இல்லை.

மாரன் : நல்லது. (கும்பிட்டு) என்னைமட்டும் தொந்தரவு செய்யாதீர்கள். எனக்குச் செய்வேலை அதிகம்.

வாலிபர் : நன்கு சொன்னீர்! (கும்பிட்டு) பழமை வாழ்க! நான் சென்றதும் அஞ்சலில் சில கட்டுரை

களை அனுப்பிவைக்கிறேன். தயைகூர்ந்து அவற்றைப் பழமை இதழில் வெளியிடுங்கள்!

மாரன் : நல்லது. (வாலிபர் போனதும் மெள்ள) வேறு எவனும் போடமாட்டேனென்று சொல்லி விட்டான் போலிருக்கிறது. (பெருமையோடு உட்கார்ந்திருக்கும் பூவையைப் பார்த்துக் கொண்டே மாரன் பெருமூச்சு விடுகிருன். ஒரு பெரிய மனிதர் தொந்தியும் தொப்பையுமாக வருகிருர்.)

பெரியவர் : (கும்பிட்டி) கும்பிடுகிறேன்!

மாரன் : (திடுக்கிட்டு, கும்பிட்டு) நல்லது. இப்படி உட்காருங்கள்!

பெரியவர் : யாரேனும் புதுசா கட்சி ஆரம்பிக்க மாட்டாங்களான்னு கொஞ்சநாளா ஏங்கிக்கிட்டு இருந்தேன்.

மாரன் : ஏன் அப்படி?

பெரியவர் : முதலில் என் சந்தாவைப் பிடியுங்கள்! ஒரு ரூபாய்தானே?

சூரியன் : ஆமாம்! (பணத்தை வாங்கிக் கொள்ளுகிருன்.)

பெரியவர் : பெயர் கி. ரு. ம. சீ. கோபாலகிருஷ்ணன் ...... (ஆத்திரத்துடன்) இந்த அநியாயத்தைக் கேளுங்கள்! நான் இரண்டு வருஷமா "அணுகுண்டு" கட்சியில் அங்கத்தினன். கட்சிக்காக

ஏகப்பட்ட செலவு செய்தேன்னு வச்சிக்கிங்களேன். இப்போது தேர்தலிலே நிற்க எனக்கு ஒரே ஒரு சீட்டு இல்லையாம்! ஒரே ஒரு சீட்டு இல்லையாம்! என்ன அநியாயம் பாருங்க! இதை நான் எந்தக் கோவிலிலேபோய்ச் சீட்டு எழுதிக் கட்டுவேன்?... நீங்கள் உங்கக் கட்சியிலே மட்டும் தேர்தலுக்கு நிற்க எனக்குச் சீட்டு கொடுங்க, அந்தப் பசங்களை வெளுத்துவாங்கி மூக்கை அறுத்துக் காக்காயிக்குப் போட்டுக் காட்டுறேன்.

மாரன் : (நடுங்கி, தனக்குள்) அய்யய்யோ! ஆபத்தே! (உரக்க) கட்சி கொஞ்சம் பணக் கஷ்டம் உள்ளது.

பெரியவர் : நீங்க பணத்தைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். நான் ஏகப்பட்டது சேர்த்து வைத்திருக்கிறேன். (ஒரு பாரத்தை நீட்டி) இப்படி உங்கள் கையெழுத்தைப் போடுங்க!

மாரன் : (பயந்து) ஏன்?

பெரியவர் : போடுங்களேன்! நீங்கஇந்த 10-ம்நெம்பர் தொகுதியில் நில்லுங்கள்! நான் அடுத்த 11-ம் நெம்பர் தொகுதியிலே நிற்கிறேன். பணத்தை வாரி எறைச்சி ஒண்ணுலரெண்டு பார்த்து விடுவோம்.

மாரன் : (வெலவெலத்து) வேண்டுமானால் நீங்கள் நில்லுங்கள்! எனக்கு ஏன் இந்தப் பெருமையெல்லாம்?

பெரியவர் : அப்படி யெல்லாம் சொல்லக் கூடாது. நான் டெபாசிட் கட்டிவிடுகிறேன். (மற்றும் ஒரு பாரத்தை நீட்டி) சந்தேகமாக இருந்தால் இதிலும் ஒரு கையெழுத்துப் போடுங்கள்! 10, 12, ரெண்டு தொகுதிக்கும் போடுவோம். பின்னுலே வேண்டாததைத் திரும்பப் பெற்றுக்கொண்டு விடலாம். (மாரன் தயங்குகிருன்)

பூவை : (மகிழ்ச்சியுடன்) என்ன மிஸ்டர் மாரன்!

மாரன் : (பரிதாபமாக) சரி! மேடம்! (கையெழுத்து போடுகிருன்)

பெரியவர் : கட்சித்தலைவர்களே இப்படிப் பயந்தால்?

மாரன் : பயமா? இம்! பயமொன்றும்இல்லை. கட்சிக்கு முழு நேரத்தொண்டன் நான். இந்த வேலை தடைப்பட்டு விடக்கூடாதே என்று சொன்னேன். ... அவ்வளவுதான்.

பூவை : மிஸ்டர் சூரியர் நிற்கவில்லையா?

சூரியன் : (மகிழ்ச்சியுடன்) ஓ! நிற்காமல் என்ன?

பெரியவர் : நீங்கள் தான் சூரியரா? அடேயப்பா! "மூக்கு அறுந்த முத்தாயி" கதையைப் பொளஞ்சி புட்டீங்களே! (ஒரு பாரத்தை நீட்டி) இப்படி ஒரு கையெழுத்துப் போடுங்கள்! உங்களுக்கு 5-ம் நெம்பர் தொகுதி.

மாரன் : (பயந்து) அவர் எதற்கு?

சூரியன் : இருக்கட்டும் மிஸ்டர் மாரன்!

மாரன் : (மெள்ள) மண்ணை வெட்டிக்கொட்டு.

பெரியவர் : (பாரங்களைத் திரும்பப்பெற்றுக்கொண்டு) மகிழ்ச்சி! (கும்பிட்டு) நான் விடை பெற்றுக் கொள்ளுகிறேன்.

மாரன் : (தயங்கி) நம்கட்சியின் கொள்கை...?

பெரியவர் : (அலட்சியமாக) நோ! நோ! கொள்கை கிள்கை அதெல்லாம் பின்னாலே. எதையாவது சொல்லிக் கும்பலைச் சேர்ப்போம். பின்னாலே கொள்கையை எப்படி வேணுமானாலும் வைச்சிக் கலாம். பசங்கள் ஒருதரம் கட்சியிலே சேர்ந்து புட்டான்கன்னு சாகிறவரை நகரவே மாட் டான்க.

மாரன் : (ஆச்சரியத்துடன்) ஓகோ! (தயங்கி) உங்க ளாட்டம் இருப்பவர்கள் மாறினால்தான் உண்டு என்று சொல்லுங்க.

பெரியவர் : (சிரித்து மழுப்பி) நம்மாட்டம் எவன் நியாயம் அநியாயத்தைப் பார்க்கிறான்? அதுக்கு மூளைவேணும். சரி! (கும்பிட்டு) நான்வறேன்.)

மாரன் : (கும்பிட்டு) போய் வாங்க! (அவர் போன தும், மாரன் பெருமூச்சு விடுகிறான். தனக்குள்) அய்யய்யோ! நிமிஷம் நிமிஷம் ஆபத்து ஏறிக் கொண்டே போகிறதே!

(25 வயது பெண் ஒருத்தி வருகிருள். அவளைக் கண்டதும் மாரன் திடுக்கிடுகிருன்)

பெண் : (கும்பிட்டு) வணக்கம்!

மாரன் : (கும்பிட்டு) வணக்கம்! (பூவையைக் கடைக் கண்ணுல் பார்த்துக் கொண்டே) அப்படி உட்கார்ந்து பேசலாமா?

பெண் : (உட்கார்ந்து) மச்சான் யார்?

மாரன் : உங்கள் மச்சாஞ?

பெண் : இல்லை. கழகத்து மச்சான்.

மாரன் : ஓகோ! நான்தான்!

பெண் : (பூவையைப் பார்த்து) இவர்கள்தான் மச்சியா?

பூவை : (கோபமாக) மச்சியுமில்லை! குச்சியுமில்லை!

மாரன் : (வெடவெடப்புடன்) அவர்கள்தான் மேடம் பூ!.. சாரி!. மேடம் பூவை! அவர்கள்தான் முதல் போட்டு இந்தக் கழகத்தை ஆரம்பித்துவைத்த மகராசி!

பெண் : நானும் கழகத்தில் சேரணும்.

மாரன் : நீங்களுமா?

சூரியன் : இது பெண்களுக்கென்றே ஆரம்பிக்கப் பட்ட கட்சி! நன்ருகச் சேருங்களேன்! சந்தாத்

தொகை ரூபாய் ஒன்று. அங்கத்தினர் எண் 50122.

பெண் : (பணத்தைக் கொடுத்து) என் பெயர் எல். மாதவி.

மாரன் : நீங்கள் சேரவேண்டியது கட்டாயம் எங்களுடைய கட்சிதான்.... உங்களுக்கு ஆடல், பாடல், அழகு கலைகள் தெரியுமா?

பெண் : தெரியாது.

மாரன் : நல்லதாபோச்சி!

பெண் : நான் பி. ஏ. படித்திருக்கிறேன்.

மாரன் : ஆச்சரியம்!

பெண் : எங்க அப்பா சொன்னுங்க....

மாரன் : இயற்கை!

பெண் : இந்த நாட்டில் முன்னேறிய பெண்கள் மிக மிகக் குறைவு...

மாரன் : உண்மை!

பெண் : நான் பெயரளவுக்கு எது செய்தாலும் வரலாறே போற்றக்கூடிய அளவுக்குப் பெரிய தலைவியாகப் போய்விடலாம் என்ருர்கள்.

மாரன் : ஒப்பற்ற கருத்து, an idea.

பெண் : எங்கள் அப்பா இது பெண்களுக்கு நல்ல கட்சியாயிருக்கும் என்ருர்கள்.

மாரன் : உங்கள் அப்பா வேறு ஒன்றும் சொல்ல வில்லையா?

பெண் : தேர்தலுக்கு நிற்கணுமென்ருர்கள். பெண் ணென்ருல் வயதானவர்கள் எல்லோரும் ஓட்டுப் போட்டுவிடுவார்களாம்.

மாரன் : சரியென்று நான் சொன்னதா உங்கள் அப்பாவிடம் போய்ச் சொல்லுங்கள்!

பெண் : எங்கள் தொகுதியில் எங்கள் குடும்ப வைரி ஒருத்தர் தேர்தலுக்கு நிற்கிருர். நான் அவரைத் தோற்கடித்து அவமானப் படுத்தனுமாம். அப்பா சொன்னுங்க.

மாரன் : நீங்கள் தோற்றுவிட்டால்........?

பெண் : நான் பெண்தானே!

மாரன் : சரிதான்!... பெண்களுக்கு மான அவமானம் உயர்வுதாழ்வு என்பதெல்லாம் சோ கால்டு கற்பு என்பதில் மட்டுந்தானே இருக்கிறது. சரி! நீங்கள் போகலாம். மிஸ்டர் சூரியன்! அந்தச் சீட்டைக்கொடு அம்மாவிடம்!

பெண் : (சீட்டைப் பெற்றுக் கொண்டு, கும்பிட்டு) வணக்கம்! போய்வருகிறேன் மச்சான்!

மாரன் : (திடுக்கிட்டு, கும்பிட்டு) போய் வாம்மா! (போகிருள். மாரன் பூவையைப் பார்க்கிருன். அவள் கோபமாக இருக்கிருள்) மேடம் பூ! என் மேல் கோபமா?... இல்லை பொருமையா!... நான் ஒன்றும் மச்சானென்று கூப்பிடச் சொல்லவில்லை. அவளாகத்தான் கூப்பிட்டாள்.

பூவை : இனி பெண்களை நீங்கள் கட்சியில் சேர்க்கவே கூடாது.

மாரன்: சரி!.... கிழவியாக இருந்தால் கூடவா?

பூவை : ஆமாம்!

மாரன் : (தயங்கி) இது பெண்களை முன்னேற்றுகிற கட்சி....பெண்களைச் சேர்க்கக் கூடாதென்ருல்...

பூவை: அப்போதுதான் பெண்கள்முன்னேறுவார்கள்.

மாரன் : சரி!

பூவை : பெண்கள் முன்னேற்றமென்ருல் என்னவாம்?

மாரன் : அய்யோ!.... எனக்குத் தெரியாதே!

பூவை : இந்த ஆண்களெல்லாம் கொஞ்சம் முன்னேறுவதுதான்.

மாரன் : கரைக்ட்! மிஸ்டர் சூரியர்! இதை எழுதி வைத்துக்கொண்டு, அடுத்த 'பழமை' இதழில் போடுங்கள்!

சூரியன் : கட்டளை! (நல்லபெருமாள் வருகிறார்)

மாரன் : மிஸ்டர் சூரியர்! வேறு ஒருவரையும் உள்ளே சிறிது விடாதே. (அவன் போகிறான்) ஊரை யெல்லாம் நன்றாகப் பார்த்தீர்களா?

நல்லபெருமாள் : ஆனந்தமாகப் பார்த்தேன்.... எனக்கு ரயிலுக்கு நாழியாகுது.... அம்மாபூ! கிளம்பு!.... இகி....கி....தங்கச்சி வந்ததும்....

மாரன் : ஓ! ஆமாம்!.... எனக்குத் தங்கச்சி இருக்குதே!.... வந்ததும் நானே அவளை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வருகிறேன்க.

நல்லபெருமாள் : சாயுங்காலம்வரை பாரு! தங்கச்சி வரலேன்னா ஒருகடுதாசிபோடு.... பெரிய தங்கச்சி அலட்சியமா இருந்திருந்தாலும் இருந்திருக்கும்.... அம்மா! தம்பிக்குக் கும்பிட்டு விடைபெற்றுக்கோ! .... இகி.... கி.... நல்லதம்பி! பத்தாயிரத்துக்கு மேல் சொத்திருக்கும் போலிருக்குது!

மாரன் : (பூவையிடம்) இந்தாங்க! பத்திரிகை எடுத்துப் போங்கள் மேடம்! (அவள் அதை வாங்கிக் கொள்ளாமல் கோபமாகப் போகிறாள்)

நல்லபெருமாள் : இகி.... கி.... அவள் உங்கள் பெரிய தங்கச்சியைப் பார்க்க ஆவலா வந்தாள்.

மாரன் : ஓகோ! அப்படிங்களா? அய்யோ பாவம்! இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு வந்திருக்கிறீர்கள்.

நல்லபெருமாள் : அதுதான் கோபமாகப் போகிருள்... சரி! நான் வருகிறேன் தம்பி. (கும்பிடுகிருர்)

மாரன் : (கும்பிட்டு) சரிங்க! (அவர் போகிருர் மாரன் அச்சத்தோடும், பதற்றத்தோடும் துடிக்கிருன். உரக்க) ஏய் சூரியா! எலே சூரியா!

சூரியன் : (ஓடிவந்து) என்ன மிஸ்டர் மச்சான்?

மாரன் : ச்சே!... மச்சானும் மச்சான். நாம் புளுகினது போதாதென்று அவள்வேறு புளுகி வைத்திருக்கிருள்.... ஊரைவிட்டு உடனே ஓடிவிட்டால் கூடத் தேவலாம் போலிருக்கிறது.

சூரியன் : என்ன தம்பி! இப்படிக் கோழையா போயிட்டீங்க!... தேர்தலிலே நிற்கிரோம்!

மாரன் : தேர்தலிலே இல்லேடா மண்டு! தேர்தலிலே இல்லே! நடுத்தெருவிலே நிற்கிரோம்! பல நேரங்களில் தேர்தலும் நடுத்தெருவும் ஒன்றுதான். (யோசனையுடன்) திடீரென்று ஒரு தங்கைக்கு நான் எங்கே போவேன்?

சூரியன் : என்ன தம்பி ஒரு சட்டசபை மெம்பரை இப்படி ஏசுற?

மாரன் : ச்சே!.... மூஞ்சைப்பார்!... 'மிஸ்டர்–சூரியன் நிற்கவில்லையா' என்றதுதான், 'ஓ' நிற்காமல் என்ன? என்று பல்லைக் காட்டுகிருன். அழகு தான்! அசடு வழியுது! (வெளியே 'மச்சான் — வாழ்க' என்று கத்துகிருர்கள்) அட பாவமே! அவர்களை மறந்தே போனேனே! எந்தக் கட்சி

யாக இருந்தாலும் சேர ஆளிருப்பானுவோ போலிருக்குதே. நல்ல நேரம் பார்த்துத்தான் கட்சி ஆரம்பித்திருக்கிறோம். கட்சி ஆரம்பிக்க தேர்தல் நேரத்தைவிட வேறு நல்ல நேரம் இல்லவே இல்லை.

சூரியன் : மேடம் கோபித்துக் கொண்டு போனுப் போலிருக்குதே!

மாரன் : ஆமாண்டா. அந்த ட்ரஸ்சைக்கூட கொடுக்க வில்லை.

சூரியன் : இது நல்ல சகுனந்தான் தம்பி!

மாரன் : என்னடா நல்ல சகுனம்?

சூரியன் : ஆமாம் தம்பி! பொண்ணு கோபித்துக் கொண்டே வந்தால் ரொம்ப நேரம் பேசிக் கொண்டே இருக்கணுமுன்னு அர்த்தம். கோபித்துக் கொண்டு போனுல் உடனே போய் அவங்களைப் பார்க்கணுமுன்னு அர்த்தம். காதலுக்குக் கோபந்தான் தம்பி சஸ்பென்ஸ். சஸ்பென்ஸ் இல்லை, காதலிலே இன்டரஸ்டு இல்லை.

(மச்சான் வாழ்க என்ற கூக்குரல்)

மாரன் : ஏதுடா இது!.... எப்பா மிஸ்டர் சூரிய சந்திரரே! ஒரு கத்தை பேப்பரை எடுத்துக்கொண்டு வா! பசங்களிடம் ஆளுக்கு ஒரு ரூபாய் வாங்கினுல்தான் மனிதனை விடுவார்கள் போலிருக்கிறது. (மாரன் போக, கத்தை பேப்பரை எடுத்துக் கொண்டு அவன் பின்னுல் சூரியன் ஓடுகிருன்)

திரை

திரை 6

தேர்தல் கூட்டம். 'பழமை – வாழ்க', 'எங்கள் ஓட்டு – மதியூகி மச்சானுக்கே' — என்பனபோன்ற விளம்பரத் தட்டிகள் இருக்கின்றன.

சூரியன் தலைமை வகிக்க மாரன் பேசுகிறான்.

மாரன் : (கைதட்டல் முடிந்ததும் மெள்ள ஆரம்பிக்கிறான்) தலைவர் நகைச்சுவை ஆதவர் அவர்களே! பொதுமக்களே! (காட்டுக்கத்தலாக) நாடு கெட்டுவிட்டது! அணுகுண்டு ஆட்சியில் மக்கள் ரத்தக் கண்ணீர் வடிக்கிறார்கள்! ரத்தக் கண்ணீர்! வீட்டிலே ரத்தம்! காட்டிலே ரத்தம்! ரோட்டிலே ரத்தம்! கேவலம் குப்பை மேட்டிலே ரத்தம்! இந்த அவல நிலையைக் கேட்க இந்த நாட்டிலே சங்ககாலத்தைத் தவிர வேறு நாதி இல்லை! கதியில்லை! மதியில்லை! சுதியில்லை! விதியே இல்லை! விஞ்ஞானம், புதுமை, நாகரிகத்தால் நாட்டிலே, உலகத்திலே நிம்மதி அழிந்துவிட்டது. இதயத்திற்கு இன்பமில்லை! மூளைக்கு அமைதியில்லை! உடலுக்கு ஓய்வே இல்லை! இல்லை! இல்லை! இந்த நிலையில் சந்திரனுக்குப் போகிறார்களாம்! நான் உங்கள் முன்னிலையில் திறந்த சவால் விடுகிறேன்.

அங்கேயும் நிம்மதியைக் குலைக்கவா? அதையும் நரகமாக்கவா? ரயில், கார், ஆகாய விமானத்தில் சென்று பரிதாபமாகச் செத்தவர்கள் சென்ற ஆண்டு மட்டும் எவ்வளவு தெரியுமா? பத்து கோடியே எழுபது லட்சத்து நாற்பது பேர்கள். அதிலே பருவப் பெண்கள் மட்டும் சுமார் ஏறத்தாழ மூனரை கோடி. போதுமா! என் சத்தான அத்தை மகள் அப்படித்தான் செத்துப்போனுள்; கத்தாதீர்கள்!

அமெரிக்காவில் நிம்மதியில்லே! ரஷியாவிலே நிம்மதியில்லே! கிராமம் நோக்கி ஓடுகிருர்கள்! பிரான்ஸ், ஸ்வீடன், டென்மார்க் இங்கெல்லாம் புதுப்புது மனநோய்கள் நாளும் வளர்ந்துகொண்டிருக்கின்றன. நம் முன்னேர்கள் மனநோய் என்ற வார்த்தையையே அறியாதவர்கள்! அறியாதவர்கள்!

எனக்கு அடுத்தக் கூட்டங்கள் இருப்பதால் எனக்குத் தெரிந்த — ஏன்? மேடைப் பேச்சாளர்கள் அறிந்த — அறிவைச் சில வார்த்தைகளில் வடித்தெடுத்துக் கொடுத்து முடித்துக் கொள்ளுகிறேன்.

(உரக்க) கன்னியர் (அத்தைமகள் உள்பட), அறிவு, மனேதத்துவம் என்ற சைக்காலஜி, ப்லாசபி என்ற உயிர்த்தத்துவம், சனநாயகம், மக்களாட்சி, சர்வாதிகாரம், போராட்டம், ரத்தம், கைகால், பொருளாதாரம், சமுதாயம்,

காதல், தியாகம், மதம், ஆத்மீகம், லோகா யுதம், நாத்தீகம், விஞ்ஞானம், சுதந்திரம், சமத் துவம், சகோதரத்துவம், வாழு வாழவிடு, வாழ வை வாழு, கிட்லர், முசோலினி, லெனின், ஸ்டா லின், ஆப்ரகாம் லிங்கன், கென்னடி, டார்வின், காந்தி, நேரு, பிளாட்டோ, அரிஸ்டாட்டில், சாக் ரட்டீஸ், அமெரிக்கா, ரஷ்யா, ஐக்கியநாட்டுச் சபை, இளங்கோவடிகள், திருவள்ளுவர், கம்பன், எனக்குச் சிலைவை (கும்பிட்டு) எனக்கு ஓட்டுப் போடுங்கள், வணக்கம்! பழமை வாழ்க!

(உட்காருகிருன். கைதட்டல், சீட்டியடித்தல் ஒலி வானை முட்டுகிறது)

சூரியன் : (எழுந்து) மதியூகி அவர்களின் ஒப்பற்ற சொற்பொழிவைக் கேட்டீர்கள்! அவர்கள் அறிஞர் களுக்கான பாடத்திட்டத்தை வகுத்துக் கொடுத் தார்கள்! வாங்கிக் கொண்டீர்கள்! (உரக்க) அவ ரைத் தலைவராகப் பெற்றது நம் பாக்கியம்! நம் பாக்கியம்! (சோடா குடித்து) இனி அவரைத் தவிர மற்ற எவருக்கும் ஓட்டுப்போட மாட்டீர்கள். மண்ணை வாரிப்போட்டு அவர்கள் நெஞ்சத்தில் ஓட்டையைத்தான் போடுவீர்கள் என்பது கைப் புண்! வெள்ளிடை மலை!

என் தொகுதிக்கு நான் உடனே போக வேண்டியிருப்பதால் இத்துடன் கூட்டத்தை முடிக்கிறேன்.

(கத்துகிருன். அதற்குக் குப்பல் எதிரொலிக்கிறது)

பழமை! — வாழ்க!

மதியூகி மச்சான்! — வாழ்க!

எங்கள் ஓட்டு! — மச்சானுக்கே!

எங்கள் ஓட்டு! — மச்சானுக்கே!

எங்கள் ஓட்டு! — மச்சானுக்கே!

திரை

திரை 7

பூவையின் வீட்டுக்கூடம். முன் இரவு தங்கமணி பெண்வேடத்தில் மாரிசாமி யோடு வந்திருக்கிருன். இருவரும் அடையாளம் தெரியாத அளவிற்கு ஒப் பனை செய்து கொண்டிருக்கிருர்கள்.

தங்கமணி : ஏய் மாரி! என்னடா ஒருத்தரையும் காணேம்?

மாரிசாமி : சே!... சே! அண்ணுவென்று சொல்லித் தொலை.

தங்கமணி : என் தொடை நடுங்குதடா!

மாரிசாமி : நல்லா பயப்படாமல் இரு! நான்பார்த்துக் கொள்ளுகிறேன். (நல்லபெருமாள் சாதாரண துணியில் தைத்த பாடி, நான்குமுழ வேஷ்டியு டன், வருகிருர்) சரி! பெருமாள் வருது!

(வந்தவர் தங்கமணியைப் பார்த்து அப்படியே வாயைப் பிளந்து கொண்டு நிற்கிருர்.)

மாரிசாமி : என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?

நல்லபெருமாள் : இம்... இகி... கி... வாங்க! வாங்க! அதுதான் பம்பாய்ப் பொண்ணு?

மாரிசாமி : ஏன் சந்தேகப் படுறீங்க?

நல்லபெருமாள் : நல்லா அழகா இருக்குதேன்னு பார்த்தேன். இகி... கி... ஒரு கடுதாசி போட்டிருந்தால் நானே ரயிலடிக்கு ஓடிவந்திருப்பேன்... ... அக்கா வந்து சொன்னதும்தான் கிளம்பி வந்தீங்களா?

மாரிசாமி : ஆமாம்! ஆமாம்! கிளம்பிவந்தோம்.

நல்லபெருமாள் : நிக்கிறீங்களே. ஏ பம்பாய்ப் பொண்ணே! உட்காரேன். (சோபாவில் உட்காருகிறுர்கள்) ராத்திரி நேரத்திலே வந்திருகிறீங்க! நல்லா உபசரிக்கக்கூட ஏற்பாடு செய்யலே.

மாரிசாமி : நமக்குள்ளே எதற்கு உபசாரம், விடுங்க! நாங்களும் முன்னேரத்திலேயே வரணுமென்றுதான் கிளம்பிவந்தோம். ரயில் 728 நிமிஷம் லேட்டு... மேலும்... மேலும் தங்கச்சி ராத்திரி நேரத்திலேதான் ரொம்ப அழகா இருக்கும்.

நல்லபெருமாள் : இகி...கி...இரவு நேரத்திலே அழகா இல்லாத பொண்ணுகூட இருக்குதா?... நேரே பம்பாயிலிருந்துதான் வறீங்களா?

மாரிசாமி : ஆமாம்...ஆமாம்... ஒரே நேரா பம்பாயிலிருந்துதான் வரோம். ரயில்பாதை நேராத்தானே இருக்குது?

நல்லபெருமாள் : அந்தக் கட்சிக்காரப்பயல் வரலியா?

மாரிசாமி : (விழித்து) கட்சிக்காரப்பயலா?

நல்லபெருமாள் : அவன்தான் உங்கஅண்ணன்! சங்க காலக் கட்சிப்பயல்! மதியூகி மச்சான்!

மாரிசாமி : ஓ!... ஆமாம்... அவரைச் சொல்லுறீங் களா?

நல்லபெருமாள் : மாற்ருந்தாய்கொழந்தைகள்தானே! அதுதான் மறந்தே போயிட்டீங்க. அவனுக்கும் உங்களை நல்லாத் தெரியாது போலிருக்குது. சின்னவயசிலேயே அப்பாக்கிட்டே சண்டை போட்டுக்கிட்டதா சொன்ஞன்.

மாரிசாமி : ஆமாம்!... ஆமாம்! தங்கச்சி கைக் குழந்தையா இருக்கும்போது பார்த்தது. பிறகு நாங்க பம்பாய் போயிட்டோம்...பெரிய சண்டை.

நல்லபெருமாள் : இகி...கி...எனக்கும் புரியுது. இந்த நல்லபெருமாளுக்கு எல்லாம் தெரியும் பம்பாய்ப் பொண்ணே....... ஏ பம்பாய்ப் பொண்ணே! பேசேன்!

மாரிசாமி : அவள் ரொம்ப வெட்கப்படுவா!

நல்லபெருமாள் : இகி...கி...கலியாணம் ஆகலேபாரு, அதுதான். கலியாணமாகுமுன் பொண்ணுகளுக்கு ரொம்ப வெட்கமாகத்தான் இருக்கும்...பிறகுதான் நமக்கு வெட்கமா இருக்கும்.

மாரிசாமி : ரொம்ப சின்னவயசு பாருங்க.

நல்லபெருமாள் : சின்னவயசு பொண்ணுங்க வெக்கப் படுகிறது நல்லதுதான்... இந்தக் காலத்துப் பசங்

களுக்குத்தான் வெட்கமே இல்லையே! மனையிலே உக்காந்திருக்கும் போதே யாரு முன்னடி கண்ணடிக்கிறதுன்னு போட்டியில்ல போடுதுங்க.... இகி...கி... இதுகூட நல்லாதான் இருக்குது. கலியாணமுன்னு ஒரு ஜாலிதானே! (தங்கமணி வீட்டைச்சுத்திப் பார்க்கிருன்) என்னபொண்ணே வீட்டை இப்படிப் பாக்குறே? இனி இது உன் வீடுபோல. இகி...கி...தம்பி தங்கச்சியை அழச்சிக்கிட்டுபோய் வீட்டையெல்லாம் சுத்திப் பாருங்களேன்.

மாரிசாமி: சரிங்க மாமா! (போகிருர்கள்)

நல்லபெருமாள்: இகி...கி...மாமாவாம்! மாமா! (அவசர அவசரமாக, உடுத்தத்தொடங்கி) அவள் திரும்பி வரங்காட்டிலும் ட்ரஸ் பண்ணிக்கிறேன். (சட்டையைப்போட்டு, தலைவாரி, பௌடர் அடித்துப் பொட்டு வைத்துக் கொள்ளுகிருர். அங்கவஸ்திரத்தை எடுத்துப் போட்டுக்கொள்ளுகிருர்) வந்து அப்படியே அசந்து போயிடனும். (மாரன் ஒருதாள் சுருளுடன் வருகிருன்)

நல்லபெருமாள்: அட!...அட! வா மாப்பிள்ளை!

மாரன்: (மெள்ள) அய்யய்யோ! மாப்பிள்ளையா?

நல்லபெருமாள்: தம்பியும் தங்கச்சியும் வந்திருக்கிறது தெரிஞ்சிதான் வந்தியா மாப்பிள்ளை?

மாரன்: (விழித்துத் தயங்கி) வந்துட்டாங்களா மாமா? விவரமே தெரியவில்லையே என்றுதான் ஓடிவந்தேன்.

நல்லபெருமாள் : இப்போதான் வந்தாங்க. வீட்டைச் சுத்திப் பாக்கிருங்க. இகி...கி... தங்கச்சி நல்லா யிருக்காளே! நீ சொன்னது சரிதான் மாப்பிள்ளை. அவர்களுக்கு உன்னைப் பிடிக்கவே இல்லை...... இருந்தாலும் பாரு மாப்பிள்ளை! அவங்க உன் அப்பாவுக்குப் பொறந்தவங்க. நீ அவங்களை மதிக்காம இத்தனைப் பெரிய மனுசனு இருப்பது எனக்குப் பிடிக்கலே.

மாரன் : நீங்கள் சொல்லுவது சரிதான். அவனவன் தம்பி தங்கை இல்லாமல் என்ன பாடுபடுகிருன்! தானே வருகிறவர்களை நான் உதைச்சித் தள்ளக் கூடாதுதான்.

நல்லபெருமாள் : இதோ! அவங்களே வந்துட்டாங் களே.

(தங்கமணியும் மாரிசாமியும் வந்து மாரனைப் பார்த்ததும் மலைத்து நிற்கிருர்கள்)

நல்லபெருமாள் : என்ன இப்படி அசந்து போயிட் டீங்க! நான் கோட்டுப் போட்டுக்கிட்டு இருந்தால் இன்னும் எவ்வளவு ஏல்லா இருக்கும் தெரியுமா பொண்ணே!....ஓ! தம்பியைப் பார்க்கிறீங்களா? இதுதான் உங்க அண்ணன். தெரியிலே.

மாரன் : தம்பி! (என்று ஓடி மாரிசாமியைக் கட்டி அணைத்துக்கொள்ளுகிருன்) நான் எத்தனைப் பாக் கியம் செய்தவன்! இப்படி ஒரு அழகான தங்கை

யையும், ஒரு எடுப்பான தம்பியையும் அடைய! .... இத்தனை நாள் தனியே இருந்தேனே! நான் பாவி!

நல்லபெருமாள் : இனி ஒத்துமையா போயுடுங்க மாப் பிள்ளை. பிறகு எப்போது அண்ணன் தம்பி, அண்ணன் தங்கையாப் பொறக்கப் போறீங்க?

மாரன்: (மாரிசாமியையும் தங்கமணியையும் பார்த்து) என் கடிதத்தைப் பார்த்துத்தான் வந்தீங்களா? ஏது கடிதம்போட்டு ரொம்பநாளாச்சே என்று நெனைச்சேன். நல்ல வேளை. பழைய டைரியிலே பம்பாய் அட்ரஸ் இருந்தது....பயலே! அப்படியே அப்பாவுக்கு மறு பொறப்பா இருக்கிறீயே! தங் கச்சி அப்படியே சின்னம்மாவை உரிச்சிக்கிட்டு வந்திருக்குது.

மாரிசாமி : ஆமாம் அண்ணு! நான் அப்பாவாட்ட மும் அவள் அம்மாவாட்டமும் இருக்கிறது பம்பாய் பிரசித்தம்!

மாரன் : இருக்காதா பின்னே! பெரிய நகரம் பாரு.

நல்லபெருமாள்: இகி...கி... அழகாயில்லாத பொண்ணு போல ஏகப்பட்ட துணிமணி கட்டியிருக்குதே!

மாரன் : ஓ! அதைக் கேட்கிறீங்களா? பவுடர்விலை துணிவிலையைக் காட்டிலும் அதிகமாகப் போயிட் டுது பாருங்க. அதுதான் காரணமாக இருக்கும்.

நல்லபெருமாள் : என்ன மாப்பிள்ளை! இந்த நல்ல பெருமாளுக்குத் தெரியாததைச் சொல்லுறே?

மாரன் : அழகுக்கும், பவுடர், துணிவிலைக்கும் ரொம் பத் தொடர்பு உண்டுங்க. பவுடர் விலை குறைய குறைய, அழகு அதிகமாக அதிகமாக, ட்ரஸ் குறைந்து கொண்டே வரும். பாவம்! பவுடர் விலை ஏற ஏற, அழகு குறைய குறைய, ட்ரசும் அதிகமாகிக் கிட்டே வரும்.

நல்லபெருமாள் : நல்லா இருக்குதே!

மாரிசாமி : அண்ணு ரொம்ப அறிவாளிபோல இருக் குது!

நல்லபெருமாள் : அறிவாளிக்கும் முட்டாளுக்கும் என்ன மாப்பிள்ளை பெரிய வித்தியாசம்? எனக்கு என்னமோ அது தெரிகிறதில்லை.

மாரன் : அறிவாளிக்கும் முட்டாளுக்கும் உள்ள வித் தியாசத்தைத் தெரிந்தவங்க அறிவாளி. அது தெரியாதவங்க முட்டாள். அவ்வளவுதான் மாமா!

நல்லபெமருாள் : (பரிதாபமாக) இகி...கி...

மாரன் : மேடம் எங்கே மாமா?

நல்லபெருமாள் : அவளா? உயரே அறையிலே இருக் கிருள். நீதான் போயி இட்டுக்கிட்டு வாயேன்.

மாரன் : சரி!... நீங்க சொல்லுறீங்க! போகவில்லை... கோபித்துக் கொள்ளுவீர்கள்! (போகிருன்)

தங்கமணி: அண்ணு! (மாரிசாமியின் பக்கம் போகிருன்)

நல்லபெருமாள்: (குழைந்து) இகி...கி... இங்கே என்னைக் கொஞ்சம் பாரேன் பொண்ணே! ஏ பொண்ணே!

தங்கமணி: (வெட்கப்பட்டு) போங்க அத்தான்!

நல்லபெருமாள்: (தனக்குள்) அய்யோ! அய்யோ! வாலிபப் பசங்களைக் கூப்பிடுருப்போல அத்தாங்கிருளே...ரத்தம் அப்படியே ஜிவ்வுன்னு அய்சா உரையுதே!...இகி...கி நான் அத்தானும்! அத்தான்! இருபது வருஷத்துக்கு ஒருதடவை இப்படி ஒரு புதுபுது பொண்ணைக் கட்டிக்கிட்டா மனசன் ஏன் கிழவனு போவான்? இல்லே! ஏன் போவான்கிறேன்! (உரக்க) ஏ பம்பாய் பொண்ணே! உன்பேரு என்ன?

தங்கமணி: லேடி தங்கம்.

நல்லபெருமாள்: இகி...கி. உன்னை லேடியில்லேன்னு யார் சொன்னது! வாயேன் பொண்ணே! இப்படி சோபாவிலே உட்கார்ந்து ஹயா செத்தே பேசுவோம் (தங்கமணி உட்காருகிருன்) நல்லா உட்காரு பொண்ணே! நான் வெட்கப்படுறேனுபார்! ஏன் பொண்ணே! அந்தக் கட்சிக்காரப்பயல் நல்லகாசு உள்ளவனுக இருப்பான் போலிருக்குதே!

தங்கமணி: ஏனும் கேட்கிறீங்க?

நல்லபெருமாள்: அந்தப் பூவை நம்ம கலியாணத் துக்குப் பிறகு வீட்டிலே இருந்தா இகி...கி... நாம் ரெண்டுபேரும் ஜாலியா இருக்கவே முடி யாது பொண்ணே! பீடை! பணக்காரப் பயலாக இருந்தா ஒரு பத்து பதினையாயிரத்தை வாங்கிக் கிட்டு அவளை அவன் கழுத்திலே கட்டிப்புடலா மென்று நெனைக்கிறேன்.

தங்கமணி: (திடுக்கிட்டு) அய்யய்யோ!

நல்லபெருமாள்: (துடித்து) என்ன பொண்ணே? என்ன?

தங்கமணி: (உணர்ச்சியை மறைத்து)ஒண்ணுமில்லே. — மூட்டைப்பூச்சி.

நல்லபெருமாள்: (தனக்குள்) அய்யோ! என்பேரு இவளுக்கு எப்படித் தெரிஞ்சிது? பொருமை புடிச்ச இந்த ஊர்ப்பசங்கதான் பூவை நெலத் திலே வருகிறதைத் திண்ணுக் கொழுக்கிறேன்னு, மூட்டைப்பூச்சி என்கிருனுவோ! இவளும் சொல் லுருளே! (உரக்க, பரிதாபமாக) அப்படியெல் லாம் சொல்லாதே பொண்ணே! (அவன் சொரிந் துவிட்டுக்கொள்ளுகிருன்) ஓகோ! மூட்டைப்பூச்சி கடிச்சிப்போச்சா?...அதுதானே கேட்டேன்.

தங்கமணி: அண்ணுதான் தேர்தல் கீர்தலுன்னு அலையுமே! எங்கே கலியாணம் பண்ணிக்கப் போகுது?

நல்லபெருமாள்: அதனாலே என்ன பொண்ணே? பணத்தைக் கொடுத்து இந்த வீடு நெலத்துக்கும் அவனுக்கும் பாத்தியமில்லேன்னு எழுதி கொடுத்துடட்டும். கலியாணத்தை எப்போதாவது வச்சிக்கிட்டுமே. நமக்கு என்ன?...பொண்ணே! இனி நம்ம ரெண்டுபேரும் ஒண்ணு. உன்னுகிட்டே சொன்ன என்ன? (ரகசியமாக) இந்த வீடு நெல மெல்லாம் அந்தச் சிறுக்கிப் பூவையிது. அதனல் தான் சொல்லுகிறேன். உன் பேருக்குச் சொத்து வந்ததும் அவளாவது, அவள் ஆம்படையானவது தொந்தரவு பண்ணக்கூடாதுபாரு! அதுக்குத் தான் சொல்கிறேன்!...இகி...கி எப்படி?

தங்கமணி: நல்லா இருக்குது.

நல்லபெருமாள்: இந்த நல்லபெருமாளுக்கு உலகம் நல்லாத்தெரியும் பொண்ணே! நம்ம பொளான்னு பொளான் தான். இகி....கி.... தேன்நிலவுக்கு எங்கே போவோம்?.... திருப்பதி, ராமேஸ்வரம், காசிக்குப் போவலாமா?

தங்கமணி: அய்யோ! கலியாணம் ஆனவுடனேவா?....கோடைக்கானல் நீலகிரிக்குப் போனல் என்னவாம்?

நல்லபெருமாள்: புத்திரபாக்கியம் வேணுமுன்னுதான் பொண்ணே அங்கெல்லாம் போகணும்....இகி..கி....தெரியாம பேசுரியே!

(மாரனும் மாரிசாமியும் வருகிருர்கள். மாரன் கையில் தாள்சுருள் இல்லை)

நல்லபெருமாள் : பூவை எங்கே தம்பி?

மாரன் : அவுங்க ரொம்ப பிசியா இருக்காங்க.

நல்லபெருமாள் : விருந்தாளிகள் வந்தாலே அப்படித் தான் இருப்பாள். இகி....கி...என்னு பெரிய மாப் பிள்ளை! நீ பெரிய பணக்காரனு இருப்பே போலி ருக்குதே?

மாரன் : அடடா! என் வாயாலேயே சொல்லச் சொல் லுகிறீர்களே! சொல்லாவிட்டால் கோபித்துக் கொள்வீர்கள். நான் ஏழையென்று சொன்னுல் பொய் சொன்னதா ஆகும்...

நல்லபெருமாள் : இப்படி ஒரு கோடி மட்டும் காட்டேன் மாப்பிள்ளை. இந்த நல்லபெருமாள் மத்ததை யெல்லாம் புரிஞ்சிக்குவான்.

மாரன் : நான் பெரிய கட்சித்தலைவன் பாருங்க. கட்சித் தொண்டர்கள் அத்தனைபேர் சொத்துச் சுதந்திரமும் என்னுடையது போல்தான்.... எல்லாவற்றையும் சிறுக: சிறுக நன்கொடை, நிதி, உதவி என்று வாங்கிவிடுவேன்.... இன்னும் இரண்டு மூன்று பத்திரிகைகள்வேறு ஆரம்பிக் கிறதா திட்டம்.

நல்லபெருமாள் : கட்சிக்கா தம்பி?

மாரன் : பத்திரிகை ஓடினுல்தான் தெரியும். லாசில் ஓடினுல் கட்சிப்பத்திரிகை. லாபத்தில் ஓடினுல் என் சொந்தப் பத்திரிகை.

நல்லபெருமாள் : இகி....கி....பெரிய மாப்பிள்ளே நல்லாப்பேசும்!....ஏன் மாப்பிள்ளே பூவையை உனக்குப் புடிக்குதா? (அவன் திடுக்கிடுவதுபோல் நடிக்கிருன்) என்ன தம்பி யோசிக்கிறே?

மாரன் : ஒண்ணுமில்லே. மேடம் ரொம்பவும் அழகாச் சேன்னு நினேக்கிறேன்.

நல்லபெருமாள் : பயப்படாதே தம்பி! அவள் ரொம்ப நல்ல பொண்ணு. இகி....கி....அவளே நான் ரொம்பவும் கஷ்டப்பட்டுப் படிக்க வைச்சேன்.

மாரன் : (விடுவிடென்று) அதனுலே அவளேக் கட்டிக்கிறதுன்னு நான் பத்தாயிரம் ரூபாய் தரணும். இந்த வீடு நிலமெல்லாம் உங்களுதுதான். இருந்தாலும் எங்களுக்குச் சொந்தமில்லேயென்று எழுதிக்கொடுக்கணும் இல்லேங்களா?

நல்லபெருமாள் : மாப்பிள்ளே நல்லாத்தெரிஞ்சித்தான் வைச்சிருக்குது. மாப்பிள்ளேக்கு உலக அனுபவம் அதிகம்!

மாரன் : நான் தேர்தல் வேலேகளில் ரொம்பவும் மும்முரமாக இருக்கிறேன்.

நல்லபெருமாள் : அதனுல் என்ன மாப்பிள்ளே? பணத்தைக் கொடுத்துக் கையெழுத்தைப் போட்டுடு... கலியாணத்தை மெதுவா வைச்சிக்கியேன். என்னவோ மாப்பிள்ளே! இந்த நல்லபெருமாள் சொல்லுகிருனென்னு நினேக்காதே. பத்தாயிரமும்

கையெழுத்தும் வந்தாதான் உன் தங்கச்சிக்கும் எனக்கும் கலியாணம்.

மாரிசாமி : அய்யய்யோ! என்ன மாமா இப்படிச் சொல்லுறீங்க! தங்கத்துக்கு உங்களை நல்லா புடிச்சிப்போச்சி. அவள் பெரிய பத்தினி மாமா! ஒருத்தரை ஒருதரந்தான் விரும்புவாள்! அப்படி விரும்பிவிட்டால் அவரையே மணந்துகிட்டாதான் உண்டு. இல்லை, பம்பாய்க் கடலிலேதான் மிதப்பாள். பெண்பாவம் பொல்லாதது மாமா!

நல்லபெருமாள் : (மெள்ள) அதைத் தெரிந்துதானே நானும் சொல்லுறேன் (உரக்க) என்னமோ இனி இந்த நல்லபெருமாள் ஒன்றும்சொல்லமாட்டான். தங்கச்சிமேலே அன்பு இருந்தால் உன் அண்ணுக பார்த்து நடந்துகிறபடி நடந்துகிட்டும். எல்லாம் அவன் தங்கச்சிக்குத்தானே!

மாரன் : மேடம் பூவுக்கு என்னைப் பிடிக்கவேயில்லையே.

நல்லபெருமாள் : அவளுக்குப் பிடிச்சா என்ன பிடிக்காட்டா என்ன மாப்பிள்ளை? அவளை வளர்த்தவன் நான். எனக்குப் பிடித்தால் சரிதான்.

மாரன் : எனக்கும் அவளைப் பிடிக்கவே இல்லையே!

நல்லபெருமாள் : அதற்கு வேறு மாப்பிள்ளையைப் பாரு. அவ்வளவுதான். பத்தாயிரமும் கையெழுத்தும் வந்த அன்னைக்கு ராத்திரியே சாதோடு

காது வைச்சமாதிரி என் கலியாணத்தை வைச் சிக்குவோம். இல்லை? ஆமாம்! இல்லை.

மாரன் : ஏன் அப்படிச் சொல்லுறீங்க?

நல்லபெருமாள் : பகலிலே வைச்சா ஏகப்பட்ட செல வாயிடும். அதோட இந்த ஊர்ப்பசஞ்க பொருமை புடிச்சவனுவோ....இந்தப் பசங்களை இரண்டாம்தாரம், மூன்ரும்தாரம் கட்டிக்க வேண்டாமுன்னு யார், கையைப் பிடிச்சிக் கொண்டது?.... இல்லை, நானே கேட்கிறேன்!

மாரன் : பாவம்! அவங்க முதலிலே கட்டிக்கொண்ட வர்களுக்குக் கெட்டி ஆயிசுபோல இருக்குது!

நல்லபெருமாள் : இகி...கி...என் முதல்தாரம் ரொம் பக்கெட்டவள்தான். அதுக்காக நான் ஒண்ணும் அவளைக் கொண்ணுபுடலே மாப்பிள்ளை. அவளா தான் மாடிப்படியிலே தவறிவிழுந்து உருண்டு செத்துப்போனுள். ஊரிலே சொல்லுறதையெல் லாம் நம்பாதே.

மாரன் : (மெள்ள) அந்தப் பாவத்தைவேறு செய்தி ருக்கிறீயா? (உரக்க) எனக்கு ரயிலுக்கு நாழி யாகுது. என்னம்மா தங்கம்! சாமி! ஊருக்குப் போகலாமா?

மாரிசாமி : (திடுக்கிட்டு) ஊருக்கா?...வந்து...நாங்க ளும் எடுத்துத் தங்கியிருக்கிரும்.... நாளைக்கு வேணுமாஞல் வருகிருேமே.

மாரன் : சரி! உன்விருப்பம். (ஒரு சீட்டைக் கொடுத்து) இந்தா என் விலாசம். நாளைக்குக் காலையிலேயே வாங்க! நான் ஆவலோடு எதிர் பார்த்திருப்பேன். (கும்பிட்டு) நான் எல்லோருக் கும் வருகிறேன். (விடைபெற்றுப் போகிருன்)

நல்லபெருமாள் : என்ன சின்ன மாப்பிள்ளை! பயலைப் புடிச்சிபுடுங்க. உங்கள்மேலே ரொம்ப அன்பா யிருக்கிருன்....பொண்ணே! நான் சொன்னது ரகசியமாகவே இருக்கட்டும்.

மாரிசாமி : நாங்கள் போய்வருகிரும் மாமா!

நல்லபெருமாள் : அடடா! இத்தனைப் பெரியவீடு உங் களுக்காக இருக்குது.

மாரிசாமி : இருந்தாலும் ராத்திரிபாருங்க, நாலுபேர் தப்பாக நினைப்பாங்க!

நல்லபெருமாள் : அதுவும் சரிதான்இகி...கி.... பம் பாய்ப் பொண்ணே! காலையில் வா! (தங்கமணி கோபமாகப் போகிருள்) அடேயப்பா! கோபத் தைப் பாரு!

மாரிசாமி : (கும்பிட்டு) ஒருமுடிவோட வருகிரும் மாமா.

நல்லபெருமாள் : சரி! இகி...கி...இந்த நல்லபெருமாள் எப்போதும் ரெடி (மாரிசாமி போகிருன்) பொண்ணு நல்லாதான் இருக்குது. சரி பார்ப்

போம்! புத்திசாலி பொண்ணுபோலதான் தெரியுது. இவ்வளவு ஆஸ்தி பாஸ்தியையும் வீட்டுட்டு எங்கேயும் போயிட மாட்டாள். அவள் பேருக்குச் சொத்தை மாத்திபுட்டாதான் தகராறு இல்லாம இருக்கும். இம்!...பாப்போம்! ஆண்டவன் இருக்கான். (ஒரு பெருமூச்சுவிட்டு உள்ளே போகிருர்)

திரை.

திரை 8

ஒருவீதி. மாரிசாமியும் தங்கமணியும் (பெண் வேடத்தில்தான்) பேசிக்கொண்டு வருகிறுர்கள்.

மாரிசாமி: பயலுக்கு உண்மையாகவே தம்பி தங்கச்சி இருக்கிருப்போல இருக்குது. நல்லா ஏமாந்து போயுட்டான்.

தங்கமணி: பம்பாயிக்குக் கடிதம் போட்டதா சொன்ஞனே! அங்கிருந்து அவங்க வந்துட்டா என்னடா செய்யிறது?

மாரிசாமி: அட மூளேகெட்ட பயலே! அவன் எப்பவோ அப்பாச்சி ஆண்ட காலத்து அட்ரசுக்கு எழுதிப்போட்டிருக்கிருன் போலிருக்குது. கடிதம் போட்டு நாளாச்சின்னு பயல் சொன்ஞனே ஞாபகம் இருக்குதா? வருவதாகஇருந்தால் எப்பவோ வந்திருக்கவேணுமேடா!

தங்கமணி: எலே மாரி! தம்பி தங்கச்சி என்றதும் பயல் எப்படித் துடிக்கிருன் பார்த்தியாடா? அப்படியே குதிகுதின்னுல்ல குதிக்கிருன்!

மாரிசாமி: பயலேயே வைத்துத்தான்டா காரியத்

தைச் சாதிக்கணும். நமக்காகப் பயல் எதுவேணு மானுலும் செய்வான்போல இருக்குது....பத்தா யிரம் கடனுத்தரமாட்டான்?

தங்கமணி : தடிப்பயலே! அவனுக்கே திருமதிபூவை யைக் கட்டிவைச்சிபுடுவே போலிருக்குதே!

மாரிசாமி : அடமண்டு! அவனுக்குத்தான் அவளைப் பிடிக்கவே இல்லையே! பயல் கொஞ்சம் கிறுக்கா இருப்பான்போல இருக்குது! அதுதான் தனக்கும் பிடிச்சிப் பொண்ணுக்கும் பிடிச்சாதான் கட்டிக் கிறதுன்னு சொல்லுருன்...முட்டாளோ முட்டாள்! ஏய் தங்கமணி! இங்கே உன் காதைக் கொஞ்சம் கொடேன். (ரகசியமாகப் பேசிக் கொள்ளுகிருர் கள்) எப்படி நம்ம மூளை!

தங்கமணி : ஆகா! ஆகா! ஆட்டுமூளை கெட்டதுபோ! அப்படி ருசிக்குது! நான் திடீர் பணக்காரனுகி புட்டேன்னு சொல்லு!

மாரிசாமி : எதுக்கும் அவன் கையெழுத்தை வாங்கி வைப்போம். அப்படியே பொண்ணு போயிட் டாலும் சொத்தாவது வந்துசேரும்.

தங்கமணி : எலே! எலே! அப்படியெல்லாம் சொல் லாதேடா மாரி! என் மனசு எப்படி படாக்.... படாக்குன்னு அடிச்சிக்குது தெரியுமா! உன் காதைக் கழற்றிக்கொடேன்! என் மார்பிலே வைச்சிக் காட்டுறேன்!...ஆகா! ஆகா!...நாங்க

ரெண்டுபேரும் காரிலே போகுனும்டா...அடா!... அடா!...உலகமே அப்படியே சொக்கிப்புடும்டா!... சொக்கி!

மாரிசாமி : ஆமாம்! உலகம் சொக்குதான்னு பார்த்துக்கிட்டேதானே போவீங்க!

தங்கமணி : நான் என்கையை அப்படித்தூக்கி அவள் தோள்மேலே போட்டிருக்க, அவள் காரை இப்படி லாவகமா ஸ்யொய்ன்னு ஓட்டுவா பாருடா!...

மாரிசாமி : ஆமாம்! ஆமாம்! காரை ஓட்டுகிற அளவுக்கு உனக்கு ஏது தைரியம்!

தங்கமணி : போடா!...அழகானப் பொண்ணு பக்கத்திலே இருந்தா படுபயங்காளிப்பயலும் வீராதி வீரன், வில்லாதிவில்லனுமாறிபுடுவான்!தெரியுமா!

மாரிசாமி : அப்படியா?...நீ ஒண்ணேக் கட்டிக்க சீக்கிரம். அப்படியாவது கொஞ்சம் தைரியம் வரட்டுமே!

தங்கமணி : அந்தக் காலத்திலே தலைவன் புலியைக் கொல்லுவான்டா...

மாரிசாமி : ஏன்டா கொல்லுவான்?

தங்கமணி : அந்தப் புலிப்பல்லேப் பிடுங்கி எடுத்துத் தலைவி கழுத்திலே கட்ட!....இந்தக் காலத்திலே மட்டும் என்னடா? பயல் க்யூ வரிசையிலே நிற்பான் பாரு! 3 மணி நேரமா? 4 மணி நேரமா?

வெய்யலா? மழையா? பனியா? குளிரா? வியர்வையிலே சட்டை நனைந்ததா? இல்லை கிழிஞ்சே போச்சா?...இம்!...பொருள் படுத்த மாட்டான்....

மாரிசாமி: என்ன பின்னே செய்வான்?

தங்கமணி: ரெண்டு சினிமா டிக்கட்டை எடுத்துக் கிட்டுவந்து காதலி கையிலே திணிப்பான் பாரு! ...ஆகா!...ஆகா!...புலிப்பல்லைக்கண்டு அந்தக் காலத்துத்தலைவி அவ்வளவு ஆனந்தப் பட்டிருக் கவே மாட்டாள்.....சும்மாவா? படம் ரிலீசாகி முதல் நாள்! முதல் காட்சி!...அபிமான நட்சத் திரங்கள் அத்தனைபேரும் அங்கே திரையிலே!

மாரிசாமி: உனக்குச் சிரிப்பு சிரிப்பா கூடப் பேசத் தெரியுதேடா!

தங்கமணி: சிரிப்பா! யார் கண்டது!...அவ்வளவும் மனப்பாடம்!......எலே மாரி! குளிருக்கு இந்த ட்ரஸ் அடக்கமாதான்டா இருக்குது.

மாரிசாமி: உன் உருவத்துக்கு இந்த ட்ரஸ் பொருத்த மென்றால் பொருத்தம். வெத்தலைப். பாக்குக்கும் காவிப்பல்லுக்கும் உள்ள பொருத்தம்!... பொமு ஞட்டிகளே பார்த்தாலும் சொக்கியே போயிடு வாங்க!

தங்கமணி: பொமுஞட்டி சொக்கி என்னசெய்யிறது? ஆம்பளை சொக்கதான்டா அழகுவேணும்! பொமு ஞட்டி சொக்க நகைபோதும்!

மாரிசாமி: வா! வா! இந்த ட்ரஸிலே நிக்காதே!... ஏதேனும் வம்புவந்து சேரப்போவுது!

திரை.

திரை 9

மாரனுடைய அலுவலகம். மாரன் சூரியனிடம் பேசிக்கொண்டிருக்கிறன்.

மாரன் : இப்படித் திடீர் திடீர் தம்பிதங்கை வந்தால் இன்பமாகத்தான் இருக்குது. அதிலேயும் நல்லா தளதளன்னு வளர்ந்த அழகான பொண்ணுப் பிள்ளைகள் திடீரென்று 'அண்ணு'ன்னு ஓடிவந்தால் சொல்லவே வேண்டாம்!

சூரியன் : திடீர் தம்பிதங்கை வந்தால் நன்ருகத்தான் இருக்கும்! ஆனுல் ஒண்ணு தம்பி...

மாரன் : என்னடாப்பா?

சூரியன் : தம்பி சொத்திலே பங்கோ, தங்கை கலியாணம் செய்துகொள்ள பணமோ கேட்கக்கூடாது. அவ்வளவுதான். அதுவும் வரதட்சணையோடதான் கட்டிக்கொடுக்கணும் என்றநிலை வந்துபோச்சி, தங்கச்சி உடனே பேயா போச்சி! நாம நாயா போனேம்!

மாரன் : அப்பா நகைச்சுவை ஆதவரே! நகைச்சுவை ஆளைக்கொல்லுது!

சூரியன் : (பெரிய மனிதன்போல்) எனக்கு வேலைக்காரன் வேலை பிடிக்கவேயில்லை மிஸ்டர் மாரன்

எப்படியாவது கட்சிக்காரனுகவே இருந்துவிடு வதா முடிவுக்கு வந்துவிட்டேன்!

மாரன் : இனி நாம் வேண்டாமென்ருலும் நம்மால் வாழுகிற பயல்கள் நம்மை விடமாட்டார்கள்!

சூரியன் : கட்சிவாழ்வு மட்டுந்தான் படிப்பு, சொத்து, சுதந்திரமென்று பாராமல் உண்மையான அறிவுக்குத் திறமைக்கு மதிப்பு கொடுப்பது.

மாரன் : அடேயப்பா! உனக்கும் மதிப்புக் கொடுக்கிருர்களே! சொல்லமாட்டாயா!

சூரியன் : நகைச்சுவையாலேயே மக்களைத் திருத்தக் கூடியவன் இந்த நாட்டில் ஒருத்தனும் இல்லே! இந்தப் பணிக்காகவே என் வாழ்நாளே மக்களுக்கு அர்ப்பணிக்கப் போகிறேன்!

மாரன் : டே!டே!...டேய்! என்னுக்கிடேயே உன் பிரச்சாரத்தை ஆரம்பித்துவிட்டாயே! அப்பா! உன் தொகுதியில் எனக்கு ஓட்டில்லேயப்பா! ஓட்டில்லே!......அதுசரி! நான் 10, 12 இரண்டு தொகுதிக்கும் நாமினேஷன் கொடுத்திருக்கேனே. ஒன்றை இன்றைக்குள் வித்திரா பண்ணிக் கொள்ளனுமே. எந்தத் தொகுதியிலே நமக்கு அதிகச் சப்போர்ட் இருக்கும் போலிருக்கிறது?

சூரியன் : 12-ம் நெம்பர் தொகுதிகு அணுண்டு பிரதிநிதி, காமன் மலர்களைக் காதலர்கள்மேல் கணையாகத் தொடுப்பானுமே, அப்படிப் பணத்தை

அம்பாக்கி ஓட்டர்கள்மேல் பொழிகிறார். பெண் ஓட்டு ஒவ்வொன்றுக்கும் ஒரு நைலான் புடவையும், ஆண் ஓட்டு ஒவ்வொன்றுக்கும் ஒரு டெரிலின் சட்டையும் கொடுக்கிறார்.

மாரன் : அப்போ அங்கே நமக்கு நம்பிக்கைக்கு வழியேயில்லை என்று சொல்.

சூரியன் : 10-ம் நெம்பர் தொகுதி பிரதிநிதி ஆண் ஓட்டு ஒவ்வொன்றுக்கும் ஒரு சினிமா டிக்கெட்டும் ஒரு சிகரேட்டின்னும், பெண் ஓட்டு ஒவ்வொன்றுக்கும் ஒரு செப்புக்குடமும் ஒரு பவுடர் டின்னும் கொடுக்கிறார். (காலிங்பெல் ஒலிக்கிறது.)

மாரன் : ஓடு! ஓடு! அதுயார் பார்!

(சூரியன் போகிறான். மாரன் உடைகளைச் சரிசெய்து கொள்ளுகிறான். சூரியன் மாரிசாமியுடன் திரும்பிவருகிறான். மாரன் எழுந்து ஓடி மாரிசாமியைக் கட்டி அணைத்துக்கொள்ளுகிறான்)

மாரன் : வாடா தம்பி! வா! எவ்வளவு வேலையைப் போட்டுவிட்டு உனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறேன் தெரியுமா!...இப்படி உட்காருடா!

சூரியன் : இவர்தான் உங்கள் தம்பியா மிஸ்டர் மாரன்?

மாரன் : ஆமாம்! மிஸ்டர் சூரியன்.

சூரியன் : ரொம்ப அழகா இருக்காரே!

மாரன் : அதுதான் நான் சொல்லவில்லை? எங்கள் அப்பாவை அப்படியே உரிஉரியென்று உரித்துக் கொண்டு வந்திருக்கிருன். ஆமானடா பயலே? மிஸ்டர் சூரியன்! இந்த அடபுடா போட்டுப்பேச எனக்கு எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது தெரியுமா? அதுசரி!.... தங்கம் எங்கேடா சாமி?

மாரிசாமி : அவள்ரொம்ப கவலையா இருக்கிருள்.

மாரன் : அவளுக்கு என்மேல் கோபமா தம்பி?

மாரிசாமி : ஆமாம்!

மாரன் : நான் என்னடா செய்வேன்? அந்தப் பெண்ணை எனக்குப் பிடிக்கவே இல்லையே! மேலும்.....

சூரியன் : தம்பிக்கு இப்போ தேவை பத்தாயிரம் தானே? கொடுத்துவிடுங்களேன் மிஸ்டர் மாரன்.

மாரன் : (மெள்ள) அட படுபாவி! (உரக்க) இப்போது பத்தாயிரத்தை எப்படிப் புறட்டுவது?....இதோ பார் தம்பி! நான் எனக்கென்று ஒன்றுமே வைத்துக்கொள்ளுவதில்லை. எல்லாம் கட்சிக்குத்தான். கையிலே இருந்த பணத்தையெல்லாம் தேர்தல் வேலைக்குப் பயன் படுத்திவிட்டேன்.

மாரிசாமி : எப்படியாவது புறட்டுங்களண்ணு! கலியாணம் ஆனவுடனே திருப்பி வாங்கிக்கலாம். உங்க கடிதத்தைக் கண்டதும் அப்பா அம்மா

கிட்டே கோபிச்சிக்கிட்டு ஓடிவந்தோம். இனி எந்த முகத்தோடு திரும்பிப் பம்பாய் போவது?

மாரன் : அதுசரி! பத்தாயிரமும் தருகிறேன் என்று வைத்துக்கொள். மாப்பிள்ளையாக யாரைப் பிடிப்பது?

மாரிசாமி : நீங்கள்தான் கொஞ்சம் நடிக்கணும்.

மாரன் : அய்யோ! நானு? நடிக்கிறதா?

மாரிசாமி : (கெஞ்சலாக) ஆமாண்ணு! தயவு பண்ணுங்கண்ணு! தங்கம் கலியாணம் முடிகிறவரை தானே பின்னால பூவையை எனக்குப் பிடிக்கவில்லைன்னு சொல்லிவிடுங்களேன். அண்ணு! அண்ணு! தயவுபண்ணுங்கண்ணு!

மாரன் : அய்யோ பாவம்! அந்தப் பொண்ணு மனசு உடைஞ்சிப்போயிடுமடா!

சூரியன் : நம்மநாட்டுப் பொண்ணுதானே! இருபதுக்குமேல் வயசு ஆயிட்டுதுல்ல! இனிதான் உடையப்போவுதா? எப்போவே உடைஞ்சிருக்குமே!

மாரிசாமி : என்ன அண்ணு! ஒருதங்கைக்காக இதைக்கூட நீங்கள் செய்யக்கூடாதா? முடியாதுன்னு ஒரே வார்த்தையிலே சொல்லிபுடுங்க. வருஷா வருஷம் கடல் எத்தனையோ பேரைச் சாப்பிடுது. எங்கள் ரெண்டுபேரை மட்டுமா 'வேண்டாம்! வயிறு கொள்ளாது'ன்னு சொல்லிவிடும்! (கண்களைத் துடைத்துக் கொள்ளுகிறான்)

சூரியன் : மிஸ்டர் சாமி! இப்படி வாங்களேன் (ரகசியமாக) அவர் மனசு பாசத்துக்கும் மோசத்துக்கும் நடுவிலே சிக்கித் தவியா தவிக்குது. நீங்கள் இப்படியே கடைத்தெருப்பக்கம்போய் கொஞ்சம் சுத்திவிட்டு வாங்க. நான் எல்லாத்தையும் சரி பண்ணிவைக்கிறேன்.......ஏதோ கோபித்துக் கொண்டு போவதுபோல போங்க!

(மாரி அப்படியே விருட்டென்று போகிறுன்)

மாரன் : (கோபமாக, சூரியனிடம்) ஏன்டா தடிப் பயலே! அப்படியே பத்தாயிரத்தையும் எண்ணி வைப்பவன்போல் சொன்னியே! இப்போ பணத்திற்கு என்ன பண்ணுவது? கலியாணநிதி என்று ஒன்று வசூலித்தால்தான்!

சூரியன் : ஆமாம் தம்பி! நல்ல ஐடியா! அப்படி ஒரு பழக்கத்தை உண்டுபண்ணி விடுவோமே! கலியாணம் செய்துகொள்ளவென்றே கன்னியரும் காளையரும் கட்சியில் கணக்கு வழக்கில்லாமல் சேருவாங்க!

மாரன் : பிறகு கட்சியில் காதல், கலியாணம், கலகம், அடிதடி — இதைத் தவிர ஒன்றுமே இருக்காது!

சூரியன் : எந்தக் கட்சியிலேதான் கலகம், அடிதடி இல்லே!...காதலுக்குன்னு நம்ம நாட்டுக்கு ஒரு இன்ஸ்டிடுஷன் வேணும் தம்பி! இ[illegible] வேணும்! இல்லே, காதல் என்[illegible] நாவல், நாடகம், திரைப்ப[illegible]ம், ஆண் பெண்[illegible]

ஏக்கப் பெருமூச்சி — இத்தோடு போயிடும். ...(பெருமையாக) எப்படித்தம்பி? நான் பேசக் கத்துக்கிறேன்!

மாரன் : அப்பா! ஆதவரே! உன் அறிவொளி என் கண்ணைக் குத்துதப்பா! குத்துது! கொஞ்சம் மறைச்சியே வைச்சிக்கே! (காலிங்பெல் ஒலிக்கிறது) டேய்! டேய்! எவன்டா வருவது? ஓடு! ஓடு!

(சூரியன் ஓடி பதற்றத்துடன் ஓடிவருகிறான்)

சூரியன் : அய்யய்யோ! 10-ம் தொகுதி அணுகுண்டு பிரதிநிதி வருகிறார்.

மாரன் : (துடித்து) அய்யோ! தொலைஞ்சோம்! நேத்து கூட்டத்தில் வாயில் வந்தபடியெல்லாம் ஏசினேனே! உதைக்கத்தான் வருகிறானோ என்னவோ? அடபாவமே! நமக்கு எங்கேடா நல்லா பேசவருது? கன்னுபின்னுன்னு ஏசதானே வருது!

(பிரதிநிதி நெ. 10. வருகிறார்)

மாரன் : (நடுக்கத்துடன்) வாங்க! (கும்பிட்டு) வணக்கம்!

பிரதிநிதி : நெ. 10 :— (குறுக்கிட்டு) வணக்கம்!

மாரன் : அப்படி உட்காரலாமா?

பிரதிநிதி : நெ! 10 :- (உட்கார்ந்து) நீங்கள் 10-ம் தொகுதியிலும், 12-ம் தொகுதியிலும் நிற்கிறீர்

களே. எதையாவது ஒன்றை வித்திரா பண்ணிக்கொள்ள இன்று கடைசிநாள். 10-ம் தொகுதியிலிருந்து விலகிக்கொண்டால் நான் உங்களுக்கு மிகவும் கடமை பட்டவனுக இருப்பேன்.

மாரன் : (நடுக்கம் அடங்காமல்) கடன் பட்டவராகவா? ஏது கடன்?

பிரதிநிதி நெ. 10 :- ஆமாம்! அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன்.

சூரியன் : எவ்வளவோ?

பிரதிநிதி நெ. 10 :- சுமார் 5, 6 ஆயிரம் என்று வைத்துக் கொள்ளுங்களேன். (காலிங்பெல் ஒலிக்கிறது)

மாரன் : மிஸ்டர் சூரியர்! அதுயார் பார்! (சூரியன் போனதும், பிரதிநிதியிடம்) எனக்கு இன்னும் அதிகமாக வேண்டியிருக்குதே!

பிரதிநிதி நெ. 10 :- அப்படி நீங்கள் சொல்லக் கூடாது.

(சூரியன் ஒரு பெரிய மனிதருடன் வருகிருன். வந்தவர் பிரதிநிதி நெ. 10-ஐப் பார்த்துத் திடுக்கிடுகிருர். இருவரும் வந்தவரைப் பார்த்துத் திடுக்கிடுகிருர்கள்!)

சூரியன் : மிஸ்டர் மச்சான்! இவர்கள்தான் 12-ம் நெம்பர் தொகுதியில் உங்களை எதிர்த்து நிற்கும் அணுகுண்டு பிரதிநிதி.

மாரன் : ஓ! அப்படியா! (கும்பிட்டு) வணக்கம் அணுகுண்டு போலவே இக்கிறீர்களே!

பிரதிநிதி : நெ. 12:- இகி...கி...(கும்பிட்டு)வணக்கம்.

மாரன் உட்காருங்கள்! (உட்காருகிருர்) நான் 10-ம் நெம்பர் தொகுதியிலிருந்து விலகிக் கொள்ளுவதாஞல் இவர்கள் ஆறு ஆயிரம்ரூபாய் தருவதாகச் சொல்லுகிருர்கள்.

பிரதிநிதி நெ. 12:- (கோபமாக) அப்படியா? நீங்கள் 12-ம் நெ. தொகுதியிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்! நான் ஏழாயிரம் ரூபாய் தருகிறேன்.

பிரதிநிதி நெ. 10:- (கோபமாக) நான் 8 ஆயிரம்!

பிரதிநிதி நெ. 12:- நான் 8,500!

பிரதிநிதி நெ. 10:- நான் 9,000!

பிரதிநிதி நெ. 12:- நான் 9,500!

பிரதிநிதி நெ. 10:- சரி! ஆனது ஆகட்டும் நான் பத்தாயிரம்!

(பிரதிநிதி நெ. 12. கோபத்தில் முணுமுணுக்கிருர்)

சூரியன் : (பிரதிநிதி நெ. 12-ஐப் பார்த்து) நீங்கள்? (அமைதி) ஒருதரம்!......இம்...இரண்டு தரம்!..... சரி...மூணு தரம்!

பிரதிநிதி நெ. *10:-* (பையிலிருந்து நோட்டுக் கத்தைகளை எடுத்துப்போட்டு) இதோ இதில் பத்தாயிரமும் இருக்கிறது. (ஒரு தாளை நீட்டி) இதில் ஒரு கையெழுத்து போடுங்கள். வித்ராவல் பாரம்.

(மாரன் கையெழுத்துப் போடுகிருன். சூரியன் பணத்தை எடுத்துவைக்கிருன்)

பிரதிநிதி நெ. 12:- (கோபத்துடன் எழுந்து) பத்தாயிரமா! பத்தாயிரம்! வாங்க! கூட்டத்திலே மானத்தை வாங்கிவிடுகிறேன். (விருட்டென்று போகிருர்)

மாரன் : (கையெழுத்திட்ட தாளை நீட்டி) இந்தாங்க! ....என்ன மிஸ்டர் சூரியன்! அணுகுண்டு வெடித்துக்கொண்டே போகிறது!

பிரதிநிதி நெ. *10:-* (எழுந்து) வணக்கம் ஏகப்பட்ட வேலை இருக்கிறது.

மாரன் : வணக்கம்! (கேலியாக) பழமை வாழ்க! (பிரதிநிதிபோகிருர்) போங்க! இந்தப் பத்தாயிரத்தையும் சம்பாதிக்க என்ன என்ன அநியாயத்தைச் செய்ய திட்டம் போட்டிருக்கிருயோ!

(மாரிசாமி கோபத்துடன் வருகிருன்.)

மாரன் : எலே! என்னடா பயலே இப்படிக் கோபித்துக்கொண்டு போய்விட்டாய்? சரி! சரி! உங்கள் விருப்பப்படியே செய்யுங்கள்! நான் இப்போ தேர்தல் பிரச்சாரத்திற்குப் போகிறேன். மூன்ரும்

தேதிதான் திரும்புவோம். அன்று இரவே தங்கத்துத் திருமணத்தை வைத்துக் கொள்ளுவோம். சரிதானே?

மாரிசாமி : சரிதான்.

மாரன் : என்ன செய்வது? நானே நடித்துத் தொலேக்கிறேன்! நல்லபெருமாளிடம் சொல்லி எல்லாவற்றிற்கும் ஏற்பாடு செய்! சரி! சரி! நீபோ! அங்கே தங்கம் தனியாக இருப்பாள். அவளேக் கண்கலங்காமல் பார்த்துக்கொள்.

மாரிசாமி : சரிண்ணு! (போகிருன்)

மாரன் : அதுசரி சூரியன்! 12-ம் நெம்பர் தொகுதியிலேதானே நைலானும், ட்டெர்லினும் தருவதாகச் சொன்னே!

சூரியன் : ஆமாம்! உங்களுக்கு அங்கே ஓட்டு இருக்கிறதா?

மாரன் : ச்சே!...அடபடுபாவி! அந்தத்தொகுதி நாமினேஷனேயல்லவாடா நாம்வித்திரு பண்ணியிருக்க வேண்டும்!...முட்டாள் பயல்டா! முட்டாள் பயல்!

சூரியன் : யாரு சின்ன தம்பி?

மாரன் : நாம் ரெண்டுபேருந்தான்.

சூரியன் : (மெள்ள) அதுதானே கேட்டேன்.
(கார் ட்ரைவர் ஒருவன் வருகிருன்)

ட்ரைவர் : கார் வந்துவிட்டது மச்சான். கூட்டம் நாலுமணிக்கு. இப்பவே கிளம்பினுல்தான் ஏழு, எட்டு மணிக்காவது போய்ச் சேரலாம்.

சூரியன் : ஆமாம் சின்ன தம்பி! கூட்டத்தைப் பத்து மணிக்காவது ஆரம்பித்து விடவேண்டும்.

மாரன் : இந்தப் பசங்களுக்குத்தான் வேறுவேலேயோ மானமோ, ரோசமோ கிடையாதேடா!...எத்தனை மணியானுலும் காத்துக்கொண்டு கிடப்பானுவோ! நீ ஏன் பறக்கிறே!...சரி! அந்தப் பத்திரிகை, புத்தகத்தையெல்லாம் எடுத்து வச்சியா? நான் பரிட்சைக்குக்கூட இப்படிப் படித்ததில்லே.

சூரியன் : எடுத்து வச்சாச்சி.

மாரன் : சரி! கிளம்பு! (போகிருர்கள்)

திரை.

திரை 10

தேர்தல் கூட்டம். எங்கும் கட்சிவிளம்பரங்கள் நிறைந்திருக்கின்றன. மாரன் தலைமை வகிக்க சூரியன் ஆவேசமாகப் பேசிக்கொண்டிருக்கிருன்.

சூரியன் : ....மானம் பொழிகிறது. பூமி விளைகிறது. ஏன் வரி? ஏன் வட்டி? என்று கேட்கிறேன். வரி வாங்குவதால் நாட்டுக்கு என்ன பயன்? சொல்லட்டும்! வரிபோடாத நாடே உலகத்தில் இல்லையா! இருக்கிறது. நான் என் ரெண்டு கண்ணுலும் பத்திரிகையில் பார்த்தேன். அந்த நாடு... அந்த நாடு...

மாரன் : அரேபியாவில் ஒரு நாடு.

சூரியன் : நன்றி!......ஆம் தோழர்களே! அரேபியா என்றுகூட ஒரு நாடு. அங்கே வரியே இல்லை. வரிபோடாததால் யாரும் அங்கே செத்துப்போகவில்லை. வேட்டி, பொடவை கட்டிக்கொள்ளாமல் இல்லை. (ஆவேசமாக) இந்தநாட்டுக்கு ஒரு கட்டபொம்மன் உடனே வேணும். நீங்கள் மனம் வைத்தால் நானேசட்டசபைக் கட்டபொம்மனுகத் தயார்! தயார்! தூக்குக் கயிற்றுக்கு அஞ்சிய கோழையல்ல நான். நான் சட்டி, பானை கழுவியவன். துணி துவைச்சவன். கூழு குடிச்சவன்.

பழஞ்சோறு, கிழிந்த சட்டை, எண்ணெயைக் காணுத தலை — இவற்றையெல்லாம் கண்டவன். அதனுல் இவற்றையெல்லாம் சட்டசபையில் எல்லோருக்கும் கத்துக்கொடுப்பேன் என்று சொல்லவில்லை....இதோ இந்தத் தேர்தலிலே என்னை எதிர்த்து நிற்கிருரே அவருக்கு இவையெல்லாம் தெரியுமா? மாடியிலே உறங்கி, பன்னீரிலே குளிச்சி, காரிலே பவனிவருகிறவர் அவர். அவருக்கு நீங்கள் ஏன் ஓட்டுபோட வேண்டும்? அவருக்கு என்ன குறை? ஏன் இப்படி மேலே மேலே பேராசை பிடிச்சி அலைகிருர்? நான் ஒன்றுமில்லாதவன். நான் சட்டசபைக்குப் போவதிலே ஞாயம் இருக்கிறது. நீதி இருக்கிறது. இப்படி ஏழைகளையே பார்த்துத் தேர்ந்தெடுத்தால் ஒரு பத்து இருபது வருஷத்திலே ஏழையே நாட்டிலே இருக்கமாட்டான். நாடு செழிக்கும். (ஆவேசமாக) என்னை எதிர்த்து நிற்கிருரே படுபாவி, அவர் யோக்கிதையைச் சொன்னுல் நாடுசிரிக்கும். அவர் சின்னவயசிலே விளையாடிய விளையாட்டுகள் ஏராளம்! ஏராளம்! சொன்னுல் கேவலம் சொல்லாவிட்டாலோ பாவம்! ஒருமுறை வாத்தியாரம்மா கொண்டை ஊசியைத் திருடிவிட்டு உதைவாங்கியவர் இவர்! இதற்கெல்லாம் என்னிடம் ஆதாரங்கள், புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. அதுமட்டுமா? (ஏளனமாக) கேவலம்! உலகம் சிரிக்கிறது! அய்யா பெரியவர்களே! இதைக் கேளுங்கள்! போனவருஷம் தைமாதம் ஆரும் தேதி அவர் வீட்டிலே மேளம் கும்மாளம் போட்

டதே! ஏன்? ஏன்?...மனிதர் மூன்றும் தாரமாக ஒரு இளம் கன்னியை, பருவப் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ள. ரெண்டு மனைவிகளைக் கொன்றது போதாதென்று மூன்ருவது மனைவி கையைப் பிடித்திருக்கிருர் எமதூதர். அவருக்கா நீங்கள் ஓட்டுபோடப் போகிறீர்கள்? மனைவி இறந்து விட்டால் அவளை மறந்துவிட வேண்டுமா? அப்படிப்பட்டவர் நீங்கள் ஓட்டு போட்டதும் உங்களை மறக்காமல் இருப்பாரா? மனைவி செத்தால் பிழைக்கமாட்டாள். ஓட்டர்கள் செத்தால் ஐந்து வருஷத்திற்கு ஒருநாள் பிழைத்துக்கொள்ளுவார்கள். அவ்வளவுதான்! (சோடா குடித்து) அவர் தேர்தலில் நிற்க யோக்கிதையுள்ளவர்தானு? நான் சவால்விட்டுக் கேட்கிறேன் (என்ன பேசுவதென்று தெரியாமல்) கேவலம்! கேவலம்! அநியாயம்! அக்கிரமம்! ஆம்! கேவலம்! நாடு அழிந்து போகிறது! நாடு அழிந்துபோகுது!

மாரன் : (குறுக்கிட்டு) சரி! நாழியாகிவிட்டது. அடுத்தக் கூட்டத்திற்குப் போகவேண்டும்.

சூரியன் : ஆமாம்! தோழர்களே! நான் அடுத்தக் கூட்டத்துக்குப் போகவேண்டும்......உங்களுக்குப் பாடுபடவென்றே நான்பிறந்திருக்கிறேன். உடனே நீங்கள் ஒவ்வொருத்தரும் ஒருசின்ன தாளில் உங்கள் பெயரையும் உங்களுக்கு வேண்டிய பொருள்களையும் சௌகரியங்களையும் எழுதிக்கொடுங்கள்! (கூட்டத்தில் பரபரப்பு ஏற்படுகிறது. எல்லோரும்

முண்டியடித்துக்கொண்டு எழுதிய சீட்டுகளைச் சூரியனிடம் கொடுத்து கும்பிடுகிருர்கள். மாரன் வேதனையில் முகம் சுளிக்கிருன்)

மாரன் : (வேதனையுடன்) அமைதி! அமைதி!

சூரியன் : ஆம்! நேரமாகிவிட்டது. மற்றவங்க தபாலில் அனுப்பி வையுங்கள்! நான் இவைகளையெல்லாம் பத்திரப்படுத்தி வைக்கிறேன். (உரக்க) நான் மந்திரியாக வந்தால் உங்கள் ஆசைகளை நிறைவேற்றுவதுதான் என்கடமை! உயிர்! உடல்! பொருள்! ஆவி! எல்லாம்! (உரக்க) பழமை!

மக்கள் : வாழ்க!

சூரியன் : நான்!

மக்கள் : வாழ்க!

சூரியன் : சட்டசபைக் கட்டபொம்மன்!

மக்கள் : வாழ்க!

சூரியன் : உங்கள் ஓட்டு!

மக்கள் : தங்களுக்கே!

சூரியன் : உங்கள் ஓட்டு!

மக்கள் : தங்களுக்கே!

சூரியன் : உங்கள் ஓட்டு!

மக்கள் : தங்களுக்கே!

(கூச்சலுக்கிடையே)

திரை.

திரை 11

பூவையின் வீட்டுக்கூடம். நல்லபெருமாளும் தங்கமணியும், மணமகன் மணமகள் கோலத்தில் இருக்கிறார்கள். பூவை, மாரன், மற்றும் இரண்டு மூன்று பெரியவர்கள் இருக்கிறார்கள்.

நல்லபெருமாள் பணத்தை எண்ணிக் கொண்டிருக்கிறார்.

நல்லபெருமாள் : (எண்ணி முடிந்ததும்) சரியா பத்தாயிரம் இருக்கிறது பெரிய மாப்பிள்ளை (பத்திரத்தை நீட்டி) இகி...கி...இதிலே ஒரு கையெழுத்துப் போடேன்! அம்மாபூ! வாம்மா! நீயும்ஒரு கையெழுத்து போடு!

(இருவரும் கையெழுத்து போடுகிறார்கள். மாரிசாமி ஓடிவருகிறான்.)

மாரிசாமி : மாமா! காசிக்கு டிக்கெட்டு எடுத்து விட்டேன். ரயிலடிக்குப்போகக் கார் தயாராக இருக்கிறது!

நல்லபெருமாள் : இகி...கி....இதோ நான் பத்திரத்தைக் கையிலேதான் வச்சிருக்கேன்.

மாரன் : (தங்கமணியிடம்)பின்ன என்னம்மா? (மாலை ஒன்றைக் கொடுத்து) இந்தாம்மா! மாமாவுக்குப்

போடு! (நல்லபெருமாளிடம் ஒரு மாலையைக் கொடுத்து) இந்தாங்க மாமா! போடுங்க! அடடா! வெட்கப்படாதீங்க மாமா!

நல்லபெருமாள் : இகி...கி...வெக்கமா இருக்குது மாப் பிள்ளை!

மாரன் : அடடா! நீதான் முதலிலே போடேன் தங்கம்!

பெரியவர்கள் : சரி! சரி! ரெண்டுபேரும் ஒரு நேரத் திலே போடுங்க!

(இருவரும் மாலை மாற்றிக்கொள்ள மற்றவர் கள் மலர்களைத் தூவுகிறார்கள்)

நல்லபெருமாள் : (பத்திரத்தைத் தங்கமணியிடம் கொடுத்து) இந்தாபொண்ணே! நிலம் வீடெல்லாம் உன் பேருக்கு எழுதிவச்சிப்புட்டேன்......சந்தோ ஷந்தானே?

தங்கமணி : (அதை வாங்கிக்கொண்டு) போங்க அத்தான்!

நல்லபெருமாள் : இகி...கி....அத்தானும் அத்தான்!

பெரியவர்கள் : (கும்பிட்டு) நாங்கள் விடைபெற்றுக் கொள்ளுகிறோம்.

நல்லபெருமாள் : சரி! இகி....கி....நாங்க தேன்நில வுக்குப்போயிட்டு உடனே திரும்பிப்புடுறோம். வீட்டைப் பாத்துக்கிங்க.

பெரியவர்கள் : அதற்கு என்ன? நீங்கபோய் வாங்க! (போகிறார்கள்)

மாரன் : என்னம்மா தங்கம்! இப்படி வெட்கப்படு றீயே! எங்கே! கொஞ்சம் சிரிச்சிக்கிட்டு இருக் கணும்! எலே சாமி! போய் ட்ரைவரை ரெடி பண்ணு! (அவன் போகிறான்)

நல்லபெருமாள் : பின்னே நாங்க போய்வருகிறோம் மாப்பிள்ளை!

மாரன் : தங்கத்தைப்பார்த்து இட்டுக்கொண்டுபோய் வாங்க! சின்ன வயசு, அதிகமா நடந்து மலையேற விடாதீங்க!

நல்லபெருமாள் : எனக்குத் தெரியாதா மாப்பிள்ளை! ...அம்மாபூ! வீட்டைப் பத்திரமா பாத்துக் கோம்மா.

பூவை : சரிப்பா!

(மாரிசாமி பதற்றத்துடன் ஓடிவருகிறான்)

மாரிசாமி : அய்யய்யோ! குடிகெட்டுது! போலீஸ்! போலீஸ் வருது!

தங்கமணி : அய்யோ! போலீசா?

மாரன் : போலீஸ்வந்தால் நமக்குஎன்னும்மா தங்கம்? ஏன் பயப்படுறே? அவர்களெல்லாம் எனக்கு வேண்டியவங்க. விருந்துக்கு வருவாங்க.

(சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் இரண்டு போலீஸ் காரர்களுடன் வருகிறார்)

இன்ஸ்பெக்டர் : குட் ஈவினிங் மிஸ்டர் மாரன்!

மாரன் : வெரிகுட் ஈவினிங்!

இன்ஸ்பெக்டர் : ஐயேம் வெரிசாரி! நான் ரொம்பவும் வருத்தப்படுகிறேன்.

மாரன் : உண்மை!...அதனால் இப்படிக் கலியாண நேரத்தில் வாய்விட்டுச் சொல்லக்கூடாதே சார்.

இன்ஸ்பெக்டர் : இங்கே யாரோ ஒரு ஆண்பிள்ளை, வேறு ஒரு ஆண்பிள்ளையைத் திருமணம் செய்து கொண்டதாகக் கேள்விப்பட்டேன்.

மாரன் : ச்சே! சே! ஆண்பிள்ளைக்கும் ஆண்பிள்ளைக்கும் திருமணமா? பெரியசீர்திருத்தமா இருக்குதே. ....என்னசார் விளையாடுறீங்க? அது பெரிய கிரிமினல் குற்றமாச்சே சார்!

இன்ஸ்பெக்டர் : ஆமாம்! அதற்குத் தண்டனை எவ்வளவு தெரியுமா! இருபது வருஷம் கடுங்காவல் ஜெயில், பதினைந்தாயிரம் அபராதம்.

தங்கமணி : (நடுநடுங்கி) அய்யய்யோ! மாரிசாமி! (மாரிசாமி ஓடி இன்ஸ்பெக்டர் காலில் விழுகிறான். தங்கமணியும் ஓடிவந்து விழுகிறான்.)

தங்கமணி :
மாரிசாமி : } சார்! சார்! எங்களை மன்னிச்சிப்புடுங்க.

சார்! நாங்க தெரியாத்தனமா செய்துபுட்டோம்! மன்னிச்சிப்புடுங்க சார்! சார்!....(இன்ஸ்பெக்டர்

தங்கமணி தலையில் கை வைக்க, டோப்பா கழன்று விழுகிறது. நல்லபெருமாள் நடுநடுங்கி போகிருர்.)

மாரன் : (பதற்றத்துடன்) அட படு கொடும்பாவி பசங்களா! என்னை ஏமாத்திப்புட்டீங்களே..... தம்பி தங்கையென்றதும் எவ்வளவு ஆனந்தமாக இருந்தேன்!

நல்லபெருமாள் : அய்யய்யோ! என்னை நல்லா ஏமாத்திபுட்டானுங்களே! அயோக்கியப் போக்கிரிப் பசங்களா!

இன்ஸ்பெக்டர் : 107! 108!

போலீஸ் : எஸ் சார்!

இன்ஸ்பெக்டர் : இந்த இரண்டு பசங்களையும் அரஸ்டு பண்ணுங்க! (நல்லபெருமாளிடம்) நீங்கள்தான் நல்லபெருமாளா?

நல்லபெருமாள் : ஆமாம் சார்! ஆமாம்!

இன்ஸ்பெக்டர் : நீங்கள் அனுபவிக்கிற வீடு நெலமெல்லாம் யாருது?

நல்லபெருமாள் : (தயங்கி) என்னுதுதான் சார்!

இன்ஸ்பெக்டர் : என்ன? ஏய் 107! 108!

போலீஸ்: எஸ் சார்!

இன்ஸ்பெக்டர் : யாருது உண்மையைச் சொல்லுங்க!

நல்லபெருமாள் : அய்யய்யோ! வேண்டாம் சார்! எல்லாம் என் அண்ணன் பங்கு. இப்போ அவரு மக பூவையிது. (பூவையைக் காட்டுகிறுர்)

இன்ஸ்பெக்டர் : அதுசரி! உங்கள் முதல் மனைவியைக் கொன்றது நீங்கள்தானே?

நல்லபெருமாள் : அய்யய்யோ! இல்லேசார்! (மாரனிடம்) தம்பி! என்னைக் காப்பாத்து தம்பி! எனக்கு வீடு நெலம் ஒண்ணுமே வேண்டாம்...நான் கெழவன்தானே...என்னு பண்ணப் போரேன்? இந்தா தம்பி உன் பணம் பத்தாயிரமும். பத்திரமா வச்சிக்கே.

பூவை : (ஓடிவந்து அழுது, மாரனிடம்) ஆமாங்க! எங்க சித்தப்பாவைக் காப்பாத்துங்க! அவர் என்ன தான் குற்றம் செய்தாலும் என்னை வளர்த்தவர்.

இன்ஸ்பெக்டர் : அந்தப் பெரிய குற்றத்தைவேறு செய்திருக்கிறுரா?

மாரன் : நான் என்ன செய்வது பூவை?

நல்லபெருமாள் : நீ பெரிய மனிதன். நீ எதைச் சொன்னுலும் போலீஸ் கேட்கும் தம்பி.

மாரன் : எப்படி மாமா கேட்கும்?

இன்ஸ்பெக்டர் : ஆம் மிஸ்டர் மாரன்! நீங்கள் சொல்லுவதை நாங்கள் கேட்போம்! நீதி அநீதியைப் பற்றிக் கவலைப்பட மாட்டோம்.

மாரன் : அடேயப்பா! பெரிய மனிதனுக்கு இவ்வளவு மதிப்பா?...அப்படியென்ருல் இவர்களை மன்னித்து விடுங்கள்! இனி இப்படிப்பட்ட குற்றத்தைச் செய்யவே மாட்டார்கள்.

இன்ஸ்பெக்டர் : சரி! நீங்கள் சொல்லுகிறீர்கள்! 108, 107! அவர்களை விடுங்கள்!

108, 107 :- எஸ் சார்!

நல்லபெருமாள் : என் மானம் மரியாதையெல்லாம் போச்சி!...விஷயம் தெரிந்தால் ஊரே கை கொட்டிச்சிரிக்குமே! இதைவிட தூக்கு மாட்டிக்கிட்டுச் சாகலாமே!

ட்ரைவர் : (ஒருவர் வந்து) ரயிலுக்கு நேரமாவுதுங்க. கார் ரெடி!

மாரன் : இதோ வருவார்கள் (ட்ரைவர் போகிருர்) எலே தங்கச்சி டோப்பாவை எடுத்து வைச்சிக் கட்டிக்கே.

இன்ஸ்பெக்டர் : ஏன் மிஸ்டர் மச்சான்?

மாரன் : மூன்று பேரும், வாங்கின டிக்கெட்டுகள் வீணுகாமல் காசிக்குப்போய், செய்த பாவம் தீர கங்கையிலே முழுகித் திரும்பி வரட்டும். வந்ததும் மாமா, 'பெண்டாட்டி கங்கையிலே மூழ்கிவிட்டது'ன்னு சொல்லிவிடலாம். பாவம்! அவர் மானம் போகாமல் இருக்கும்.

இன்ஸ்பெக்டர் : நல்லயோசனை மிஸ்டர் மச்சான்! எங்கள் பெயரும் கெடாமல் போய்விடும்.

மாரன் : ஏய் தம்பி மாரிசாமி! காரை அப்படியே கொல்லை வாயிற்படிக்குக் கொண்டுவரச்சொல். (அவன் போகிருன்) மாமா! தங்கச்சி தங்கமணி! வாங்க! காசிக்கு வழியனுப்பி வைக்கிறேன்!

(மூவரும் போகிருர்கள். ஒருபையன் இரண்டு மூன்று தினப்பத்திரிகைகளுடன் ஓடிவருகிருன்.)

இன்ஸ்பெக்டர் : (தொப்பியைக் கழற்றி)எலேபையா! உன்னைச் சாயங்காலமேதானே வாங்கிவரச் சொன்னேன்.

பையன் : தேர்தல் முடிவு வந்திருக்குது. அதனுலே பேப்பரே கிடைக்கிலே சின்னமச்சான்.

இன்ஸ்பெக்டர் : (போலீஸ் காரர்களிடம்) அப்பா! எஸ் சார்களா!

108,107 : எஸ் சார்!

இன்ஸ்பெக்டர் : நீங்கள் போகலாம் (அவர்கள் போகிருர்கள். முகத்தைத்துடைக்க, மீசை கையோடு வந்துவிடுகிறது)

பூவை : (அவரைப் பார்த்து) ஆ! மிஸ்டர் சூரியரா நீங்க!

சூரியன் : சாட்சாத் சூரியரேதான்! (தினத்தாள் ஒன்றை நீட்டி) மேடம்! பேப்பர் பார்க்கிறீர்களா? இந்தாங்க.

(அவள் அதை வாங்கிப் பார்த்து கோபமாக உள்ளே ஓடுகிருள். மாரன் வருகிருன். வெளியே வாழ்த்தொலி கேட்கிறது: சின்ன மச்சான்!—வாழ்க!, நகைச்சுவை ஆதவர்!—வாழ்க!, சட்ட சபைக்கட்டபொம்மன்!—வாழ்க!)

மாரன் : என்னடா, தேர்தல் முடிவா?

சூரியன் : ஆகா! ஆகா! ஆமாம் சின்னதம்பி! நான் வெற்றி! வெற்றி! மாபெரும் வெற்றி!

மாரன் : நீ வெற்றி பெருமலா? மூக்கறுந்த முத்தாயி கதை எழுதியவனுயிற்றே! நம்கதை என்னுச்சி? (பேப்பரைப் பார்த்துச் சோகமாக) வழக்கப்படி தானு?...எங்கே மேடம் பூவை? அவள் பேப்பர் பார்த்தாளா?

சூரியன் : (வருத்தமாக) பார்த்தார்கள்.

மாரன் : அடபாவமே! கதை இப்படி ட்ரேஜடியிலா போய் முடியனும்!......பூவை! பூவை! (உள்ளே போகிருன்)

திரை

திரை 12

பூவையின் தனியறை. பூவை கோப மாக இருக்கிருள். மாரன் அவளைச் சுற்றிச்சுற்றி வந்து பேசுகிருன்

மாரன்: பூ! பூ! பூ! நானுகத் தேர்தலில் தோற்க வில்லை பூ!

பூவை: என்னிடம் யாரும் பேசக்கூடாது.

மாரன்: பின்னே நீயாவது எல்லோரிடமும் பேசேன்.

பூவை: தேர்தலிலே தோற்றவர்கள் என்னிடம் பேசக்கூடாது! பேசக்கூடாது! முக்காலும் மூணு தரம் பேசக்கூடாது!

மாரன்: அதுதான் நான் காதலிலே வெற்றிபெற்று விட்டேனே! பூவை! பூவை!

பூவை: என்னை யாரும் பூவையென்று கூப்பிடக் கூடாது.

மாரன்: பேரை மாற்றி வச்சிக்கிட்டியா பூவை? தங்கமென்று கூப்பிடட்டுமா?

பூவை: (திடுக்கிட்டு) நான் பொல்லாத கோபக் காரி!

மாரன் : இல்லையென்று நான் சொல்லவில்லையே! பூ! பூ! இது என்ன பரிட்சையா? தோல்வியடைந்தால் என்மேல் குற்றம் சொல்ல. ஓட்டுப்போட்டவர்கள் மறந்துபோய் எதிர்கட்சிப் பெட்டியில் போட்டுவிட்டார்கள். நான் என்ன செய்வேன்? பூவை! அடுத்தத் தேர்தலில் கட்டாயம் வெற்றி பெற்று காட்டுகிறேன். நான் எப்போதும்ரெண்டாவது அட்டம்டில் பெயிலானதே இல்லை.

பூவை : வெற்றிபெற்று வாங்க, பிறகு என்பேரைச் சொல்லலாம்.

மாரன் : அதுவரை மிஸ்செஸ் மாரன் என்று கூப்பிடட்டுமா?

பூவை : (கோபமாக) மிஸ்டர்!

மாரன் : அய்யோ! இந்த ஐந்து வருஷத்திற்குள் உன் அழகு போயே போயிடுமே பூவை!

(மாரன்!—வாழ்க!, மதியூகி மச்சான்!—வாழ்க! என்ற கூச்சலுக்கிடையே சூரியன், ஐந்தாம் திரையில் வந்த பெண், பிரமுகர்கள் மற்றும் சிலர் மாலையுடன் வருகிறுர்கள்)

வந்தவர்கள் : வணக்கம் மச்சான்!

மாரன் : (அசடுவழிய) வணக்கம்! நீங்கள் வெற்றி பெற்றமைக்கு மகிழ்ச்சி!

ஒரு பிரமுகர் : உங்கள் திறமையைப் புகழ்ந்து உங்களை மேல்சபைக்குத் தேர்ந்தெடுத்திருக்கிறுர்கள்!

(மாலை போடுகிறுர்கள்)

மாரன் : (பெருமையாக) அப்படியா! மகிழ்ச்சி! (பூவையிடம்) பூவை! மேல்சபை மெம்பர் என்ருல் கீழ்சபை மெம்பரைவிட ரொம்பபெரியது! ஆமாம்! ரொம்ப ரொம்ப பெரியது! பெரிய பெரிய அறிவாளிகளாகப் பார்த்துத் தேர்ந்தெடுப்பது! என்னைக் கீழ்சபைக்குத் தேர்ந்தெடுக்காதது மா பெரும் தப்பு, முட்டாள்தனம் என்பதைக் காட்டதான் இப்படிச் செய்திருக்கிருர்கள்.....இப்போது மகிழ்ச்சிதானே?

பூவை : (நாணி) மகிழ்ச்சிதான்!

மாரன் : (ஒரு மாலையை நீட்டி) பின்னே எனக்கு ஒரு மாலை போடேன்....அவர்களெல்லாம் போட்டார்கள் பார்த்தியா?

(அதை வாங்கி அவனுக்குப் போடுகிருள். அவன் ஒரு மாலையை அவளுக்குப் போடுகிருன்.)

சூரியன் : பூவையம்மா இன்னமும் நம் கட்சியில் சேரவே இல்லையே! ஒரு ரூபாயை எடுங்க!

மாரன் : ஆமாம் பூவை! எங்கள் கட்சியில் நீயும் சேர்ந்துவிடேன்.

பூவை : உங்களுக்கு நேர் எதிர்கட்சி எது?

மாரன் : இனி சூரியன் ஆரம்பித்தால்தான் உண்டு.

பூவை : நான் அதில்தான் சேருவேன்.

மாரன் : ஏன்?

பூவை : கணவனுடைய எதிர்க்கட்சியில் இருந்தால் தான் மனைவிக்குப் பேர் புகழெல்லாம்.

மாரன் : புகழ்பெற அது ஒரு குறுக்குவழியா? சரி! உன் விருப்பம்!

(ஒரு பையன் ஓடிவருகிருன்)

பையன் : (மாரனிடம்) மச்சான்! உங்க அப்பா வருகிருர்கள்.

மாரன் : (நடுங்கி சூரியனிடம் ரகசியமாக) ஏய்! அப்பாவாம். (மெள்ள கூட்டத்தில் ஒளிந்து நிற்கிருன். மன்னுர்குடி அருணுசலம் கோபத்துடன் வருகிருர்)

அருணுசலம் : எங்கே அந்தப் பயல்?...இம்!...எங்கே போனுன்?...(மாரனை இழுத்துவந்து) வாடா! வா! என் காலிலே விழு! ஏண்டா நிற்கிறே? விழு! (பூவையிடம்) ஏனம்மா நீ மட்டும் நிற்கிறே?... விழு! நீ பணக்காரின்னு கேள்விபட்டேன். எவ்வளவுதான் அழகான அறிவானபொண்ணு இருந்தாலும் மாமனுர் காலிலே விழுந்துதான் ஆகனும் ...இம்.....விழுங்க! (இருவரும்அவரை வணங்குகிருர்கள்) நீங்கள் இப்படியே சந்தோஷமா ஆயிரங்காலம் வாழுங்க! ஆயிரம்காலம் வாழ்ந்தாலும் வாழுங்க! ரெண்டாயிரம் காலம் வாழ்ந்தாலும் வாழுங்க! ஆனல் மூணு கொழந்தைக்கு மேல் வேண்டாம். அதுக்குமேலே என்னுலே தூக்கி வச்சிக்கிட்டு இருக்க முடியாது. என்சந்ததியும் ஏழையாகக்கூடாது...எங்கே அந்தப் பயல் சூரியன்? பணமெல்லாம் பத்திரமா இருக்குதா?...

(சங்ககாலக்கட்சி!—கட்சிக்கெல்லாம் மூச்சி!

பழமை!—வாழ்க!

சட்டசபைக் கட்டபொம்மன்!—வாழ்க! வாழ்க!

மதியூகி மச்சான்!—வாழ்க!

மதியூகி மச்சான்!—வாழ்க!

என்ற கூச்சலுக்கிடையே)

திரை

முற்றும்